உதயன்
Uthayan - A lively National Tamil Daily
சுடர்: 30 கதிர்: 029 வள்ளுவர் ஆண்டு: 2045 மார்கழி 10, வியாழக்கிழமை 25.12.201

## நேற்றும் கட்சித் தாவல் அமோகம்

கொழும்பு, டிசெ. 25
ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவரும்நிலையில் கொழும்பு அரசியலில் தொடர்ந்தும் கட்சித் தாவல்கள் இடம்பெற்று வருகின்றன. ஆளுங் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள் இருவர் உட்பட 20 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பொது எதிரணிக்கு நேற்றுத் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

பக்.25

## யாழ். வந்தன வாக்குச் சீட்டுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 25
ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகள் யாழ். மாவட்டத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன. அவை யாழ். மாவட்டச் செயலகத்தில் பொலிஸ் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன.
ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. அதற்குரிய ஏற்பாடுகளைத் தேர்தல்கள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

பக்.25

## உள்ளூராட்சி நிர்வாகத்தில் கொழும்பு அரசு தலையீடு

யாழ்ப்பாணம், டிசெ. 25
வடக்கு மாகாணத்தின் உள்ளூராட்சி நிர்வாகத்திலும் கொழும்பு அரசு நேரடியான தலையீட்டை மேற்கொண்டுள்ளது. வடக்கு மாகாண உள்ளூராட்சிஅமைச்சரும், முதலமைச்சருமான விக்னேஸ்வரனுக்கே தெரியாமல், கொழும்பு அரசால் நேரடியான உதவித் திட்டங்கள் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் உள்ளூராட்சி மன்றங்களுக்குவழங்கப்பட்டுள்ளன.

பக்.02



# அடிதடி

## ஐ.தே.க. தலைமையகம் சிறிகொத்தாவில் நேற்றுப் பெரும் களேபரம்

கொழும்பு, டிசெ. 25
ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான சிறிகொத்தா முன்பாக அரசால் கொண்டு வந்து களமிறக்கப்பட்ட குண்டர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். உடனடியாக அதற்குப் பதிலளிக்கும் விதமாக ஐ.தே.கவினரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்தனர். அதையடுத்து இரு தரப்பினருக்கும் இடையே கடும் மோதல் உருவானது.
இரு தரப்பும் ஒருவருக்கு ஒருவர் தாக்குதல் மேற்கொண்டனர். போத்தல்கள், கற்கள், தடிகள் எனக் கையில் கிடைத்தவற்றைக் கொண்டு சரமாரியான தாக்குதல்களை மேற்கொண்டனர். மோதல் காரணமாக சிறிகொத்தா இரண்டு மணி நேரத்துக்கு மேல் கலவர பூமியாகக் காட்சியளித்தது. இந்தக் கலவரத்தினால் பலர் காயமடைந்ததுடன், கழிவு ஒயில் தாக்குதலுக்கும் உள்ளாகினர்.
ஐ.தே.கவின் ஐக்கிய நிபுணர்கள் சங்கம் சிறிகொத்தாவில் நேற்று மாநாடு ஏற்பாடு செய்திருந்தது. அதில் கட்சித் தலைவர் ரணில் மற்றும் பொது எதிரணி வேட்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். அப்போது, காலை 10.15 மணியளவில், தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியத்தின் அமைப்பாளர் வசந்த பண்டார தலைமையிலான குழுவினர், சிறிகொத்தா முன்பாக

பக்.25



'உதயன்' வாசகர்கள், விளம்பரதாரர்கள், அபிமானிகள் அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்.

## அதிகாரிகளை பரப்புரைக்கு பயன்படுத்தும் ஆளுநர்!

யாழ்ப்பாணம், டிசெ. 25
வடக்கு மாகாண ஆளுநர் அரச அதிகாரிகளை அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகின்றார் என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, எதிர்வரும் 2 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பரப்புரைக் கூட்டங்களுக்குரிய ஒழுங்குகளை அரச அதிகாரிகள் ஊடாக மேற்கொள்வதற்கு அவர் பணிப்புரை விடுத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
ஜனாதிபதித் தேர்தல் பரப்புரை தற்போது சூடுபிடித்துள்ளது.

பக்.25

## வடக்கு இராணுவத்தை குறைக்கவே மாட்டேன்

### ஜனாதிபதி மஹிந்த திட்டவட்டம்

கொழும்பு, டிசெ. 25
வடக்கிலுள்ள இராணுவத்தின் எண்ணிக்கையைப் பாதியாகக் கூடக் குறைக்க மாட்டேன். இராணுவத்தை வெளியேற்றி நாட்டைத் துண்டாட நினைப்பவர்களின் கனவு ஒரு போதும் பலிக்காது. – இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.
ருவன்வெல்லவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பக்.25

## வடக்கில் 75 சதவீத வாக்களிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 25
வடக்கில் நேற்றும், சுதந்திரமாகவும் – நீதியாகவும் தபால்மூல வாக்களிப்பு இடம்பெற்றுள்ளதுடன், இதுவரையில் 75 சதவீதத்துக்கு மேலான தபால் மூல வாக்களிப்பு

பக்.25

## ஐ.நாவுக்கு ஒத்துழைப்பு வழங்குவது கடமையே

### அதை மறுக்க முடியாது என்கிறார் ஐ.நா பொதுச் செயலாளரின் பேச்சாளர்

கொழும்பு, டிசெ. 25
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு, ஐ.நா. விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு மறுக்க முடியாது – என்று தெரிவித்துள்ளார் ஐ.நா. பொதுச் செயலாளரின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக்.
"ஐ.நாவுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது உறுப்பு நாடுகளின் கடமையாகும்" – என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் அறிக்கையில், போர்க் குற்ற விசாரணைக்கு ஒத்துழைக்க முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

பக்.25

## கட்டாயப்படுத்தி கையெழுத்து; துணைவேந்தருக்கு எதிராக முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 25
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெறுவதற்கு வாழ்த்துத் தெரிவிக்குமாறு, யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், துணைவேந்தர் செல்வி வசந்தி அரசரட்ணத்தால் கட்டாயப்படுத்தப்பட்டமை தொடர்பில், தேர்தல்கள் திணைக்களத்தில் நேற்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பக்.25

## மஹிந்த சிந்தனையில் தமிழருக்கு தீர்வில்லை

### சர்வதேச ஊடகம் கூறுகின்றது

கொழும்பு, டிசெ. 25
இனப்பிரச்சினைக்கானதீர்வுதொடர்பில் எந்தவொரு விடயத்தையும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் அறிக்கையில் உள்ளடக்கவில்லை. ஆனால் சர்வதேச விசாரணையை அனுமதிக்கப் போவதில்லை என்பதை தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நேற்றுமுன்தினம் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது. சிங்கள மொழியில் மாத்திரமே வெளியிடப்பட்ட அந்த விஞ்ஞாபனத்திலேயே மேற்படி விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.
விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுத்த எந்தவொரு

பக்.25

## தமிழ் கூட்டமைப்போ மௌனம் மு.கா. முடிவுக்கு அவசரம் ஏன்?

### கேள்வி எழுப்புகின்றார் ரவூப் ஹக்கீம்

கொழும்பு, டிசெ.25
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இதுவரையில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற முடிவை வெளியிடாதிருக்கையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டும் எதற்காக அவசரப்பட்டு முடிவை வெளியிடவேண்டும்? – இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம்.
ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் இதுவரை தனது

பக்.25

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

செய்திகள்

# வடக்கு உள்ளூராட்சியிலும் கொழும்பு அரசின் தலையீடு

## முதலமைச்சருக்குத் தெரியாமல் உதவிகள்

யாழ்ப்பாணம், டிசெ 25
வடக்கு மாகாணத்தின் உள்ளூராட்சி நிர்வாகத்திலும் கொழும்பு அரசு நேரடியான தலையீட்டை மேற்கொண்டுள்ளது. வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரும், முதலமைச்சருமான விக்னேஸ்வரனுக்கே தெரியாமல், கொழும்பு அரசினால் நேரடியான உதவித் திட்டங்கள் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

வடக்கிலுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கே இந்த உதவிகள் கடந்த வாரம் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு பிரதேச சபைகள், வவுனியா தெற்கு பிரதேச சபை, முசலி பிரதேச சபை ஆகியவற்றின் சபைத் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்கள் கொழும்புக்கு கடந்த வாரம் அழைக்கப்பட்டு இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் நேரடியாகவே இவை வழங்கப்பட்டுள்ளன. 'டபிள் கப்', ரிப்பர், உழவு இயந்திரம் என்பனவே இந்தச் சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரும், முதலமைச்சருமான க.வி.விக்னேஸ்வரனிடம் கேட்ட போது, இவ்வாறு உதவிகள் வழங்கப்பட்டமை தொடர்பில் எதுவும் தெரியாது என்று குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்றங்களின் சொத்தாக உதவிகள் வழங்கப்படும்போது, அந்தப் பிரதேச உள்ளூராட்சி அமைச்சருக்குத் தெரியப்படுத்தப்படவேண்டும் என் கின்ற போதும், அதனைப் புறந்தள்ளிக் கொழும்பு அரசு நேரடியாகச் செயற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## கூட்டமைப்பு உறுப்பினர்களிடம் 12ஆம் திகதியே வாக்குமூலம்

### யாழ். பொலிஸ் நிலையம் சென்றோர் திருப்பியனுப்பப்பட்டனர்

யாழ்ப்பாணம், டிசெ. 25
ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்வதற்காக நேற்று யாழ். பொலிஸ் நிலையம் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகளை எதிர்வரும் ஜனவரி மாதம் 12 ஆம் திகதி மீளவும் வருமாறு கூறித் திருப்பியனுப்பியுள்ளனர் பொலிஸார்.

பொலிஸார் அனுப்பியிருந்த அழைப்பாணைக்கு அமைவாகச் சென்ற கூட்டமைப்பு உறுப்பினர்களே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

ஜனவரி 16 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றத்தில் விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்பதால், ஜனவரி 12 ஆம் திகதி வாக்குமூலம் பதிவு செய்யப்படும் என்றும் பொலிஸார் அவர்களிடம் கூறியுள்ளனர்.

கடந்த 16 ஆம் திகதி யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அதில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உரையாற்றிக் கொண்டிருந்த போது, இனந்தெரியாத நபர் ஒருவர் அவரது ஒலிவாங்கியைப் பறிக்க முற்பட்டதைத் தொடர்ந்து வாக்குவாதம் ஏற்பட்டு, அது மோதலாக மாறியது.

அதில் வடக்கு மாகாண அமைச்சர் பொ.ஐங்கரநேசன், உறுப்பினர்களான சர்வேஸ்வரன் மற்றும் சிவயோகன் ஆகியோர் காயமடைந்திருந்தனர். இதே வேளை குறித்த தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்ததாகத் தெரிவித்து, ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் சிலரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதுடன், அது குறித்துப் பொலிஸ் நிலையத்திலும் அவர்கள் முறைப்பாடு செய்திருந்தனர்.

ஈ.பி.டி.பியினர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய, வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்கு கூட்டமைப்பின் மூன்று உறுப்பினர்களை பொலிஸார் நேற்று அழைத்திருந்தனர். அதற்கிணங்க, வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான பா.கஜதீபன், எம்.கே.சிவாஜிலிங்கம், காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர் வே.ஆனைமுகன் ஆகியோர், பொலிஸ் நிலையத்துக்கு நேற்றுக் காலை சென்றிருந்தனர்.

ஆயினும், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 8 பேருக்கு அழைப்பாணை அனுப்பியதாகவும், எஞ்சியோருக்கு உரியமுறையில் அழைப்பாணை கிடைக்கவில்லை. எனவே 8 பேரிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட வேண்டியிருப்பதால், எதிர்வரும் ஜனவரி 12 ஆம் திகதி திரும்பவும் வருமாறு தெரிவித்த பொலிஸார், மூவரையும் திருப்பியனுப்பியுள்ளனர். (ற-5)

## ஆபத்து நேர்ந்தால் அரசே பொறுப்பு

### ரிசாத் பதியுதீன் கூறுகின்றார்

கொழும்பு, டிசெ. 25
எனக்கு ஏதாவது ஆபத்துக்கள் ஏற்பட்டால் அதற்கு இலங்கை அரசுதான் பதில் கூற வேண்டும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் ரிசாத், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஒரு போதும் விட்டுக்கொடுக்கப்போவதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகித்த அமைச்சர் ரிசாத் பதியுதீன், கடந்த திங்கட்கிழமை பொது எதிரணியுடன் இணைந்து கொண்டார். இதன் போது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினால் இந்த மாத ஆரம்பத்தில் வழங்கப்பட்ட நியமன நாடாளுமன்ற உறுப்பினர் அமீர் அலியுடனே சென்று பொது எதிரணியில் இணைந்திருந்தார்.

இதனையடுத்து, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் ரிசாத் பதியுதீன் நியமன நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை மீள வழங்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ரிசாத் பதியுதீன்,

"நான் அரசிலிருந்து வெளியேறத் தீர்மானித்த தினத்தன்று, எனக்கு அரசின் உயர் அதிகாரி ஒருவரிடமிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது.

அரசிலிருந்து விலகினால் பல பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டிவரும் என்று அந்த தொலைபேசி அழைப்பின் போது 'எனக்கு எச்சரிக்கை விடுத்தார். அந்த தொலைபேசியின் இலக்கம் என்னிடம் உள்ளது. இதே வேளை, நியமன நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஒரு போதும் விட்டுக் கொடுக்க முடியாது"– என்று தெரிவித்தார். (ற-5)

## நாளைவரை மழை நீடிக்கும்

கொழும்பு, டிசெ.25
நாட்டின் பல பாகங்களில் ஏற்பட்டுள்ள கடும் மழையுடனான காலநிலை நாளை வெள்ளிக்கிழமை வரை நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கையின் வட கிழக்கே ஏற்பட்டள்ள தாழமுக்கம் காரணமாக வடக்கு, கிழக்கு, மத்திய, வடமத்திய, தென் மாகாணங்களில் மழை தொடர்வதற்கான ஏது நிலை காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"சீரற்ற காலநிலை காரணமாக நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மழை தொடர்கிறது. அடுத்துவரும் 36 மணித்தியாலயங்களுக்கு இந்த நிலை தொடர வாய்ப்புள்ளது. இதன்படி வரும் வெள்ளிக்கிழமைக்கு பின்னரே மழை குறைவடையும் சாத்தியம் உள்ளது. "–என்று கொழும்பு வளிமண்டலவியல் திணைக்கள வானிலை அதிகாரி ஏ.எம். முஹம்மது சாலிஹீன் தெரிவித்தார். (ற)

## சர்வதேச வர்த்தக கண்காட்சி யாழில்

யாழ்ப்பாணம், டிசெ.25
சர்வதேச வர்த்தகக் கண்காட்சி ஆறாவது தடவையாகவும் ஜனவரி மாதம் 23,24,25 ஆம் திகதிகளில் யாழ்.மாநகரசபை திறந்த வெளி மைதானத்தில் நடத்தப்படவுள்ளது என்று யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றம் அறிவித்துள்ளது.

நேற்று யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்ற மண்டபத்தில் இடம்பெற்ற ஊடக மாநாட்டில் மன்றத்தின் தலைவர் கே.விக்னேஸ் கருத்து தெரிவிக்கையில், "ஆறாவது தடவையாகவும் வர்த்தகக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளது. இதில் யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த 30 உள்ளூர் உற்பத்தி நிறுவனங்களும், வெளி மாவட்டங்களிலிருந்து 180 நிறுவனங்களும் பங்கு பற்றவுள்ளன."– என்று தெரிவித்தார். (ற)

## ரயிலின் முன் பாய்ந்து 16 வயது சிறுவன் சாவு

### தந்தை கண்டித்ததால்



கொழும்பு, டிசெ.25
வீட்டுக்குத் தாமதமாக வந்ததால் தந்தையால் கண்டிக்கப்பட்ட 16 வயதுச் சிறுவன், ரயிலின் முன் பாய்ந்து உயிரை மாய்த்துக்கொண்டுள்ளான். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் வவுனியாவில் நடந்துள்ளது.

தோணிக்கல்லைச் சேர்ந்த அல்பட் டிசாந்த் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

வீட்டுக்குத் தாமதமாக வந்த சிறுவனை தந்தை கண்டித்தார் என்றும், அதனால் கோபமுற்ற அவர் நான் தற்கொலை செய்வேன் என்று கூறிச் சென்றுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அதன் பின்னர் மகனைக் காணவில்லை என்று பெற்றோர் தேடியபோது, தோணிக் கல் புகையிரதப் பாதையில் சிறுவன் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டான் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-421,402)

## காணாமற்போன குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

வலி.வடக்கு, டிசெ 25
சுன்னாகம் சூராவத்தைப் பகுதியில் இருந்து கடந்த 22 ஆம் திகதி காணாமற்போனதாகக் கூறப்படும் குடும்பஸ்தர் நேற்றுப் புதன்கிழமை அயலில் உள்ள காணியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

சூராவத்தையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான தர்மராசா சிவநாதன் (வயது-57) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவருடைய சடலம் நேற்றுப் பகல் அயலவர்களால் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து சுன்னாகம் பொலிஸார், கிராம அலுவலர் ஆகியோருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

இது குறித்து மல்லாம் நீதிமன்றுக்குப் பொலிஸார் கொடுத்த தகவலைத் தொடர்ந்து நீதிவான் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை மேற்கொண்டார். அதன் பின்னர் சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (த-86-4)

# ஜனரஞ்சகம்



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: வீண் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது. பெண்கள் தாராளமாக பணம் செலவு செய்து தேவையானவற்றை வாங்குவீர்கள். மனதில் உற்சாகம் பிறக்கும். தேவையான உதவிகளும் கிடைக்கும்.

**இடபம்**: சமூகத்தில் மதிப்பு, மரியாதை உயரும். கடந்த காலத்தில் ஒதுக்கி வைத்திருந்த திட்டங்களைச் செயற்படுத்த முனைவீர்கள். மாற்றங்களைக் கொண்டு வர முயற்சிக்க வேண்டாம்.

**மிதுனம்**: சமுதாயத்தில் உங்கள் கௌரவமும், புகழும் உயரும். காலதாமதம் ஏற்பட்டாலும் புதிய ஒப்பந்தங்களைச் செய்வீர்கள்.

**கடகம்**: மக்களின் ஆதரவு எதிர்பார்த்த அளவுக்குக் கிடைத்து உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். புதிய ஒப்பந்தங்களைப் பெறுவீர்கள். உங்களின் திறமைகள் பளிச்சிடும்.

**சிங்கம்**: பிள்ளைகளிடமிருந்து நல்லுதவிகளைப் பெறுவீர்கள். புதிய வாகனங்களின் சேர்க்கை உண்டாகும். கல்வியில் முன்னேற்றம் காண முடியும். வாழ்க்கை வளம் பெறும்.

**கன்னி**: நிதானமாகவும், செம்மையாகவும் காரியத்தை தெய்வ பலத்துடன் செய்து வெற்றி பெறுவீர்கள். உங்களை எல்லோரும் நேசிப்பார்கள். எதிர்ப்புகள் நீங்கி எதிலும் உற்சாகம் உண்டாகும்.

**துலாம்**: நண்பர்கள் சேர்க்கையும் அவர்களால் உதவியும் கிடைக்கும். நண்பர்களிடம் தன்னம்பிக்கையை ஏற்படுத்துவீர்கள். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் அகலும்.

**விருச்சிகம்**: பிள்ளைகளின் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். எதிரிகள் தானாகவே அடங்கி விடுவார்கள். செய்தொழிலை விரிவுபடுத்துவதற்காக வெளியூர்ப் பயணங்களை மேற்கொள்வீர்கள்

**தனுசு**: எதிரிகளையும் நண்பர்களாக்கிக் கொள்வீர்கள். வெளியில் கொடுத்திருந்த கடன், வட்டியும் முதலுமாகத் திரும்பி வரும். உங்களின் சொந்தக் காலில் நின்று வெற்றி பெறுவீர்கள். தெய்வபலத்தைப் பெருக்கிக்கொள்வீர்கள்.

**மகரம்**: உறவினர்களை எக்காரணம் கொண்டும் சந்தேகப் பார்வை பார்க்க வேண்டாம். எந்த நோய் என்று அறிய முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தவர்கள் சட்டென்று குணமடைந்துவிடுவார்கள்.

**கும்பம்**: மரியாதை நிமித்தமாக உயர்ந்தோரை சந்தித்துப் பெருமையடைவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேண்டிய உதவிகள் மேலதிகாரிகள் மூலம் கிடைக்கும்.

**மீனம்**: பொறுப்புகள் கூடும். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வும் கிடைக்கக்கூடும். எச்சரிக்கையாக இருப்பதன்மூலம் அதைத் தடுக்கலாம். பிள்ளைகள் மனம் மகிழும்படி நடந்து கொள்வார்கள்.

## தரைக்கு வந்த நீர்நாய்



நீரில் வாழும் நீர் நாய், பூங்காவை ரசிக்க வந்த விநோத சம்பவம் இங்கிலாந்தில் இடம்பெற்றுள்ளது. இங்கிலாந்திலுள்ள, நியூட்டன் லீவிலோவ்ஸ் பிரதேச மொன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நபரொருவர் தனது நாயுடன் நடைப் பயிற்சிக்கு சென்றுள்ளார். இதன்போது, வித்தியாசமான உருவத்தில் பூங்காவில் ஏதோ ஒன்று படுத்திருப்பதை கண்டு அதன் அருகில் சென்று பார்த்துள்ளார். படுத்திருப்பது நீர் நாய் என்பதை கண்ட நபர் அதிர்ச்சியடைந்து, பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார், இந்த நீர்நாய்கள் சக்திவாய்ந்த மிருகம் என்றும் ஆபத்தை தரக்கூடியது என்றும் தெரிவித்து பொதுமக்களை தூர நிற்குமாறு தெரிவித்துள்ளனர். நீர்நாய் அங்குள்ள மெர்சி நதியிலிருந்து இப்பகுதிக்கு வந்திருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது நீர்நாய் பாதுகாப்பாக அங்குள்ள சரணாலயம் ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

## சின்னத்திரை சில துளிகள்



சீ தமிழ் தொலைக்காட்சியில் சொல்வதெல்லாம் உண்மை என்ற நிகழ்ச்சி ஒளிபரப்பாகி வருகின்றது. இந்த நிகழ்ச்சிக்கு தமிழகத்தில் எதிர்ப்பும் பலமாகிக் கொண்டே போகின்றது. இந்த நிலையில், விஜய் தொலைக்காட்சியில் அது இது எது என்ற நிகழ்ச்சியில், சொல்வதெல்லாம் உண்மை என்ற நிகழ்ச்சியை நக்கலடித்திருந்தார்கள்.

இதனை வெளிப்படையாகப் பாராட்டிய, சொல்வதெல்லாம் உண்மை நிகழ்ச்சியை நடத்தும் நடிகை மறைமுகமாக விஜய் தொலைக்காட்சியை தாக்கத் தொடங்கியுள்ளாராம். விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாக்கும் நிகழ்ச்சிகளை, அவர் கலந்துகொள்ளும் கூட்டங்களில் நக்கலடிக்கத் தொடங்கியுள்ளாராம். 'என்னம்மா இப்படி பண்ணுறீங்களே?'

## ரிலாக்ஸா வாசியுங்க....

விவேகானந்தர் பேசி முடித்துவிட்டு மேடையில் இருந்து இறங்கி வந்தார். அவரால் வசீகரிக்கப்பட்டவளாய் அந்த அழகிய இளம்பெண் அருகில் சென்றாள்.

நீங்கள் என்னை மணந்து கொள்கிறீர்களா? என்று கேட்டாள். என்னைப் பார்த்ததும் திடீரென்று ஏன் இந்த எண்ணம் வந்தது? என்று கேட்டார் விவேகானந்தர்.

அதற்கு அந்தப் பெண், உங்களைப் போலவே ஞானமும், ஆற்றலும் நிரம்பிய மகனைப் பெறவேண்டும் என்று விரும்புகிறேன். எனவேதான் உங்களை மணக்க விரும்புகிறேன் என்றாள்.


அதற்கு விவேகானந்தர், உடனே சொன்னார். என்னை மணந்து என்னைப் போலவே மகனை பெற்றுக் கொள்வதை விட என்னையே மகனாக ஏற்றுக்கொண்டு விடேன்.

இன்று முதல் நான் உன்னை 'தாயே' என்றே அழைக்கிறேன் என்று கூறினார்.

இதுதான் அறிவின் முதிர்ச்சி.....

ஒருவரது கருத்தை மறுதலிக்கும் பொழுதுகூட, அவரது மனத்தைக் காயப்படுத்தாமல் மாறாக அவரை மகிழ்விக்கும் மாண்பு.










காரணமே இல்லாமல் உன்னை வெறுப்பவர்கள் உன்னைப்போல இருக்க முடியவில்லையே என்று கவலைப்படுபவர்களாகவும் இருக்கலாம்.


www.mahinda2015.com
இனிய நத்தார் மற்றும்
வளமான எதிர்காலம்
அமைய வாழ்த்துகிறேன்!
“ஆலய மணியோசை மற்றும் நத்தார் கீதங்கள் மூலம் நற்சிந்தனைகளை மலரச் செய்யும் இந்த நத்தார் தினம், உங்களுக்கு மகிழ்ச்சியும் இறை ஆசீர்வாதமும் நிறைந்ததாக அமைய வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.”
பாதுகாப்பான தேசம்
வளமான எதிர்காலம்

# 3 லட்சம் பனம்விதை நடுகை

## வடக்கு-கிழக்குப் பகுதிகளில்

யாழ்ப்பாணம்.டிசெ 25

பனை அபிவிருத்திச் சபையினால் இந்த வருடம் வடக்கு–கிழக்கு மாகாணம் உட்பட தென் பகுதிகளில் 3 இலட்சத்துக்கும் அதிகமான பனம் விதைகள் நடப்பட்டுள்ளதாகப் பனை அபிவிருத் திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீடு மற்றும் பனை அபிவிருத்திச் சபையின் மூலதன நிதி ஒதுக்கீடு என்வற்றின் ஊடாகப் பனம் விதை நடுகை அந்தந்த மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவற்றில் பாரம்பரிய கைத் தொழில் மற்றும் சிறுகைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் 2.3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் யாழ். மாவட்டத்தில் 61 ஆயிரத்து 500 பனம் விதைகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 22 ஆயிரம் பனம் விதைகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 53 ஆயிரம் பனம் விதைகளும், வவுனியா மாவட்டத்தில் 27 ஆயிரத்து 600 பனம் விதைகளும், மன்னார் மாவட்டத்தில் 25 ஆயிரம் பனம் விதைகளும் நடப்பட்டுள்ளன.

இதேவேளை, பனை அபிவிருத்திச் சபையின் மூலதன நிதி ஒதுக்கீட்டில் யாழ். மாவட்டத்தில் 19 ஆயிரத்து 350 பனம் விதைகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 25 ஆயிரம் பனம் விதைகளும், மன்னார் மாவட்டத்தில் 17 ஆயிரத்து 750 பனம் விதைகளும், வவுனியா மாவட்டத்தில் 10ஆயிரம் பனம் விதைகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 10 ஆயிரம் பனம் விதைகளும், அம்பாறை மாவட்டத்தில் 10 ஆயிரம் பனம் விதைகளும், புத்தளம் மாவட்டத்தில் 15ஆயிரம் பனம் விதைகளும், திருகோணமலை மாவட்டத்தில் 19 ஆயிரத்து 740 பனம் விதைகளும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 13ஆயிரம் பனம் விதைகளும் நடப்பட்டுள்ளன– என்றார். (த–14)



வவுனியா செட்டிகுளம் பிரேதச செயலகப்பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் நேரில் சந்தித்துக் குறைகளைக் கேட்டறிந்தார். அத்துடன் இவர்களுக்கான உடனடி மருத்துவ சேவைகளை வழங்குவதற்கு அதிகாரிகளைப் பூணித்ததோடு பெண்கள், சிறுவர்களுக்கான அவசர சுகாதார பொதிகளையும் வழங்கப் பணித்துள்ளார். (த)

## யாழ்.பல்கலை இதழியல் மாணவருக்கு சான்றிதழ்

யாழ்ப்பாணம், டிசெ 25

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் ஊடகவியல் டிப்ளோமா கற்கைநெறியை நிறைவு செய்த 43 மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மாலை 4.00 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

சான்றிதழ் பெறும் மாணவர் விவரங்கள்–

பி.அனோஜா, பி.ஐஸ்வரியா, ஜே.மரீன் தர்மிலா, ஜோ.தட்சா, என்.துவாரகி, வி.சுகிர்தினி, எஸ்.பாமினி, பி.கஸ்ரோ, ஜி.கணேசதாசன், எம்.கௌஷிகா, எஸ்.ஹம்சா, எஸ்.ஜனகன், எஸ்.கபிலன், எஸ்.முருகானந்தினி, என்.நிருஷாந், பி.புவிதா, ரி.ரூபினி, எஸ்.சுகன்யா, எம்.சுகந்தி, எஸ்.சுஜித்தா, எம்.சுபத்திரா, ஆர்.சுரேஸ்கரன், எஸ்.தர்சன், பி.யசிந்தா, எஸ்.சுதர்மன், வை.வித்தியா, வி.பகவதி, எஸ்.ஜனார்த்தன், ஏ.ஜசீகரன், ரி.ஜீன், வி.கஜீபன், எஸ்.மதுசீலன், எஸ்.மயூதரன், ரி.நிரஜா, வி.நிஷாந்தி, ஜே.நிவர்சன், கே.பபிதாரகா, எஸ்.ராகுலன், ரி.சர்வேஸ்வரன், பி.சோபிகாஸ்மைலினி, என்.சிவகுல சிங்கம், எம்.சுவேதனன், பி.தயானந்தன். (த–10, 21)

## ஆளுநரின் ஏற்பாட்டில் ஓய்வூதியர் கழகங்கள்

அச்சுவேலி,டிசெ.25

யாழ்.மாவட்டத்தில் பிரதேச செயலர் பிரிவு வாரியாக வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் நேரடி கண்காணிப்பில் அரச ஓய்வூதியர் நலன் மேம்பாட்டுக் கழகம் நிறுவப்பட்டு வருகின்றது.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கான அரச ஓய்வூதியர் நலன் மேம்பாட்டு கழகத்தின் அங்குரார்ப்பண விழா கடந்த 17 ஆம் திகதி புதன்கிழமை நீர்வேலி ஶ்ரீமுருகன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி மற்றும் ஆளுநர் அலுவலக உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு அரச ஓய்வூதியர் நலன் மேம்பாட்டு கழகத்தின் நோக்கம் மற்றும் பயன்பாடுகள் தொடர்பாக விளக்கம் அளித்தனர். அத்துடன் உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்ப படிவங்களும் விநியோகிக்கப்பட்டன. விண்ணப்பத்தின் கீழ் வடக்கு மாகாண ஆளுநரின் பெயரோடு ஆளுநர் அலுவலக முகவரி அச்சிடப்பட்டிருந்தது.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் கணிசமான தொகையினர் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து கொடுப்பதில் விரும்பம் இல்லாமல் இருந்ததோடு அது தொடர்பான சமகால நிலைப்பாட்டையும் நிர்வாகிகளுக்கு தெரிவித்துக் கொண்டனர் எனக் கூறப்படுகின்றது. (த–11)

## இதுவரை அகற்றப்படாத தேர்தல் சுவரொட்டிகள்

கரணவாய்,டிசெ.25

தேர்தல் பரப்புரைகளுக்காக ஒட்டப்பட்ட தேர்தல் சுவரொட்டிகள் வடமராட்சிப் பகுதிகளிலுள்ள சில இடங்களில் அகற்றப்படாது காணப்படுகின்றன.

எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மஹிந்த ராஜபக்ஷவின் புகைப்படம் தாங்கிய சுவரொட்டிகள் கிராமப்புறங்களில் ஒட்டப்பட்டிருந்தன. பெரும்பாலான இடங்களில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள் மற்றும் சிறிய கட் அவுட்களை அகற்றிய பொலிஸார் கிராமப்புறங்களில் அவற்றை அகற்றாது விட்டுள்ளனர்.

குறிப்பாக குஞ்சர் கடை, மண்டான் வீதி, விழுந்த ஆலடி, கரணவாய் உட்பட சில பகுதிகளில் தேர்தல் சுவரொட்டிகள் தற்போதும் காணப்படுவதுடன் சில மின்சாரக் கம்பங்களில் சிறிய கட் அவுட்களும் அகற்றப்படாது காணப்படுகின்றன. (த–108)

## கே.கே.எஸ் பொலிஸாரின் நடமாடும் சேவை இன்று

காங்கேசன்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட நெல்லியடி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை பொலிஸ் நிலையங்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நடமாடும் சேவையின் இறுதி நிகழ்வு இன்று காலை அந்தந்த பிரிவுகளில் ஒழுங்கமைக்கப்பட்ட இடங்களில் இடம்பெற உள்ளதாக காங்கேசன்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் அறிவித்துள்ளார்.

பொது மக்கள் இந்த நடமாடும் சேவை நிகழ்வில் கலந்து கொண்டு பயன் பெறுமாறும் அவர் கோரியுள்ளார். இந்த நிகழ்வுகளில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

முதலாவதாக வல்வெட்டித் துறை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மீடின் தலைமையில் நடமாடும் சேவை நிகழ்வு கொற்றாவத்தை ரேஞ்சர்ஸ் மைதானத்தில் காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

தொடர்ந்து நெல்லியடி பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுமித் பெரேரோ தலைமையில் கலிகை அம்மன் கோயிலுக்கு அண்மையில் உள்ள கலாசார மண்டபத்தில் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி யுவான் நந்த நாராயண தலைமையில் குடத்தனை மிசன் பாடசாலையில் பிற்பகல் 5 மணிக்கு இடம்பெற உள்ளது. இந்த நிகழ்வுகளில் பொது மக்கள் கலந்து கொண்டு தமது பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடித் தீர்வைப் பெறமுடியும் என பொலிசார் பொது மக்களை கோரியிருக்கின்றனர். (த–109)

## சாவகச்சேரி நகரசபை பட்ஜெட் பார்வைக்கு

தென்மராட்சி,டிசெ.25

சாவகச்சேரி நகரசபையின் 2015ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டு அறிக்கை பொது மக்களின் பாவனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் நகரசபை அலுவலகத்திலும் நகரசபையின் மீசாலை, நுணாவில், சாவகச்சேரி ஆகிய பொது நூலகங்களிலும் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டு அறிக்கையைப் பார்வையிடலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (த–9)

## கோடாவுடன் கைதானவர் மறியலில்

தென்மராட்சி,டிசெ.25

கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் கோடா வைத்திருந்த கச்சாய் ஒட்டங்கேணி வாசியை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த ரகசியத் தகவலையடுத்து அந்தப் பகுதிக்கு விரைந்த பொலிஸார் கோடாவைக் கைப்பற்றியதுடன் வைத்திருந்த நபரையும் கைது செய்தனர். இந்த நபரை நேற்று நீதிமன்றில் முற்படுத்தியபோது வழக்கினை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை எதிர்வரும் ஏழாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த–9)

## தேர்தல் காலத்தில் மஹிந்தோதய ஆய்வு கூடங்களின் திறப்பு

கரணவாய்,டிசெ.25

தேர்தல் நெருங்கி வரும் காலப்பகுதியில் வவுனியா மாவட்டத்தில் அமைக்கப்பட்ட மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடம் திறக்கப்படவுள்ளமை தொடர்பாக அதிபர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வவுனியா மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மடுக்கந்த மகா வித்தியாலயம், பூவரசங் குளம் மகாவித்தியாலயம் மற்றும் சூடு வெந்தபிலவு அல் இக்பால் வித்தியாலயம் ஆகியவற்றின் புதிய மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடம் எதிர்வரும் 30ஆம் திகதி திறந்து வைக்கப் படவுள்ளது.

தேர்தல் முடிவடையும் வரை பாடசாலைகளில் நிகழ்வுகள், அரசியல் கூட்டங்கள் என்பவற்றை ஒழுங்குபடுத்தவோ நடத்தவோ வேண்டாம் என தேர்தல்கள் ஆணையாளரினால் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையிலேயே இந்த மூன்று ஆய்வு கூடங்களும் 30 ஆம் திகதி திறந்து வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (த–108)

# செய்திகள்

## காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் திருவாதிரை விழா சனியன்று

காரைநகர், டிசெ.25


வரலாற்றுச் சிறப்புமிக்க காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை திருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் சிறப்பாக இடம்பெற உள்ளது.

திருவிழாவுக்கான விரிவான ஏற்பாடுகளை ஆலய ஆதீன கர்த்தாக்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆலயத்துக்கு வருகைதரும் அடியார்களுக்கான போக்குவரத்து, சுகாதாரம், குடிதண்ணீர்,பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு தேவைகளை உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு மேற்கொண்டு வருகின்றனர்.

உற்சவ காலங்களில் தினமும் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் ஆலயத்துக்கு வருகை தருவது வழமையாகும். உற்சவத்தின் இறுதித்தினங்களான தேர், தீர்த்தத் திருவிழாக் களுக்கு மேலும் அதிகளவானோர் கலந்துகொள்வர் என்பதால் உற்சவத்துக்கான விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாளை மறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகும் திருவாதிரை உற்சவத்தில் தினமும் காலை 7 மணி முதல் மூலமூர்த்திகளான ஐயனார், சிவன் ஆகியோருக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் முற்பகல் 10 மணிக்கு மாணிக்கவாசகர் சுவாமிகள் எழுந்தருளி நடேசர் சந்நிதானத்தில் திருவெம்பாவை ஓதலும் உள்வீதி உலா வருதலும் இடம்பெறும்.



முற்பகல் 11.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று சுந்தரேஸ்வரப் பெருமான்பரிவார மூர்த்திகளுடன்திரு வீதி உலா வரும் காட்சியும் இடம்பெறும். உற்சவத்தில் 9 ஆம் நாளான அடுத்த மாதம் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழா இடம்பெற உள்ளது.

அன்று அதிகாலை 5 மணிமுதல் மூல மூர்த்திகளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் காலை 7 மணிமுதல் வசந்த மண்டபப் பூசை திருவெம்பாவை ஓதல் என்பன இடம்பெற்று காலை 9 மணிக்கு நடேசப் பெருமானினதும் ஏனைய பரிவார மூர்த்திகளினதும் பஞ்சரதபவனி இடம் பெறும்.

மறுநாள் திங்கட்கிழமை அதிகாலை 2 மணி தொடக்கம் நடேசர் அபிஷேகமும் பிற்பகல் 3 மணிக்கு திருவுடல் உற்சவமும் மாலை 5 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெற உள்ளது.

திருவிழாக் காலங்களில் தினமும் ஈழத்துச் சிதம்பர அறப் பணி நிலையம், மாணிக்கவாசகர் மடாலயம் ஆகியவற்றில் அன்னதானமும் இறுதி 4 தினங்களும் மணிவாசகர் சபையின் மணிவாசகர் விழா ஆலய வசந்த மண்டபத்திலும் இடம்பெற உள் ளது. யாழ் நகரிலிருந்துஆலயம்வரை நேரடி பஸ் சேவைகளும் தினமும் இடம்பெறவுள்ளன. (வ–250)

## 12 கடைகளில் 8 கடைகள் வாடகைக்கு விடப்படும்

### பச்சிலைப்பள்ளி பிரதேச சபையால்

வலி.தென்மேற்கு, டிசெ. 25

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையால் 18 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட 12 கடைகளில் 8 கடைகள் ஏற்கனவே வர்த்தகத்தில் ஈடுபட்டவர்கள் வாடகை மதிப்பீட்டு திணைக்களத்தின்பரிந்துரைக்குஅமைய 15 வருடங்களுக்கான வாடகைப் பணத்தைதிருப்பிவழங்காதமுற்பணமாக பெற்றுக்கொண்டு மாதாந்த வாடகைக்கு வழங்கப்படவுள்ளன. இதற்கான தீர்மானம் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் பளை பஸ் நிலையத்துக்கு அருகாமையில் அமைக்கப்பட்டிருந்த பிரதேச சபைக்குச் சொந்தமான கடைத்தொகுதி போர் காரணமாக முற்றாகச் சேதமடைந்ததால் கைவிடப்பட்ட நிலையில் இருந்தது. தற்போது அதே இடத்தில் நெல்சிப் திட்டத்தின் கீழ் 18 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட 12 கடைகளும் பிரதேச சபை யின் வருமானத்தைக் கருத்தில் கொண்டு வாடகைக்கு விடப்பட்டுள்ளன.

இந்தநிலையில் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் தவிசாளர்டொமினிக்அன்ரன்தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்ற போது கடைகளை வாடகைக்கு விடுவது குறித்து ஆராயப்பட்டது. (வ–115)



சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306 பி 1 மாவட்ட ஆளுநர் லயன் கமிலஸ் ஒன்றை பெர்னாண்டா கடந்த வாரம் சாவகச்சேரி லயன்ஸ் கழக அலுவலகத்துக்கு வருகை தந்து கழகத்தின் நலத்திட்டங்களை ஆரம்பித்து வைத்தார். மாற்றுத் திற னாளி ஒருவருக்கு ஊன்றுகோல் ஒன்றையும் வழங்கினார். (வ–9)

## உத்தேசித்த நிதியில் மூலதன செலவுக்கும் பயன்படுத்த முடிவு

தென்மராட்சி, டிசெ. 25

சாவகச்சேரி நகர சபைக்கு 2015 ஆம் ஆண்டு கிடைக்கும் என்று உத்தேசிக்கப்பட்ட நிதியில்இருந்து ஒரு கோடி 34 லட்சத்து 32 ஆயிரம் ரூபா மூலதன செலவுக்குப் பயன்படுத்ததிட்டமிடப்பட்டுள்ளதாக தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார்.

அவற்றில் ஒரு கோடி 8 லட்சம் ரூபாவுக்கு 13 வீதிகள் புனரமைக்கும் வீதி பராமரிப்பு செலவினமாக 9 வீதிகள் மீள் தார் இடல் உட்பட பல வீதிகள் பராமரிப்பு செலவினமாக 49 லட்சம் ரூபாவும், நூலகங்களுக்கு புத்தகங்கள் கொள்வனவுசெய்ய 3 லட்சம் ரூபாவும் தளபாடம் மற்றும் கருவிகள், சாதனங்கள் கொள்வனவு செய்வதற்கு தலா ஒரு லட்சம் ரூபா வீதமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அவற்றுடன் நெல்சிப் அபிவிருத்தித் திட்டத்திலும் மாகாண சபையின் மக்கள் பிரதிநிதி களின் அபிவிருத்தி வேலைகள் நிதி ஒதுக்கீட்டிலும் 10 கோடி ரூபா வரை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். (வ–9)

## அரச பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர் கடமையாற்ற முடியாது

யாழ்ப்பாணம்,டிசெ.25

அரச பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர் எவரும் கடமையாற்ற முடியாது என்றும்– அவ்வாறு எந்தப் பாடசாலையிலாவது தொண்டர் ஆசிரியர் கடமையாற்றினால் அவர்களை உடனடியாக விலக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் அநுரதிஸா நாயக்க சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர் களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

2015ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட யோசனைகளில் முன்வைக்கப்பட்ட 50ஆயிரம் ஆசிரிய உதவியாளர்களை பாட ரீதியாக தெரிவு செய்வதற்கான ஏற்பாடுகள் அமைச்சால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் சில பாடசாலைகளில் அதிபர்கள் தொண்டர் ஆசிரியர்களை இணைத்துள்ளதாக அறியப்படுகிறது. தொண்டர் ஆசிரியர் சேவை நிறுத்தப்பட்டுள்ளதால் அவ்வாறு எந்தவொரு அதிபராவது தொண்டர் ஆசிரியர்களை நியமிக்க வேண்டாம் என்றும்– அவ்வாறு நியமித்தால் அந்த அதிபர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்குமாறும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ–9)

## பண்டத்தரிப்பு குடிதண்ணீர் ஏனைய பிரிவுகளுக்குப் போதுமானதல்ல

### மானிப்பாய் பிரதேச சபை தவிசாளர் கூறுகிறார்

மானிப்பாய், டிசெ.25

வலி.தென்மேற்கு பண்டத்தரிப்பில் முன்னெடுக்கப்படும் குடிதண்ணீர் திட்டம் முழுமையாக வலி.தென்மேற்கில்உள்ளபண்டத்தரிப்பு பட்டின மற்றும் மாதகல் உபஅலுவலகம்பிரிவுக்கேபோதுமானது அல்ல.

வலி.மேற்கில் உள்ள 14 பிரதேச செயலாளர் பிரிவுகள் குடி தண்ணீரை வேண்டி நிற்கும் போது ஏனைய அயற் பிரதேசங்களுக்கு வழங்க முடியாது.

இவ்வாறு தெரிவித்தார் மானிப்பாய் பிரதேச சபை தவிசாளர் சி. மகேந்திரன்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

யாழ்.தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் கீழான கிராமிய மட்ட குடிதண்ணீர் மற்றும்சுகாதார திட்டத்தின் கீழ் பண்டத்தரிப்பில் நீர்நிலை அமைக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பில் உள்ள நீர் நிலையில் இருந்து எமது வலி. தென்மேற்கில் வாழும் மக்களுக்கு



வழங்க போதிய குடிதண்ணீர் இல்லாத நிலை அவதானிக் கப்பட்டுள்ளது. கடந்த நான்கு வருடங்களாக மக்கள் எம்மிடம் விடுத்த கோரிக்கை நிறைவேறாதுள்ளது.

மேலும், பண்டத்தரிப்பில் உள்ள நீர்நிலையில் இருந்து எமது பிரதேசத்துக்கு உட்பட்ட மக்களுக்கு மட்டுமே குடி தண்ணீரை வழங்க முடியுமே தவிர ஏனைய அயல்பிரதேச வலி. மேற்கு மக்களுக்கு வழங்க முடியாத நிலை உள்ளதாகவும்–

இந்த நிலைப்பாட்டை திட்டப் பணிப்பாளர் எந்திரி தி.பார திதாசனுக்கு விளக்கவுள்ள தாகவும் அவர்மேலும்குறிப்பிட்டார்.(வ–50)

## மீசாலையில் இலவச மருத்துவ முகாம்

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர்மீசாலைப்பிரதேசமக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாமை எதிர்வரும் 28ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிதொடக்கம்மீசாலை விக்னேஸ்வராமகாவித்தியாலய மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

மருத்துவமுகாமில் கண், நீரிழிவு, இரத்த அழுத்தம், பொது மருத்துவம் ஆகிய மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்படும்.

கண் பரிசோதனையில் பார்வையில் குறைபாடுகாணப்படும்வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 100 குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு கழக முன்னாள் தலைவர் லயன் மருத்துவர் வே.தம்பித்துரை நினைவாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளதாக கழகத் தலைவர் லயன் க.தர்சன் தெரிவித்தார். (வ–9)

## அராலி வீதிகளுக்கு மின் விளக்குகள்

அராலி கிழக்கு, அராலி கற்குழி–திக்கிரி வீதிகளுக்கு இதுவரை 5 வீதி விளக்குகள்பொருத்தப்பட்டுள்ளன. வலி.மேற்கு பிரதேச சபையின் உறுப்பினரான த.நடனேந்திரன் மேற்படி வீதிகளுக்கு தனது சொந்த செலவில் வீதி விளக்குகள் பொருந்தியுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது. அராலி மக்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்தே வீடமைப்பு மற்றும்கழக அபிவிருத்தி குழுவின் தலைவராக இருந்து இந்த உதவிகளை முன் னெடுத்துள்ளதாகத் தெரிய வருகிறது. (வ–50)

# அம்மாடியோவ்!

## இவ்வளவு போட்டிகளும் பரிசுகளும் எமக்கா?



| இல | போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு ரூ. | 2 ஆம் பரிசு ரூ. | 3 ஆம் பரிசு ரூ. | மட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 02 | கவிதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| | | C | தரம் 3, 4, 5 | 5,000 | 4,000 | 3,000 | மாகாணம் |
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 02 | கவிதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | C | தரம் 3, 4, 5 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |

# 30

அகவையில்

உதயன்

## தமிழ் வளர்ப்போம் தமிழால் இணைவோம்!

### *கவிதை! கவிதை!!*

### *வெற்றியிலும் பரிசு மழையிலும் திளைத்திடுங்கள்*

# உங்களால் முடியும் மாணவர்களே!

**தமிழ்க் கவிதை மேம்பாட்டில் தீவிர கரிசனைகாட்டிவரும் உதயனின்**
**உதயன் 30ஆவது ஆண்டு மாபெரும் கவிதைப் போட்டி**

**தரம் 10, 11, 12, 13 இல் கற்கும் மாணவர்களே!**
**கவிதைத் தேர்வில் கலந்துகொண்டு பரிசில்களை வெல்லுங்கள்**

## கவிதைக்கான தலைப்புக்கள் இதோ!

- ❖'ஒழுக்கமே கல்விக்கு உன்னதமாம்'
- ❖'கற்றதன் வழி உயர்வு காண்போம்'

கவிதை ஒவ்வொன்றும் 40 வரிகளுக்குக் குறையாமலும் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். கவிதைகள் மரபுக் கவிதையாகவோ, புதுக் கவிதையாகவோ அமையலாம்.

அனுப்பப்படும் கவிதைகள் முன் எப்பொழுதும் வெளியிடப்படாதது என்பதனையும், சொந்த ஆக்கம் என்பதனையும் ஆசிரியர்/ அதிபர் உறுதி செய்தல் வேண்டும்.

தாளின் ஒரு பக்கத்தில் மாத்திரம், அழகிய கையெழுத்தில் அல்லது கணினியில் அச்சிடப்பட்டதாக கவிதை அமைதல் வேண்டும்.

**கவிதையை 2015.02.28 இற்கு முன்னர்**

**30 அகவையில் உதயன்,**
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் ஆற்றல்களை வெளிப்படுத்தி கவிதைகளை ஆக்குங்கள்.
உடன் உதயனுக்கு அனுப்பி வையுங்கள்.
உதயன் விண்ணப்பப் படிவத்தில் வேறாக உங்கள்
விவரங்களை இணைக்க மறந்து விடாதீர்கள்.

### உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம்
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)*
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)

பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ..............................
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
..............................
கற்கும் பாடசாலை: ..............................
தரம்: ...............

பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..............................
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்:..............................
ஆசிரியரின் பாடத்துறை: ..............................

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ ..இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி .............................. அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

உதயன்
பத்திரிகையுடன்
நாளாந்தம்
இணைந்திருங்கள்!

# கருத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வெள்ளம் வந்த பின்னரே அணை கட்டும் போக்கு தொடர வேண்டுமா?

சீரற்ற காலநிலை நாடளாவிய மட்டத்தில் தொடர்கிறது. ஆண்டின் கடைசி மாதங்களான நவம்பர், டிசெம்பரில் இயற்கையின் சீற்றம் ஏனைய மாதங்களை விட அதிகரிப்பது எமது புவியியல் அமைப்பின் வழமையாகி விட்டது.

கனமழையின் காரணமாக நாட்டின் 15 மாவட்டங்களில் சுமார் ஆறு லட்சம் வரையிலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அரச தகவல்கள் வெளிவந்துள்ளன.

வடக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் மாவட்டங்களிலும் கிழக்கில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும் அடைமழை காரண மாக மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் 4,656 பேரும், கிளிநொச்சியில் 10,781 பேரும், வவுனியாவில் 5,494 பேரும் மன்னாரில் 6,573 பேரும், முல்லைத்தீவில் 2,044 பேரும்–

திருகோணமலையில் 36,238 பேரும், மட்டக்களப்பில் 421,702 பேரும், அம்பாறையில் 28,797 பேரும், மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருப்பதாக உத்தியோக பூர்வத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

வடமாகாணத்தில், கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் முப்பத்தொரு அடிக்கு உயர்ந்ததால் அதன் வான் கதவுகள் திறந்து விடப்பட்டன.

நாட்டில், குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வருட இறுதி மாதங்களில் இயற்கை இடர்கள் தீவிரமடைவதும் மக்கள் பல்வேறு வகை களில் பாதிப்புறுவதும் எழுதப்பட்ட விதியாகி விட்டதோ என்ற நிலைமைகளை ஏற்படுத்தி வருகின்றன.

அச்சொட்டாகப் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் – 2004 ஆம் ஆண்டில் ஆழிப்பேரலை (சுனாமி) என்ற பேரிடர் வடக்கு, கிழக்கில் பல்லாயிரக் கணக்கான மக்களைக் காவு கொண்டு மனிதப் பேரழிவை உண்டாக்கியது.

நாளை டிசெம்பர் இருபத்தாறாம் திகதி வெள்ளிக்கிழமை அன்று அந்தக் கொடிய இயற்கை இடர் ஊழித் தாண்டவம் ஆடி ஒரு தசாப்தம் ஆகிறது.

இயற்கை இடர்கள் நிகழ்வதை மனிதனால் முற்றிலும் தடுக்க முடியாது என்பது ஏற்புடையதே. ஆயினும் அவற்றை இயன்றளவு தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை, செயல்திட்டங்களை வகுத்து இந்தோனேசியா, ஆஸ்திரேலியா போன்ற நாடு கள் மேற்கொண்டு வருகின்றன. நவீன விஞ்ஞான முறைகளைக் கையாண்டு, அதற்கான செயல்திட்டங்களை வகுத்து அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படுத்துகின்றன.


எமது நாட்டில் ஆட்சிக்கு வரும் அரசுகள், ஆட்சியாளர்கள் இது போன்ற செயற்பாடுகளுக்கு முன்னுரிமை, காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் மனங்கொள்வது, ஒப்பீட்டளவில் மிகச் சரிந்த நிலையே காணப்படுகிறது; அதுவே தொடர்கிறது.

வெள்ளம் வந்த பின்னர் அணைகட்டும் இந்த நாட்டு அரச தலைவர்களின் போக்கு, அவர்களின் மனித நேயத்தையும் மக்கள் நேசத்தையும் அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது. மக்கள் பாதிப்புற்ற பின்னர் தலையைக் காட்டும் போக்கு, ஆட்சித் தலைவர்களிடமிருந்து மாறும் வரை பேச்சுப் பல்லக்கு, தம்பி கால்நடை என்ற போக்கே தொடரப் போகின்றது.

# பந்தயத்தில் வெல்லுமா மைத்திரியின் குதிரை?

சேரலாதன்

இலங்கையில் அடுத்த மாதம் எட்டாம் திகதி இடம்பெறப்போகும் ஜனாதிபதித் தேர்தல் இந்த நாட்டின் வரலாற்றில் முக்கியமானதொரு இடத்தை வகிக்கப் போகின்றது. சகல அதிகாரங்களையும் தமக்குள் கொண்டு ஒரு மன்னரைப் போன்று ஆட்சி செய்து வருபவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ. பண்டைய மன்னர் காலத்தில் சகல அதிகாரங்களும் அவர்களிடமே இருந்தன. நீதியை நிலை நாட்டுவதும் அவர்கள் தான். அவர்களைக் கேள்வி கேட்கும் உரிமை எவருக்குமே இருந்ததில்லை. இன்று எமது நாட்டின் நிலையும் இது தான். தமது தலைவிதியை நொந்து கொள்வதைத் தவிர இங்கு வாழுகின்ற மக்களால் வேறு எதுவுமே செய்ய முடியாது.



ஆனால் இந்த விதியையும் மாற்றிக் கொள்ள முடியுமென்ற நம்பிக்கையுடன் களமிறங்கியுள்ளார் எதிரணியின் பொது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேன.

அசைக்க முடியாதவர், வெற்றியைத் தவிர தோல்வி முகத்தை நினைத்துக் கூடப் பார்க்காதவர் என்றெல்லாம் வர்ணிக்கப்பட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தற்போது பல படிகள் கீழே இறங்கி வந்து தோல்வியைப் பற்றியும் பேசுமளவுக்கு நாட்டின் அரசியல் நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. இதன் காரணமாகவே தேர்தலில் நான் தோல்வியுற்றால் உடனடியாகவே ஜனாதிபதிப் பதவியிலிருந்து விலகி வெற்றி பெற்றவருக்கு வழிவிடுவேனென மஹிந்த தேர்தல் பரைப்புரைக் கூட்டங்களில் கூறி வருகின்றார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமது ஒன்பது ஆண்டுகால அரசியல் அஞ்ஞானவாசத்தை



முடித்துக் கொண்டு ஆக்ரோசமாக எழுந்து தீட்டிய திட்டம் மஹிந்தர் தரப்பை நிலைகுலையச் செய்து விட்டது. ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ரணில் அல்லது வேறொருவர் தம்முடன் போட்டியிட்டால் அவர்களை ஒரே மூச்சில் ஊதித் தள்ளிவிடலாமென எண்ணி மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந்த தற்போதைய ஜனாதிபதி அச்சத்துடன் பெருமூச்சு விடும் அளவுக்கு அரசியல் அரங்கில் திடீர் மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன.

தமது பக்கத்திலிருந்து ஒருவர் கிளம்பி வந்து தம்மை எதிர்ப்பாரென்பதைச் சிறிதும் எதிர்பார்க்காத மஹிந்த ராஜபக்ஷ தம்முடன் ஒட்டியிருப்பவர்கள் எதிரணி பக்கம் தாவுவதைத் தடுப்பதிலேயே தமது முழுக் கவனத்தையும் செலுத்தி வருகின்றார். ஆனால் நிலைமை அவரது கைகளையும் மீறிப் போகும் நிலை காணப்படுகின்றது. பலர் எதிரணியின் பக்கம் தாவியதுடன் பொது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவுக்குத் தமது ஆதரவையும் தெரிவித்து வருகின்றனர்.

தற்போதைய கள நிலைவரங்களை ஆராய்ந்து பார்க்கும் போது சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த மக்களும் மஹிந்தவைத் தவிர்த்து மைத்திரிபாலவுக்கே தமது ஆதரவை வழங்கவுள்ளனர் என்பது தெரிய வருகின்றது.

மேலும் எதிரணியின் பொது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேன தொடர்பாக இதுவரை தனிப்பட்ட குற்றச்சாட்டுக்கள் எவையும் தெரிவிக்கப்படவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர், சுகாதார அமைச்சர் என உயர்ந்த பதவிகளில் அவர் அமர்ந்திருந்தபோதிலும் கறைபடாத கரங்களுக்கு உரியவராக அவர் திகழ்ந்திருக்கிறார். தாம் சார்ந்த கட்சியை விட்டு வேறொரு கட்சிக்கு அவர் தாவவுமில்லை. இன்றும் கூட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தாமேயென அவர் கூறி வருகின்றார். தற்போது இந்தக் கட்சியைச் சேர்ந்த இருவரே ஜனாதிபதித் தேர்தலின் பிரதான வேட்பாளர்களாகக் களத்தில் உள்ளனர். மஹிந்தருக்கு எதிரான பொது வேட்பாளரைத் தெரிவு செய்த சந்திரிகா கூட அந்தக் கட்சியையே பிரதிநிதித்துவம் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைவரங்களை ஆராய்ந்து பார்க்கும்போது மஹிந்தரின் குதிரையை விட மைத்திரிபாலவின் குதிரை பந்தயத்தில் முந்தி ஓட முற்படுவது தெரிகின்றது. ஆனால் இவற்றுள் ஒன்று முதலில் வெற்றிக் கோட்டை எட்டும் போது தான் வெற்றி தோல்வி கள் தீர்மானிக்கப்படும்.


பொதுவாகவே மக்கள் ஒரே ஆட்சி தொடர்வதை விரும்புவதாகத் தெரியவில்லை. ஆட்சி மாற்றமொன்று இடம்பெறும்போது தான் தமது வாழ்க்கையிலும் மாற்றம் ஏற்படுமென இவர்கள் நினைக்கின்றனர். இதற்கு இதுவரை கிடைக்காத சந்தர்ப்பமொன்று தற்போது வாய்த்திருக்கின்றது.

மேலும் மைத்திரிபால சிறிசேன மஹிந்தரின் கூட்டத்திலிருந்து பிரிந்து வந்த பின்னர் அவரால் தெரிவிக்கப்படும் தகவல்கள் நலிந்த நிலையிலுள்ள மக்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தவே செய்யும். ஜனாதிபதியின் புதல்வரொருவர் உலங்கு வானூர்தியில் கொழும்பிலிருந்து நுவரெலியா சென்று அங்கு குதிரைச் சவாரியில் ஈடுபடுவதாக மைத்திரிபால கூறியமைக்கு மஹிந்த தரப்பினர் இதுவரை சரியான பதிலை தெரிவிக்கவில்லை. மாறாக மைத்திரிபாலவின் புதல்வர் மீது குற்றம் சுமத்தவே அவர்களால் முடிந்துள்ளது. இதன் நம்பகத்தன்மையும் உறுதிப்படுத்தப்படவில்லை. இதைவிட ஜனாதிபதியின் போக்குவரத்துச் செலவுகள், உணவுகளுக் கான செலவுகள், வேறு தனிப்பட்ட செலவுகள் ஆகியவை பற்றிய தகவல்களை அறியும் போது நாம் இலங்கையில் இருக்கின்றோமா அல்லது மன்னர் ஆட்சி இடம்பெறும் மத்திய கிழக்கு நாடொன்றில் இருக்கின்றோமா என்ற சந்தேகம் எமது மனங்களில் எழுகின்றது. இந்த நாட்டிலுள்ள சாதாரண மக்கள் அன்றாட உணவுக்கே அல்லாடும் போது ஆளும் தரப்பினரும் அவர்களைச் சுற்றியுள்ளவர்களும் ராஜபோகத்தில் மூழ்கியிருப்பதை எந்த வகையிலும் நியாயப் படுத்த முடியாது.

தமிழர் தரப்பைப் பொறுத்தவரையில் 'இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன' என்ற நிலையே காணப்படுகின்றது. பெரும்பான்மையினத் தலைவர்கள் எவருமே தமது பிரச்சினைகள் தொடர்பாக அக்கறை காண்பிக்க மாட்டார்களென்பது இவர்களுக்குத் தெரியும். ஆனால் இறுதிப் போரின்போது இடம்பெற்ற சம்பவங்களை அவர்கள் ஒருபோதுமே மறக்கப் போவதில்லை. நீதியானதும், நேர்மையுமான தேர்தலொன்று இடம்பெறுமாயின் மைத்திரிபால சிறிசேனவின் பந்தயக் குதிரை முதலில் வெற்றிக் கோட்டை எட்டிவிடுமென்பதே அனேகரின் கணிப்பாகும்.

# பெரும் தொகை முதலீட்டுடன் கால்பதித்து நிற்கும் சீனா

## அதனால் இலங்கைக்கு ஆபத்தா?




பத்தாண்டின் பின்னர் இலங்கையில் ஒரு பில்லியன் டொலர் பெறுமதியில் துறைமுகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதுடன், 209 மில்லியன் டொலர் செலவில் விமான நிலையம் ஒன்று புதிதாகத் திறக்கப்பட்டுள்ளது. 25,000 பேரை உள்ளடக்கக் கூடிய மாநாட்டு மண்டபம் மற்றும் துடுப்பாட்ட அரங்கம் போன்றனவும் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றுடன் பத்து மாடிகளைக் கொண்ட மருத்துவமனை ஒன்றும் நிர்மாணிக்கப்படுகிறது. இலங்கையில் 35,000 பேர் வரையான பொதுமக்கள் காவு கொள்ளப்பட்ட ஆழிப்பேரலை இடரால் ஏற்பட்ட பெரும்பாலான அழிவுகளை சீர்செய்வதற்கு சீனா உதவியுள்ளது.

எடுத்துக்காட்டாக, அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் 85 சதவீத நிதியை சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கி வழங்கியுள்ளது. இதன் மேலதிக விரிவாக்கத்துக்கு சீன நிறுவனங்கள் இணைந்து நிதி வழங்கவுள்ளன. அம்பாந்தோட்டை விமான நிலைய நிர்மாணத்துக்கு சீனா அதிக நிதி வழங்கியுள்ளது. இதேபோன்று கொழும்புத்துறைமுக விரிவாக்கம், புதிய நெடுஞ்சாலைகள் மற்றும் தொடருந்துப் பாதைகள் புனரமைப்புத் திட்டத்துக்கு சீனா 500 மில்லியன் டொலர்கள் வழங்கியுள்ளது. மேலும், கொழும்புக்கு அருகில் நிலச்சமப்படுத்தலுக்கு 1.4 பில்லியன் டொலர்களையும் மின் சக்தி ஆலைத் திட்டத்துக்கு 1.3 பில்லியன் டொலர்களையும் சீனா வழங்கியுள்ளது.

கடந்த பத்தாண்டில் இலங்கையில் சீனா தனது பெருந்தொகை நிதியை முதலீடு செய்ததானது மேற்குலக ஆதரவுடன் இயங்கும் நிதி நிறுவனங்கள் இலங்கையில் தக்கவைத்துக் கொண்டுள்ள இடத்தை சீனா எவ்வாறு கைய கப்படுத்தியுள்ளது என்பதைப் பிரதிபலிக்கிறது.




ஆசிய கட்டுமான முதலீட்டு வங்கிக்கு சீனா 50 பில்லியன் டொலர்களையும் சீனாவின் புதிய பட்டுப்பாதைத் திட்டத்துக்கு 40 பில்லியன் டொலர்களையும் வழங்குவதாக அண்மையில் சீன அதிபர் உறுதிப்படுத்தியுள்ளார். பல பத்தாண்டுகால போரின் அழிவின் பின்னர் இலங்கையை மீளவும் உயிர்ப்பிப்பதற்கு அதிக நிதி தேவைப்படுவதாக பெரும்பாலான இலங்கையர்கள் கருதுகிறார்கள்.

இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவடைந்ததன் பின்னர் நாட்டின் பொருளாதாரமானது ஆறு சதவீதத்தை விட அதிகரித்துள்ள போதிலும், மேற்குலக நிதி வழங்குநர்களிடமிருந்து நிதியைப் பெற்றுக்கொள்வது மிகவும் கடினமானதாக உள்ளதாக வர்த்தகர்கள் கூறுகின்றனர். குறைந்த வட்டி வீதத்தில் சீனாவின் கடன்கள் சில வழங்கப்படுவதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

சீனா மிகக் குறுகிய காலத்தில் தனது திட்டங்களை இலங்கையில் மேற்கொண்டுள்ளது என சுற்றுலாத்துறை மற்றும் சேவைகள் நிறுவனத்தின் பிரதித் தலைவர் அஜித் குணவர்த்தன தெரிவித்துள்ளார். இலங்கையின் பிரதான விமான நிலையத்திலிருந்து கொழும்பின் மத்திய பகுதி வரையான ரயில் பாதையைச் சீனா அமைத்துள்ளதால் தற்போது முன்னரை விட அரை மணி நேரத்தில் இந்தப் பயணத்தை நிறைவுசெய்ய முடியும் என அஜித் குணவர்த்தன தெரிவித்துள்ளார். இந்தப் பாதை அபிவிருத் தித் திட்டமானது 1969இல் ஆரம்பிக்கப்பட்டதெனவும் ஆனால் இலங்கையை ஆழிப்பேரலை தாக்கிய பின்னரேயே சீனாவின் நிதியுதவியுடன் மிகத் துரிதமாக நிறைவேற்றப்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மற்றையவர்களைப் பொறுத்தளவில் சீனாவால் இலங்கைக்கு வழங்கப்படும் நிதியுதவி என்பது எரிச்சலை உண்டுபண்ணுகிறது. அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்திக்கு சீனா தனது நிதியுதவியை வழங்குவதன் மூலம் சீனப் போர்க் கப்பல்களை இலங்கை தனது துறைமுகத்தில் நிறுத்துவதற்கான அனுமதியை வழங்குவதற்கு சீனா அழுத்தம் கொடுக்கலாம் என சிலர் கவலை கொள்கின்றனர். சீனா இலங்கைக்கு வழங்குகின்ற கடன்கள் தொடர்பாக வெளிப்படைத்தன்மை காணப்படவில்லை எனவும், இலங்கை இந்தக் கடனை மீளவும் வழங்காவிட்டால் என்ன நடக்கும் எனவும் சிலர் கேள்வியெழுப்புகின்றனர். அடுத்த மாதம் இடம்பெறவுள்ள அதிபர் தேர்தலில் தனக்கான ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் மட்டும் இலங்கை அதிபர் சில திட்டங்களை நிறைவேற்றுவதாகவும் சிலர் ஆதங்கம்கொள்கின்றனர்.

நாங்கள் தற்போது ஆடும் ஆட்டம் மிகவும் அபாயகரமானது. கடைசி வேளையில் நீங்கள் உங்களது முழுப் பலத்தையும் காண்பிக்க வேண்டும் என இலங்கையின் எதிர்க்கட்சி அரசியல்வாதி ஹர்சா டீ சில்வா குறிப்பிட்டுள்ளார். சீனாவின் இலங்கைக்கான ஆதரவை இந்தியா தனக்கான எச்சரிக்கையாக நோக்குகிறது. அதாவது இலங்கையில் சீனா தனது செல்வாக்கை அதிகரிப்பதானது தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது எனவும் குறிப்பாக இந்த ஆண்டு சீன நீர்மூழ்கிக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நின்றதன் பின்னர் இந்த அச்சுறுத்தல் மேலும் அதிகரித்துள்ளதாகவும் இந்தியா கருதுகிறது.

இவ்வாறான சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்றால், இந்திய மாக்கடலானது சீனக் கடற்படையினருக்குப் பரிச்சயமான ஒரு கடற்பரப்பாக ஆகி விடும் எனவும் இது சீனக் கடற்படையினர் இந்தியத் தீபகற்பத்தை இலேசாக நெருங்குவதற்கு வழிவகுக்கும் எனவும்– ஓய்வுபெற்ற இந்தியக் கடற்படைத் தளபதியும் புதுடில்லியைத் தளமாகக் கொண்டியங்கும் கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனத்தின் இயக்குநருமான உதேய் பாஸ்கர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான தமது ஆதரவானது இரு தரப்பு வர்த்தக நல்லுறவைக் கட்டியெழுப்புவதை மட்டுமே நோக்காகக் கொண்டதாகவும், இராணுவம் சார் நோக்கத்தைக் கொண்டிருக்கவில்லை எனவும் சீன வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சீன அரசின் தலைவர் என்ற வகையில் 28 ஆண்டுகளில் முதன் முதலாக சீனாவின் தற்போதைய அதிபர் செப்ரெம்பரில் இலங்கைக்கான தனது பயணத்தை மேற்கொண்டதுடன், சீனத் துறைமுக பொறியியல் நிறுவனத்தினால் கட்டப்படும் கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தையும் பார்வையிட்டார்.

இலங்கையில் சீனா இன்னமும் முதலீடுகளை மேற்கொள்ளும் எனவும் இதில் இராணுவ நோக்கங்களும் உள்ளடங்கும் எனவும் இலங்கையில் பரந்த மூலோபாய நலனை அடைந்து கொள்வதற்கான முதலீடுகளை சீனா மேற்கொள்ளும் எனவும் ஆஸ்திரேலிய தேசிய பல்கலைக் கழகத்தின் ஆய்வாளர் டேவிட் பிரேவ்ஸ்ரர் குறிப்பிட்டுள்ளார். தற்போது சீனாவின் நிதியுதவியுடன் இலங்கையின் அம்பாந்தோட்டையில் கட்டப்பட்டுள்ள புதிய அனைத்துலக விமான நிலையத்தில் நாளொன்றுக்கு அரை டசின் விமானங்கள் மட்டுமே தரையிறங்குகின்றன.

ஆழிப்பேரலை இடரின் போது 1,500 வரையான மக்கள் காவு கொள்ளப்பட்ட, 25,000 மக்களைக் கொண்ட அம்பாந்தோட்டையை சீனாவின் நிதி உதவி மாற்றிவருகிறது என்பது நிச்சயமாகும். உள்ளூர் அரசியல்வாதியாக இருந்த ராஜபக்ஷ 2005 இல் இலங்கையின் அதிபராகப் பதவியேற்ற பின்னரும், உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னரும் நாட்டில் நிதி அதிகளவில் முதலீடு செய்யப்பட்டது. சீனாவின் அபிவிருத்தித் திட்டங்களுடன் அம்பாந்தோட்டையில் மாநாட்டு மண்டபத்தை அமைப்பதற்கு தென் கொரியா நிதி வழங்கியது. ஐரோப்பிய நிதிவழங்குநர்களும் உதவினர்.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பல புதிய பெரிய திட்டங்கள் தற்போது முறைகேடாகப் பயன்படுத்தப்படுகின்றன. கடந்த ஆண்டு திறந்து வைக்கப்பட்ட புதிய விமான நிலையத்துக்குச் செல்லும் வீதியில் தெரு நாய்கள் உலாவுகின்றன. ஆனால் இந்த விமான நிலையமானது அம்பாந்தோட்டையை ஒரு சுற்றுலா மையமாக மாற்றுவதற்கு முக்கிய பங்காற்றுகிறது. அம்பாந்தோட்டையில் துறைமுக வளாகம் ஒன்று உருவாக்கப்படுகிறது. அம்பாந்தோட்டைத் துறைமுகப் பணிகள் பூரணமாக நிறைவடையும் போது அது ஆசியாவிலுள்ள மிகப் பெரிய துறைமுகங்களில் ஒன்றாகக் காணப்படும். இங்கு ஒரு மாதத்தில் 45–50 கப்பல்கள் தங்கிநிற்கின்றன.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு அருகில் தொழில் வலயம் ஒன்றை அமைத்து அதன் மூலம் உள்ளூர் தொழில் வாய்ப்பில் நலன்களை அடைவதற்கான முயற்சிகள் சீனாவால் மேற்கொள்ளப்படலாம்.

தனது கடனை அடைப்பதற்குத் தேவையான வருவாயை அம்பாந்தோட்டைத் துறைமுகம் பெறவில்லை. இந்த வேறுபாடுகளுக்கு இலங்கை அரசே பொறுப்பாகும். இது ஒரு பிரச்சினையில்லை எனவும், இங்கு புதிய வேலைகள் மற்றும் குறிப்பிடத்தக்க நலன்கள், பெரிய இலாபங்களைப் பெறக் கூடிய புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்படலாம் எனவும் உள்ளூர் நகர மேயர் எராஜ் ரவீந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நன்றி: வோல் ஸ்றீற் ஜேர்னல்

# கருத்து

## வாசகர் திருமுகம்

# மோசடி நிறுவனங்களால் ஏமாற்றப்படும் மக்கள்

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் போர் ஓய்ந்ததால் தென் பகுதி நிதி நிறுவனங்கள் பலவும் வடபகுதி நோக்கி படையெடுக்கத் தொடங்கின. வங்கிகள், லீசிங் நிறுவனங்கள், காப்புறுதி நிறுவனங்கள் என பல்வேறு நிறுவனங்கள் தமது கிளைகளை வட பகுதியில் நிறுவின. இதனைவிடசட்டவிரோதமான பிரமிட் முறையிலான நிதி நிறுவனங்களும் யாழ்ப்பாணம், வன்னி என வடக்கின் பல இடங்களிலும் தமது முகவர்கள் மூலமாகப் பல லட்சம் ரூபா பணத்தைச் சுருட்டுகின்றன.

கடந்தவாரம்கூடபிரமிட்முறையில் பொருள்களை விற்கும் ஒரு நிறுவனம் யாழ்ப்பாணத்தின் பிரபலமான ஹோட்டல்களில் கலந்துரையாடல்களை நடத்திப் பலரை தமது திட்டத்தில் இணைத்துள்ளது. அடிக்கடி பத்திரிகைகளில் இவை தொடர்பான மத்திய வங்கியின் எச்சரிக்கை வெளி வந்தும் கூடப் பலர் ஏமாந்து போகின்றனர். இதிலே மேலும் கவலைதருகின்ற விடயம்என்னவென்றால், யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பலர் கூட இந்த நிறுவனத்தில் பணம் செலுத்தி சூரியக்கலங்களைப் பெற்றுள்ளனர். அவர்களின் ஆசை வார்த்தைகளை நம்பி ஏமாறும் இவர்கள் தமது நண்பர்கள், உறவினர்கள் எனப் பலரையும் அதில் இணைக்க முயற்சிக்கின்றனர். மாணவர்கள் பலர் மிகுந்த சிரமப்பட்டு பணம் வருமென்ற நம்பிக்கையில் கடன் வாங்கிப் பெருந்தொகைப் பணத்தைச் செலுத்துகின்றனர். இதனை மாணவர்களும் மக்களும் உணர்ந்து அதற்கேற்ப இவர்களின் ஆசை வார்த்தைகளை நம்பி ஏமாறாதிருக்க வேண்டும்.


மேலும் கிராமப் புறங்களுக்குப் படையெடுக்கும் காப்புறுதி நிறுவன முகவர்கள் வறுமைக்கோட்டின் கீழுள்ள பலரை காப்புறுதியில் இணைக்கிறார்கள். அவர்களால் ஒரு சிலமாதங்கள்மட்டுமே கட்டுப் பணத்தைச் செலுத்த முடிகின்றது. பின்னர் பணம் செலுத்தப்படுவதில்லை.

இதனால் அவர்கள் ஏற்கனவே செலுத்திய பணமும் வீணாகின்றது. வன்னிப்பகுதியின் கிராமப் புறங்களில் பெரும்பாலும் அறுவடைக் காலங்களில் பலர் இவ்வாறு ஏமாந்து போகின்றனர். இரவு பகல் பாராது வயலில் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை அநியாயமாக்குகின்றனர்.

இதேபோன்று லீசிங் நிறுவனங்கள் மூலம் வாகனங்களைக் கொள்வனவு செய்வோர் குறைந்த பணத்தைச் செலுத்திவிட்டு வாகனங்களைக் கொள்வனவு செய்கிறார்கள். தொடர்ந்து தவணைக் கட்டணத்தைச் செலுத்த முடியாமல் போக நிறுவனங்கள் வாகனத்தைப் பறித்துச் செல்கின்றன. இதனால் ஏற்கனவே செலுத்திய பணத்தையும் இழக்க நேரிடுகிறது. வங்கிகளும் வியாபாரிகளுக்கு பெரும் தொகையைக் கடனாக வழங்குகின்றன. அவர்கள் அதனை முதலீடு செய்து வியாபாரத்தை ஆரம்பித்தாலும் தென் பகுதி வியாபாரிகளின் வருகையால் வியாபாரம் சரிவர நடைபெறாத காரணத்தால் வங்கிக்கடனைச் செலுத்த முடியாமல் போக வட்டிக்கு பணம் பெற்றுச் செலுத்தும் நிலை உருவாகின்றது. இதனால் கடன் அதிகமாகி தற்கொலை செய்து கொள்ளும் நிலை கூட ஏற்படுகின்றது. எனவே எமது மக்கள் இவை தொடர்பாக பூரண விழிப்புணர்வுடன் சிந்தித்து செயலாற்றுதல் அவசியமாகும்.

**வ.ஆதவன்.**

## கேலிச் சித்திரம்



நன்றி: லங்காதீப

# மக்கள் தயாராகி விட்டார்கள்

நடைபெறப் போகின்ற ஜனாதிபதித் தேர்தலில், தமிழ் மக்கள் என்ன செய்வது என்ற முடிவை எடுத்து விட்டார்கள். கடந்த காலங்களில் விட்ட தவறுகளை அவர்கள் இனிமேல் விடுவதற்குத் தயாராக இல்லை. குறிப்பாக, ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என்ற கோரிக்கையை, தமிழ் மக்கள் முதலாவதாக புறக்கணித்திருக்கின்றார்கள்.

கடந்த இரண்டு தினங்களாக வடக்கு மாகாணத்தில் தபால் மூல வாக்களிப்பு இடம்பெற்றது. முன்னைய தேர்தல்களை விட, ஜனாதிபதித் தேர்தலுக்கு அதிகளவிலானோர் தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பித்திருந்தார்கள். இதுவே மாற்றத்திற்கான முதலாவது ஆரம்பமாக இருந்தது.

இதனை விட கடந்த இரண்டு நாள்களிலும் 75 சதவீதமானோர் தமது தபால்மூல வாக்கைச் செலுத்தியுள்ளனர். வாக்களிக்கத் தவறியவர்கள் மற்றும் தேர்தல் அலுவலர்களுக்கான தபால்மூல வாக்களிப்பு எதிர்வரும் 30 திகதி இடம்பெறவுள்ளது. இதன் போது எஞ்சியவர்கள் வாக்களிக்கக் கூடும்.

இதனையும் எதிர்வுகூறல் அடிப்படையில் உள்ளடக்கிப் பார்த்தால், வடக்கில் அண்ணளவாக 85 சதவீத தபால்மூல வாக்களிப்பு இடம்பெறும் என்று சொல்ல முடியும். தபால்மூல வாக்களிப்பே, மக்களின் வாக்களிப்புக்கான அறிகுறி – கருதுகோள். அதாவது தபால்மூல வாக்களிப்பு 60 சதவீதம் வரையில் இடம்பெற்றாலே, மக்கள் 50 சதவீதத்திற்கு மேல் வாக்களிப்பார்கள் என்று கருதமுடியும்.

தபால்மூல வாக்களிப்பு அதனால்தான் பல்வேறு வகையிலும் முக்கியத்துவமானது. குறிப்பாக வடக்கிலுள்ள தமிழ் சமூகத்தைப் பொறுத்தவரையில், தபால்மூலம் வாக்களித்தவர்களே பலவற்றை தீர்மானிப்பவர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் வாக்கை யாருக்குச் செலுத்தினார்கள் என்று பொதுவெளியில் சொல்வார்கள். இதுவும் மக்களின் வாக்களிப்பையும், யாருக்கு வாக்களிக்க வேண்டியது என்பதையும் தீர்மானிக்கின்றது.

இதனால்தான், தபால்மூல வாக்களிப்பு 85 சதவீதம் வரையில் இடம்பெறலாம் என்பதன் அடிப்படையில், ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் 60 சதவீதம் வரையில் வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியும். வடக்கைப் பொறுத்தவரையில் ஆளுந்தரப்புக்கான – மஹிந்தவுக்கான வாக்கு வங்கி என்பது நிரந்தரமானது. வாக்களிப்பு வீதம் அதிகரிக்க அதிகரிக்க, எதிரணியின் – மைத்திரியின் வாக்கு வங்கியே அதிகரிக்கும். கடந்த வடக்கு மாகாணசபைத் தேர்தலிலும் இதுவே நடந்தது. 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டிருந்தார். ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்தனர். மக்களும் அதனை ஏற்றுக் கொண்டு 2005 ஆம் ஆண்டு தேர்தலைப் புறக்கணித்திருந்தனர். அதனால் ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றிருந்தார். ரணில் விக்கிரமசிங்கவை ஒன்றரை லட்சம் வாக்குகள் வித்தியாசத்திலேயே தோற்கடித்திருந்தார்.


தமிழ் மக்கள் வாக்களித்திருந்தால், நிச்சயமாக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகியிருப்பார். இவ்வளவு இழப்புக்கள் எங்களுக்கு ஏற்பட்டிருக்காது, தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டிருக்கமாட்டார்கள் என்று தமிழ் மக்கள் இப்போது எண்ணுகின்றனர். மேலோட்டமான சிந்தனையில் அவ்வாறு எண்ணுகின்றனர்.

அதனால்தான், அந்த மேலோட்டமான சிந்தனையைக் கொண்ட பெருமளவு மக்கள் கூட்டம், இந்தத் தேர்தலை புறக்கணிப்பது என்பது, மீண்டும் 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவை ஆதரித்தது போன்று அமைந்து விடக்கூடாது என்று எண்ணுகின்றார்கள். இதன் விளைவே வாக்களிக்க வேண்டும் என்று எண்ணத்தை அவர்களிடம் விதைக்கின்றது.

கடந்த 9 வருட ஆட்சியில் பட்ட துன்பத்தை இன்னமும் 7 ஆண்டுகளுக்கு பட வேண்டுமா என்பதே அந்த மக்களிடம் உள்ள கேள்வி. இதற்காக மைத்திரியையும் தமிழ் மக்கள் உத்தமராகப் போற்றவில்லை. தற்போதைக்கு சுவாசிக்க ஒரு வெளி தேவை என்பதால், மாற்றம் ஒன்றை விரும்புகின்றார்கள்.


**பத்தி எழுத்து**

## வர்ணம் தீட்டுவோம் வாங்க...



## அறிவைத் தேடுங்கள்!

வாழையடி வாழையாக வளரும் பிஞ்சுகளே!
கல்வி மலர்களைக் கொய்து கொள்ளுங்கள்
ஆசான் உரைகளைக் கேட்டு நடவுங்கள்
அறநெறியில் இளமையை அமைத்துக் கொள்ளுங்கள்
அப்பா பாட்டி காலமல்ல இந்த நவீன காலம்
விஞ்ஞானம் வான் முட்ட வளர்ந்த காலமன்றோ!
அறிவைத் தேடிக் கவனமாய்க் கற்றுத் தேறுங்கள்
ஆக்கம் செய்து அவனியில் எழுச்சி பெறுங்கள்.



## பள்ளிக் கூடம் போகலா...


பள்ளிக் கூடம்
போகலாமே
சின்ன பாப்பா –நிறைய
பிள்ளைகளோட
பழகலாமே
சின்ன பாப்பா!
ஆட்டம் பாட்டம்
கொண்டாட்டம்
சின்ன பாப்பா –கல்வித்
தோட்டம் அந்த பள்ளிக்
கூடம்
சின்ன பாப்பா!
பள்ளிக் கூடம் திறந்தாச்சி
சின்ன பாப்பா –உனக்கு
நல்ல நேரம் பிறந்தாச்சி
சின்ன பாப்பா!
வீட்டுச் செய்தி கதைகள்
பேசி
பொழுது போக்கலாம்
–அட
ஏட்டுக் கல்வி பாடம் கூட
எழுதிப் பார்க்கலாம்!
உடலும் மனமும்
வளர்வதற்கு
சின்ன பாப்பா –ஏற்ற
இடமே இந்தப் பள்ளிக்
கூடம்
சின்ன பாப்பா!
பள்ளிக் கூடம் போகலாம்
வா
சின்ன பாப்பா –நிறைய
பிள்ளைக ளோட
பழகலாம் வா
சின்ன பாப்பா!

## கண்ணீர்... கண்ணீர்...

குளிர்சாதனப் பெட்டியில் வெங்காயம், பச்சை மிளகாய், தக்காளி மூன்றும் ஜாலியாக அரட்டை அடித்துக்கொண்டிருந்தன. திடீரென்று தக்காளிக்கு ஒரு யோசனை தோன்றியது. 'நாம் மட்டும் இந்தப் பெட்டிக்குள்ளேயே அடைஞ்சு இருக்கணுமா? வெளியில் போய் ஜாலியா சுத்திட்டு வரலாமா?' என்று கேட்டது. 'ஐயோ... வேண்டாம். நமக்குத்தான் ஆபத்து' என்று எச்சரித்தது வெங்காயம். 'இங்க மட்டும் நமக்கு ஆபத்து இல்லையா என்ன? வா, போகலாம்' என்று தக்காளியின் பேச்சுக்கு ஆதரவாக குரல் எழுப்பியது பச்சை மிளகாய். வீட்டில் உள்ளவர்கள் குளிர் சாதனப் பெட்டியைத் திறந்த போது, மூன்றும் தப்பித்து வெளியே குதித்தன. அப்படியே மூன்றும் வெளி உலகத்துக்கு வந்தன. 'அடடா! வெளி உலகம் எவ்வளவு நல்லா இருக்கு, பாரேன்!' என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே, கூட்டத்தில் ஒருவன் தக்காளியை ஒரு மிதி மிதித்தான்.

அவ்வளவுதான்... தக்காளி நசுங்கி சட்னியாக மாறிவிட்டது.இதைப் பார்த்த வெங்காயமும் பச்சை மிளகாயும் கண்ணீர் விட்டு அழுதன. சற்றுத் தூரம் சென்றதும், ஒரு பாட்டி வடை சுட்டுக்கொண்டிருந்ததை இரண்டும் பார்த்தன. வாசனையால் ஈர்க்கப்பட்ட பச்சை மிளகாய், குடுகுடுவென்று ஓடி பாட்டிக்கு அருகில் நின்று எட்டிப் பார்த்தது. 'பச்சை மிளகாய் காணோமேன்னு பார்த்தேன்.. இங்கதான் இருக்கியா?' என்று கேட்டபடி, மிளகாயை நறுக்கி வடை மாவில் போட்டார் பாட்டி. தூரத்தில் நின்று

கண்ணீர்விட்ட வெங்காயம், அருகில் இருந்த பிள்ளையாரிடம் சென்றது. 'என் நண்பர்கள் இறக்கும்போது நான் கண்ணீர் விட்டேன். ஆனால், நான் இறக்கும்போது எனக்காக அழுவதற்கு யாருமில்லை' என்று வருத்தப்பட்டது வெங்காயம். 'நீ இறக்கும் போது, உனக்காக மனிதர்கள் கண்ணீர் விடுவார்கள்... கவலை வேண்டாம்' என்றார் பிள்ளையார். அன்று முதல், வெங்காயத்தின் தோலை உரிக்கும்போதெல்லாம் மனிதர்கள் கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கிறார்கள்.



# நவாலியூர் கலைஞனுக்கு ஊர்மக்களால் கௌரவிப்பு

மானிப்பாய், டிசெ.25

பன்முகசேவை – மேடை நாடகம் – ட்றம்ஸ் வாத்தியக் கலை – நகைச்சுவை நடிகர், குறுந் திரைப்பட நடிகர், திரைப் பட நடிகர் போன்ற பல தகைமைகள் பெற்றவரும், கலாபூசணம் விருது பெற்றவருமான நவாலியூர் லயன் வைத்தியலிங்கம் கமலநாதனுக்கு நவாலி சமூகம் திரண்டு வாழ்த்துத் தெரிவித்தது.

நவாலி முதியோர் சங்கத் தலைவர் மா.செல்வராசா மற்றும் முன்னாள் அதிபர் சி.நாகையா ஆகியோரின் இணைத் தலைமையில் அண்மையில் மூத்த பிரஜைகள் தின விழா நவாலி முருகானந்தா மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட சமூகசேவை அதிகாரி வே.சிவராஜா கலாபூசணம் விருது பெற்ற வை.கமலநாதனுக்கு பொன்னாடை போர்த்தி விருது வழங்கிக் கௌரவித்தார்.

சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட நவாலி கிழக்கு கிராம அலுவலர் தி.நித்தியானந்தன் மாலை அணிவித்து சிறப்பு பரிசில் வழங்கிக் கௌரவித்தார்.

மானிப்பாய் பிரதேச சபை கௌரவ உறுப்பினர் கு.சிவபாதம் மாலை அணிவித்து கௌரவித்தார்.

ஹேமலதா ஞாபகார்த்த நிதியத் தலைவர் நினைவுப் பரிசில் வழங்கிக் கௌரவித்தார். வலி. தென்மேற்கு உதவி பிரதேச செயலர் திருமதி நே.செல்வகுமாரி கலாபூசண விருது வழங்கிச் சிறப்புரையுற்றினார்.

முன்னை நாள் அதிபரும் பிரபல சமூக சேவையாளருமான லயன் நாகையா வை.கமலநாதனின் பன் முக சேவையை பாராட்டி வாழ்த்துரை வழங்கி கௌரவித்தார்.

நவாலியூர் மேரி நாயகி, வை.கமலநாதனின் வாழ்நாள் சாதனைகளை முன்நிறுத்தி வாழ்த்துப்பா வழங்கினார்.

இறுதியாக அங்கு திரண்டிருந்த முதியோர்கள் நவாலி கிழக்கு முதியோர் சங்க செயலாளர் சமூகசுடர் செல்லத்துரை மகேந்திரன் தலைமையில் பால்மா பொதிகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (வ–50)

# அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய நிர்வாக சபை தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ. 25

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் 24 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் அண்மையில் இணைய அலுவலகத்தில் நடை பெற்றது.

திருமதி சரோஜா சிவ சந்திரனின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்கு பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் நிதிநிர்வாக, அபிவிருத்தி செயற்பாட்டு அறிக்கைகள் மற்றும் 24 ஆவது ஆண்டு அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2015ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக சாந்தீகத்தின் ஜே.தற்பரனும் உப தலைவராக காருண்யா பௌண்டேஷனின் வி.கேசவன், செயலாளராக குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் எம்.வானதி, உப செயலாளராக சொண்ட் நிறுவனத்தின் திரு.எஸ்.றொற்றிக் அருட்செல்வம், பொருளாளராக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் ரி.தேவானந் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் அங்கத்த வர்களாக மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் சிசரோஜா, வைகுறோவின் ஜே.ரமணதாஸ், கியூடெக் – கரித்தாஸ் நிறுவனத்தின் ஆர்.ஏ.திலகரட்ணம், அறவழிப் போராட்டக் குழுவின் வி.ஜி.தங்கவேல் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை உள்ளக கணக்காய்வாளராக சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஆ.ருக்மணி, பத்திராதிபராக சேவாலங்கா மன்றத்தின் என்.நகுலேந்திரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (வ–10)

# ஏல விற்பனை

யாழ்ப்பாணம், டிசெ, 25

மல்லாகம் மாவட்ட, நீதிவான் நீதிமன்றங்களினால் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாதவையுமான மோட்டார் சைக்கிள்களும் சைக்கிள்களும் நாளை மறுதினம் சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளதாக பதிவாளர் தெரிவித்துள்ளார்.

அனைத்தும் குறித்த தினத்தில் அரை மணி நேரத்துக்கு முன்னர் மக்கள் பார்வைக்கு வைக்கப்படும் எனவும் ஏலத்தில் வாங்கப்படும் பொருள்களுக்கு உடன் பணம் செலுத்தி நீதிமன்ற வளவில் இருந்து அப்புறப்படுத்திவிடவேண்டும் எனவும் பதிவாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ–10)

◆◆◆

யாழ். நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் வழக்கிலக்கங்களை இனங்காணமுடியாத சைக்கிள்களின் பகிரங்க ஏல விற்பனை நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். நீதிமன்ற வளாகத்தில் நடத்தப்படும்.

குறித்த பகிரங்க ஏல விற்பனையில் சைக்கிள்களைப் பெற்றுக் கொள்பவர்கள் கொடுப்பனவுகளை காசாகவே வழங்க வேண்டும். அத்துடன் பெற்றுக் கொள்ளும் சைக்கிள்களை அன்றைய தினம் உடனடியாகவே நீதிமன்ற வளாகத்தில் இருந்து அகற்ற வேண்டும் என்று நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (வ)

## ஆக்கம்

# பாதை இனிது... பயணமும் இனிது! செவிக்கு அழகு!

பேராசையும் கடவுளும் எதிரெதிர் துருவங்கள். எங்கேபேராசை நிலவுகிறதோ, அங்கே கடவுள் இருப்பதில்லை.

– சீரடி ஸ்ரீசாயிபாபா

அவர், உலக சரித்திரத்தில் இடம் பெற்றவர். தனது ஆட்சிக் காலத்தின் முதல் நான்கு வருடங்களிலேயே அவர் இறந்திருந்தால், உலகின் மிகச் சிறந்த ஆட்சியாளர் என்ற பெயரைப் பெற்றிருப்பார் என்பது வரலாற்று ஆசிரியர்களின் கருத்து. ஆனால், அவரது ஒன்பதாண்டு கால ஆட்சியில் கோடிக் கணக்கான மக்களைக் கொன்று குவித்து, கொடுங்கோன்மைக்கு உதாரணமாகிவிட்டார். அவர்தான் அடால்ஃப் ஹிட்லர்.

தனிப்பட்ட மனிதனின் எண்ண உந்துதல்கள், சமூகத்துக்கு நலம் பயக்கலாம்; தீங்கையும் விளைவிக்கலாம். ஒரு நல்ல தலைவன் நல்லறிவும், நீண்டகால அனுபவமும் மிக்க பெரியோர்களின் சொற்களைக் கேட்டு, தனது எண்ண ஓட்டங்களை அவற்றுடன் சீர்தூக்கிப் பார்த்த பின்னரே செயலில் இறங்க வேண்டும்.

இன்றைய இளைஞர்களின் உடல் உறுப்புகளில் ஓய்வையே அறியாமல் கலங்குபவை காதுகள்தான். உண்ணும்போதும், உறங்கும்போதும், வண்டியோட்டும்போதும் என எப்போதும், தேவையற்ற பல நூறு விடயங்களை அவை உள்வாங்கியபடியே இருக்கின்றன.

கேட்டல் என்பது ஓர் அற்புதமான நிகழ்வு! காதுகளோடு மனதையும் திறந்து வைத்தால்தான் கேட்டல் முழுமை பெறும். ஒரு நல்ல தலைவனுக்குக் கல்வியறிவு மட்டுமிருந்தால் போதாது; நல்லார் இணக்கமும், கேள்வி ஞானமும் மிக முக்கியம். தனக்கு முன்னே முட்களும் புதர்களும் நிறைந்த வாழ்க்கைப் பாதையில் பயணித்த பெரியோர்களது அனுபவம் என்ற செல்வத்தை அவன் பெற்றாக வேண்டும்.

தனிப்பட்ட ஒரு மனிதனின் முயற்சி என்றால், அவன் பல முறை விழுந்தும் எழுந்தும் கற்றுக்கொள்ளலாம். ஆனால், ஒரு நிறுவனத்தின் தலைவனாக இருப்பவன், எல்லாவற்றையும் சோதனைசெய்து பார்ப்பது மிகக் கடினம். எதிர்பாராத திடீர் வெற்றிகள் தரும் மகிழ்ச்சியை அனுபவிப்பதுபோல், அதிர்ச்சியூட்டும் தோல்வியின் அடிகளையும் வலிகளையும் ஏற்றுக்கொள்வது என்பது எளிதல்ல!

கல்வியைக் கற்றுவிடலாம்; பல்கலைக் கழகத்தில் முதல் மாணவராக வெற்றிப் படிகளில் ஏறிவிடலாம். ஆனால், வாழ்க்கைத் தேர்தலில் வெற்றி பெறுவது மிகக் கடினம்.



> தனிப்பட்ட மனிதனின் எண்ண உந்துதல்கள், சமூகத்துக்கு நலம் பயக்கலாம்; தீங்கையும் விளைவிக்கலாம்.

வருங்காலத்தின் இருண்ட பாதைகளில் ஒளி பாய்ச்ச, கற்ற கல்வி மட்டும் போதாது; பெற்ற அனுபவங்களும் முக்கியம். அதிலும், பெரியோரின் வழிகாட்டுதல் மிக முக்கியம். ஒரு நல்ல தலைவன், நம்பிக்கைக்கு உகந்த மனிதர்களைச் சார்ந்திருக்க வேண்டும்.

தைத்ரீய உபநிஷத்தில், வேதம் கற்க வந்த மாணவன் தனது கல்வியை முடித்து வீடு திரும்புவதற்கு முன்னர், ஆசிரியர் அவனுக்கு நிறைவாக சில உபதேசங்களை அளிக்கிறார். உண்மை பேசு, அறவழியில் நட முதலான பல அறிவுரைகளைக் கூறிய பிறகு, பின்வருமாறு போதிக்கிறார்...

"ஒருவேளை, உனக்குக் கடமையைப் பற்றிய சந்தேகமோ, நடத்தையைப் பற்றிய ஐயப்பாடோ தோன்றினால், அறிவார்ந்த, அனுபவம் மிக்கவர்களும், நடுநிலையில் உள்ளவர்களும், அறத்தில் நிலைபெற்றவர்களுமான சான்றோர்கள் அந்தச் சூழ்நிலையில் எவ்விதம் நடந்து கொள்வார்களோ, அவ்விதமே நீயும் நடந்துகொள். இதுவே, வேதத்தின் கட்டளை; இறைவனின் கட்டளை. இவ்விதத்தில்தான் வாழ்க்கை நடத்தப்பட வேண்டும்."

பேசுவது குறைவாகவும், கேட்பது அதிகமாகவும் இருக்கவேண்டும் என்பதற்காகவே இறைவன் ஒரு வாயையும், இரண்டு காதுகளையும் கொடுத்திருக்கிறார். "காதுகளால் நல்லவற்றையே கேட்போமாக" என்று பிரார்த்தனை செய்கிறது வேதம். நல்ல தலைவன் ஆண்டாண்டு காலமாக இருக்கிற சாஸ்திரங்கள், மற்றும் அறவழியில் வாழ்கின்ற பெரியோர்களின் வழிகாட்டுதலை ஏற்றுக்கொள்வான்.

ஒரு தலைவனுக்கு, மனித புத்தியின் குறைபாடுகளை உணர்ந்து, திறந்த மனதுடன் கருத்துக்களை ஏற்றுக்கொள்கிற மனப்பக்குவம் தேவை.

காதுகளுக்கு அழகு சேர்ப்பது விதவிதமான அணிகலன்கள் அல்ல. கேள்வி ஞானமே காதுகளுக்கு உண்மையான அணிகலன் ஆகும். 'கேள்வியறிவால் துளைக்கப்படாத செவிகள் உண்மையில் கேட்காத தன்மையுடையவையே என்கிறார் திருவள்ளுவர்.

கண்ணொளியும் விளக்கொளியும் இணைந்து பார்வை உண்டாவதைப்போல, சுய அறிவும் நூலறிவும் இணைந்து நுண்ணறிவு ஏற்படுகிறது. அவ்வாறு, வாழ்நாள் முழுவதும் நல்ல விடயங்களை நிறைவாகக் கேட்டவர்களின் வாயிலிருந்து வெளிப்படுகின்ற சொற்கள் நற்சொற்களாகவே விளங்கும்.

'செவியுணவாகிய கேள்வியின் பெருமையை உணராதவர்கள் இருந்தால் என்ன, இறந்தால் என்ன? என்றுகேட்கும் திருவள்ளுவர், ஒழுக்கம் உடைய பெரியவர்களின் வாய்ச்சொற்களை, வழுக்கலான வாழ்க்கைப் பாதையில் ஊன்றுகோலாக உருவகப்படுத்துகிறார்.

செவியின் சுவையுணரா
வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்?
*(திருக்குறள்: 420)*

இழுக்கல் உடையுழி ஊற்றுக்
கோல் அற்றே
ஒழுக்கம்உடையார்வாய்ச்சொல்.
*(திருக்குறள்: 415)*

## வணிகம்



ஏசியன் அலையன்ஸ் காப்புறுதி நிறுவனத்தின் கிளை அண்மையில் திருநெல்வேலியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹெட்டியாராச்சி இதனைத் திறந்து வைத்தார். (த)

# சர்வதேச வர்த்தகக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் ஜனவரி இறுதியில்

யாழ்ப்பாணம், டிசெ, 25

யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றம், இலங்கை கண்காட்சிகள் மற்றும் மாநாட்டு சேவைகள் தனியார் நிறுவனத்துடன் இணைந்து ஆறாவது தடவையாக யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளதாகவும், இந்தக் கண்காட்சி ஜனவரி மாதம் 23ஆம், 24ஆம், 25ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாகவும் மன்றத்தின் தலைவர் கே.விக்னேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பிலான ஊடகவியலாளர் மாநாடு நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றத்தில் நடைபெற்றது.

இதில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் –

ஆறாவது தடவையாகச் சர்வதேச கண்காட்சியை யாழ்ப்பாணத்தில் ஒழுங்குபடுத்தியுள்ளோம். வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்துத் தொழில் முயற்சியாளர்களும் தமது உற்பத்தி மற்றும் சேவைகளை உள்நாட்டு மற்றும் சர்வதேச வலையமைப்புடன் இணைப்பதனூடாக தமது உற்பத்தி மற்றும் சேவைகளுக்காகப் பரந்தளவிலான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்ள ஓர் இணைப்புப் பாலமாக இது அமைகின்றது.

எமது முயற்சியாளர்கள் பொருத்தமான உள்ளீடுகள் மற்றும் இயந்திர சாதனங்களையும் அதன் பயன்பாட்டினையும் இனங்கண்டு தமது தொழிற்துறையில் பிரயோகிப்பதற்கும் இது ஒரு களமாக அமைகின்றது. இதில் சர்வதேச மற்றும் இலங்கையின் அனைத்துப் பாகங்களில் இருந்தும் வரும் முயற்சியாளர்களின் உற்பத்தி மற்றும் சேவைகளை உள்ளடக்கியதாக 250ற்கும் மேற்பட்ட காட்சிக்கூடங்கள் அமைக்கப்படவுள்ளன.


சுமார் 50 ஆயிரத்துக்கும் அதிகமான பார்வையாளர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. வடபகுதியில் உள்ள தொழில் முயற்சியாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் எமது மன்றத்தினூடாகக் காட்சிக்கூடங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். வடக்கு மாகாணத்திற்கென 30 காட்சிக்கூடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு காட்சிக் கூடத்தின் கட்டணம் 30 ஆயிரம் ரூபா. இதேவேளை கண்காட்சியைப் பார்வையிடுவதற்கான நுழைவுக்கட்டணம் 25 ரூபாவாக உள்ளபோதிலும் பாடசாலை மாணவர்கள் சீருடையில் வரும் பட்சத்தில் அவர்களுக்கான அனுமதி இலவசம்.

இதேவேளை வடமாகாண தொழிற்முயற்சியாளர்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளன. இந்த விருதுகளுக்கு வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த சிறந்த தொழில் முயற்சியாளர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். அத்தோடு 19 விருதுகளுக்காக போட்டியாளர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எதிர்காலத் திட்டங்களை கருத்தில் கொண்டு நாரா, தேசிய ஏற்றுமதியாளர்கள் மன்றம் மற்றும் சில அமைப்புக்களுடன் ஒப்பந்தங்களில் எமது மன்றம் கைச்சாத்திட்டுள்ளது. இதன் மூலம் தொழில்நுட்பம் மற்றும் புதிய விடயங்களை ஒன்றிணைத்து பரிமாற்றம் செய்வதனூடாக வடபகுதி சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களை அபிவிருத்திக்குட்படுத்த முடியும். அத்துடன் வடபகுதி உற்பத்தியாளர்களையும் தென்பகுதி ஏற்றுமதியாளர்களையும் ஒன்றிணைத்து வடக்கு உற்பத்தியாளர்களுக்கு ஏற்றுமதிச் சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்க முடியும்.

இதேபோன்ற பல எதிர்கால நீண்ட நோக்குகளுக்கான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு இலங்கை வர்த்தக மன்றத்தினரின் அனுசரணையில் சுயதொழில் முயற்சி நுண் கடனுதவித் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம். இந்தத் திட்டத்தின் ஊடாக 107 பயனாளிகள் கடன்பெற்றுள்ளனர் எனத் தெரிவித்தார். (த–10)

# தொழில்நுட்பம்



## இனி அப்பிள் ஒன்லைன்

அப்பிள் நிறுவனம் ஒன்லைன் மூலம் தனது தயாரிப்புக்களை விற்பனை செய்துவருகின்றமை யாவரும் அறிந்ததே. இந்தச் சேவை மூலம் பொருள்களை கொள்வனவு செய்வதற்கு எதிர்வரும் காலங்களில் PayPal கணக்கினையும் பயன்படுத்த முடியும் என அப்பிள் நிறுவனம் அறிவித்துள்ளது.


இந்தச் சேவை முதன் முறையாக அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளுக்கு மட்டுமே வழங்கப்படவுள்ளது. இதே வேளை தற்போது iTunes ஸ்டோர் தளத்தில் PayPal மூலமான கொள்வனவு நடைமுறையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குளோ சவுண்ட் பிளேயர் (SOUNDCLOUD)


ஒன்லைனில் ஒலிக் கோப்புக்களை தரவேற்றம் செய்து பகிர உதவும் வலைத்தளமான Sound Cloud டெக்ஸ்டாப் கணினிகளில் பயன்படுத்தக்கூடிய பிளேயர் ஒன்றினை அறிமுகம் செய்துள்ளது. இந்த மென்பொருளின் உதவியுடன் SoundCloud வலைத் தளத்திற்கு விஜயம் செய்யாமலேயே பாடல்களை கேட்ட முடியும்.

மேலும் SoundCloud கணக்கினுள் உள்நுழைந்த பின்னர் பாடல்களை தரவேற்றம் செய்தல், லைக் செய்தல், பாடல்கள் தொடர்பான அனைத்து தகவல்களையும் பார்வையிடுதல் போன்ற வசதிகளை இந்த மென்பொருள் தருகின்றது.

## பிறிக் பிறேக்கர் ஹேம் (BRICK BREAKER GAME)




கிளாஸிக் ரக கீக்கள் மற்றும் BlackBerry 10 இயங்குதளத்தினைக் கொண்டதாக BlackBerry Classic ஸ்மார்ட் கைப்பேசி அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அந்த நிறுவனம் அறிவித்துள்ளது. இந்தக் கைப்பேசியில் பயனர்களை வெகுவாக கவர்வதற்காக Brick Breaker ஹேமும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக BlackBerry நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. அத்துடன் BlackBerry 10 இயங்குதளத்தில் முதன் முறையாக கிளாஸிக் ரக கீக்கள் (Classic Navigation Keys) அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இந்தக் கைப்பேசியானது இந்த மாத இறுதியில் அறிமுகம் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




## ஹவாய் ஹொனர்6 (HUAWEI HONOR) ஸ்மார்ட் கைப்பேசி

புதிய தொழில்நுட்பங்களை உட்புகுத்தி ஸ்மார்ட் கைப்பேசிகளை வடிவமைத்து அறிமுகம் செய்துவரும் Huawei நிறுவனம், Honor 6 எனும் புதிய ஸ்மார்ட் கைப்பேசியை அறிமுகம் செய்துள்ளது. இந்தக் கைப்பேசி 5.5 அங்குல அளவு, 1920 மு 1080 Pixel Resolution உடைய தொடுதிரையைக் கொண்டுள்ளதுடன் 8 Core HiSilicon Kirin 930 Processor, பிரதான நினைவகமாக 3GB RAM, 32GB சேமிப்புநினைவகம் என்பவற்றினைக்கொண்டுள்ளது.



இவை தவிர இரட்டை சிம் வசதி, 8 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெராவையும் உள்ளடக்கியபுள்ள இந்தக் கைப்பேசி Android 4.4 KitKat இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**தவறிவிட்டது**

பல்கலைக்கழகத்துக்கும், பொற்பதி பிள்ளையார் கோயிலுக்குமிடையில் நீளக் கடித உறையுள் வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் தவறி விட்டன.

(55233) (45.7) T.P.077 990 5304

**வீடு வாடகைக்கு**

திருநெல்வேலி கலாசாலை வீதியில் இரண்டு அறைகளுடன் கூடிய சிறிய வீடு வாடகைக்குண்டு. இணைந்த குளியல் அறை மற்றும் குடிதண்ணீர் வசதியுடன்.

தொடர்பு: மனைவி - 077 738 0110,
கணவன் - 077 366 4598 (55193) (45.3)

**செல்லா சினிமா யாழ்ப்பாணம்**

இப்பொழுது காண்பிக்கப்படும்
ஆர்யா, ஹன்சிகா நடிப்பில்
25முதல்
மீகாமன்
(தினசரி 4 காட்சிகள்)
10.30, 2.30, 6.30, 9.30
AC / DTS
தைப்பொங்கல் வெளியீடு
விக்ரம் நடிப்பில் ஐ



**ஏலவிற்பனை**

யாழ்ப்பாணம் மாநகர சபை வளாகத்திலுள்ள பழைய இரும்புகள், பயன்படுத்தப்படாத தளபாடங்கள் என்பன 29.12.2014ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.10.30 மணிக்கு யாழ்.மாநகரசபை வளாகத்தில் ஏலவிற்பனை செய்யப்படவுள்ளது. இப் பொருட்களை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம் என்பதை அறியத்தருகின்றேன்.

ஆணையாளர்,
(சி18420) (12.7) மாநகர சபை, யாழ்ப்பாணம்.

**வேலைவாய்ப்பு**

பிரபல Hotel and Restaurant இற்கு பின்வரும் வெற்றிடங்களில் வேலையாள்கள் தேவை.

- ★ Manager
- ★ Account Clerk
- ★ Waiters
- ★ Room boys
- ★ Kitchen helpers
- ★ Cleaners
- ★ Receptionest

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு: 076 820 6580

**சன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) அறிவித்தல்**

சங்கத்தின் கிளைக்குழு தேர்தலில் வாக்களிக்கத் தகைமை உள்ள வாக்காளர் பட்டியல் 31.10.2014இல் மூடப்பட்டு 15.11.2014 தொடக்கம் 30.11.2014 வரை கிளைகளில் காட்சிப்படுத்தப்பட்டு பின்னர் தலைமைக் காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. எனவே வாக்காளர் பட்டி யலைப் பார்வையிட விரும்புபவர் கள் சங்க செயலாளரிடம் 25.12.2014 தொடக்கம் 31.12.2014 வரையான ஒரு வாரம் பார்வையிடலாம் என்பதனை அறியத்தருகின்றோம்.

(சி18416)(12.7) செயலாளர்.

**பெயர்மாற்றம்**

கரவெட்டி ஸ்ரீநாரதா வீதி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி என்னும் முகவரியில் வசிக்கும் வல்லி சிவகுரு ஆகிய நான் 24.12.2014 திகதியிலிருந்து எனது பெயரை வல்லி சிவலிங்கம் எனப் பெயர் மாற்றம் செய்வதோடு, இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(54155) (12.7) வ.சிவலிங்கம்

**வீடு விற்பனைக்கு**

காட்டுக்கந்தோர் ஒழுங்கை சுண்டுக்குளியில் புனரமைக்கப்பட்ட 4 அறை (ஒரு அறை மேல் மாடி) 1¼ பரப்புக் காணி, நல்ல தண்ணீர் குழாய்க் கிணறு மற்றும் சகல வசதிகளுடன் வீடு விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம். (பிரபல பாடசாலைக்கும் கச்சேரிக்கும் அருகில்)

தொடர்பு:077 247 5691
(சி/18406) (4.3.6) (29 ஆர் நிகழ்ச்சியின் 222 4528)

**கார்த்திகைக்காய் தேவை**

கார்த்திகைக்காயின் பருவம் இது. நன்கு முற்றிய கார்த்திகைக்காய்கள் நல்ல விலைக்கு வாங்கப்படும்.

தொடர்பு:
ஈஸ்வரன் கதிரேசன் அன் கோ
55/1, சிறீ மகிந்ததர்ம மாவத்தை, கொழும்பு 09
(53206) (12.7) TP: 011 267 7077/011 269 7729

**பெயர்மாற்றம்**

4ஆம் வட்டாரம், புங்குடுதீவைச் சேர்ந்த வீரசிங்கம் ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை விசுவலிங்கம் எனப் பெயர்மாற்றி சகல ஆவணங்களிலும் கையெப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(53830) (12.7) விசுவலிங்கம்

**முதலாவது பிறந்தநாள் வாழ்த்து**



செல்வன் சாந்தகுமார் சந்தோஷ்

திரு.திருமதி சாந்தகுமார் கௌரி தம்பதியரின் அன்புப் புதல்வன் சந்தோஷ் (சபரிசன்) தனது முதலாவது பிறந்தநாளை இன்று (25.12.2014) வியாழக்கிழமை ஜேர்மனியிலுள்ள அவரது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார். குட்டி சந்தோஷ் சீரும் சிறப்புடனும் நீடுழிகாலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
சித்தி கல்யாணா குடும்பம் (ஜேர்மனி)
சித்தி ஜெயா குடும்பம் (ஜேர்மனி)
சித்தி காஞ்சனா குடும்பம் (இலங்கை
தாத்தா நாகலிங்கம்
அம்மம்மா தேவி
அப்பப்பா கெங்காதரன், அப்பம்மா சரோசினிதேவி
சித்தப்பா செல்வா
மற்றும் உறவினர்கள்.





(54206)(12.7)

# உலகச் செய்திகள்




## கே.பாலசந்தருக்கு அஞ்சலி

இயக்குநர் 'சிகரம்' என்று அழைக்கப்படும் கே.பாலசந்தரின் பூதவுடலுக்கு அரசியல் தலைவர் கள், திரையுலகப்பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பல தரப் பினரும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்த பிரபல இயக்குநர் கே.பாலசந்தர், தமது 84 ஆவது வயதில் நேற்றுமுன்தினமிரவு காலமானார். மருத்துமனையில் இருந்து அவரது உடல், சென்னை மைலாப்பூரில் உள்ள அவரது வீட்டில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. (ஓ–ரி)



தென்பிராந்திய விமானப்படையின் 30வது ஆண்டுவிழாவை முன்னிட்டு, திருவனந்தபுரம் சங்குமுகம் கடற்கரையில் விமானப்படையினர் சாகச நிகழ்ச்சி நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

## முன்னாள் பிரதமர் வாஜ்பாய்க்கு பாரதரத்னா விருது



இந்தியாவின் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் மற்றும் கல்வியாளர் மதன் மோகன் மாளவியா ஆகியோருக்கு பாரதரத்னா விருது வழங்கப்படவுள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவரான வாஜ்பாய் இரு முறை இந்தியாவின் பிரதமராக பதவி வகித்தவர். மக்களவைக்கு 9 முறையும், மாநிலங்களவைக்கு 2 முறையும் அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதே போல் கல்வியாளர் மதன் மோகன் மாளவியாவுக்கும் பாரதரத்னா விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் சாரண இயக்கத்தை நிறுவியவர்களில் ஒருவரான மதன் மோகன் மாளவியா காசி பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகவும் இருந்துள்ளார்.

இவர் இந்திய சுதந்திர போராட்டத்தில் பங்கெடுத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஓ–ரி)

## அமெரிக்காவில் அதிவேக ரயில் அறிமுகம்



அமெரிக்காவில் அதிவேக டியூப் ரயில்சேவை அறிமுகப்படுத்தப்பட உள்ளது. லொஸ்ஏஞ்சல்ஸிலிருந்து சான்பிரான்சிஸ் கோவுக்கு ரயிலில் பயணம் செய்வதற்கு தற்போது 12 மணித்தியாலநேரம் எடுக்கிறது. ஆனால் அந்த டியூப் ரயிலில் 35 நிமிடங்களில் சென்றடையலாம் என்று கூறப்படுகிறது. அதாவது அந்த ரயில் மணிக்கு 1200 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லக்கூடியதாகத் தயாரிக்கப்படுகிறது.

உலகம் முழுவதிலுமிருந்து 100க்கும் மேற்பட்ட தொழில் நுட்ப வல்லுநர்கள் இந்த ரயிலை உருவாக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## தீவிரவாதிகள் தாக்குதல் அசாமில் 40பேர் சாவு

புதுடில்லி, டிசெ. 25

அசாமின் இரு வேறு மாவட்டங்களில் போடோ தீவிரவாதிகள் நேற்றுமுன்தினம் தொடர் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இதில் 40க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

அங்கு மோசமான நிலை நிலவுவதைத் தொடர்ந்து, உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளார்.

அருணாச்சலப் பிரதேச எல்லையோர அசாம் மாவட்டங்களான சோனித்பூர் மற்றும் கோக்ரஜாரின் மக்கள் மீது போடோ தீவிரவாதிகள் அடுத்தடுத்து தாக்குதல் நடத்தியுள்ளனர்

அந்தத் தாக்குதல்களில் சாவடைந்தவர்களின் 40 உடல்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன. தொடர்ந்து பல்வேறு இடங்களிலிருந்து உடல்கள் மீட்கப்பட்டு வருகின்றன.

அந்தத் தாக்குதல்களைத் தொடர்ந்து அசாம் மற்றும் அருணாச்சலப் பிரதேச எல்லைக் கிராமங்களில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாநிலமுதல்வர் தருண் கோகாய் மற்றும் அதிகாரிகள் பாதிக்கப்பட்ட மாவட்ட மக்களை நேரில் சந்தித்துள்ளனர்.

அந்தத் தாக்குதல்கள. குறித்து அந்த மாநில சட்டம் ஒழுங்கு ஆணையர் எஸ்.என். சிங் தெரிவிக்கையில், இதற்கு முன்னதாக ஏற்பாடு செய்யப்பட்ட அமைதிப் பேச்சுக்கு போடோ தீவிரவாதிகள் ஒத்துழைக்க வில்லை. அதனையடுத்தே இந்தத் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன என்று தெரிவித்தார். (ஓ–ரி)

## தலிபான்களை ஒடுக்க பாக். - ஆப்கன் ஒப்பந்தம்

இஸ்லாமாபாத், டிசெ. 25

ஆப்கானிஸ்தானுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான எல்லைப் பகுதி வழியாக மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளை ஒருங்கிணைந்து ஒடுக்கிவிட பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் ஒப்பந்தமொன்றை மேற்கொண்டுள்ளன. பெஷாவர் தாக்குதல் தலிபான்களுக்கு எதிரான ஆத்திர உணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

இஸ்லாமாபாத்தில் இது தொடர்பாக ஆப்கானிய இராணுவத் தளபதி முகமது கரீமியும், பாகிஸ்தான் இராணுவத் தளபதி ரஷீல் ஷெரிப்பும் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்தக் கூட்டத்தில் ஆப்கானிஸ்தானில் நேட்டோ படைநடவடிக்கைகளுக்குத் தலைமை வகிக்கும் தளபதியான ஜெனரல் ஜோன் கேம்பெல்லும் கலந்து கொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ–ரி)

## தொட்டால் தோல் உரியும் குழந்தை




அமெரிக்காவில் பிறந்து மூன்று மாதமான குழந்தை ஒன்று, தொட்டாலே உடலில் தோலுரிந்து கொப்புளங்கள் ஏற்படும் அரிய நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்ணியா மாநிலத்தில் உள்ள லிங்கன் நகரில் வசிக்கும் ஜாசன்–கிறிஸ்டி என்ற தம்பதியினருக்கு கடந்த ஒக்டோபர் மாதம் பெண் குழந்தை பிறந்துள்ளது.

தோலுரியும் அரிய வகை நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தையை பெற்றோர்கள் அணைக்க முடியாத நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. குழந்தையை தொட்டாலோ, அணைத்தாலோ உடனே குழந்தையின் உடலெங்கும் தோலுரிந்து கொப்புளங்கள் தோன்றிவிடுகின்றன. இதனால் குழந்தைக்கு அதிக வலி ஏற்பட்டு அழத் தொடங்குகிறது. மேலும் இந்த நோய்க்கான இன்னும் சிகிச்சை முறை எதுவும் இதுவரை கண்டுபிடிக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

## விதம் விதமான குகைகள்; தனி மனிதனின் சாதனை



அமெரிக்காவின் நியூ மெக்ஸிக்கோ மலைப் பகுதியில் நபர் ஒருவர் தான் மட்டுமே தனித்துச் செயற்பட்டு, கடந்த 25 ஆண்டுகளாக மலைகளை குடைந்து குகைகளை வடிவமைத்துக் கொண்டிருக்கிறார். எவ்ருடைய உதவியும் இல்லாமல் தாம் சுயமாகவே குகைகளை வடிவமைக்கும் கட்டடக் கலையைக் கற்றுக் கொண்டு செயற்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் குகைகள் பலருக்கும் இத்தனை வருடங்களாகத் தெரியாத நிலையிலேயே இருந்துள்ளது.

வெளியில் இருந்து இந்த மலைப் பகுதிகளைப் பார்க்கும் எவருக்கும் அதனுள்ளே இந்த நபரால் வடிவமைக்கப்பட்டிருக்கும் அழகிய மற்றும் அதிசய குகைகள் கண்களில் புலப்படா. தனது செல்ல நாயுடன் இந்தக் குகை வடிவமைக்கும் பணியை தாமே தனித்துச் செய்து வரும் இவர், இந்தப் பணிக்காக சாதாரண கருவிகளான கோடாரிகள், கரண்டிகள் போன்றவற்றை மட்டுமே பயன்படுத்தி வந்துள்ளார். இந்தக் குகைகளின் உள்ளே சென்று பார்த்தால், சுவர்களில் பலவிதமான வடிவமைப்புகளில், அழகான செதுக்கல்கள் காணப்படுகின்றன. கோடரிமூலம் குகைகளைத் தோண்டும் அவர் பின்னர் அந்த மண்ணைத் தானே ஒரு சிறிய வண்டி மூலம் அள்ளி எடுத்துக்கொண்டு வந்து வெளியே வேறு இடத்தில் கொட்டிவிடுகிறார். மேலும் மற்றவர்களுக்காக இந்தப் பணியைச் செய்யும்போது அவர் ஒரு மணி நேரத்திற்கு 12 அமெரிக்க டொலர் மட்டுமே பெறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை அவர் 12 பிரம்மாண்டமான குகைகளை வடிவமைத்துள்ளதாக தெரியவந்துள்ளது. மேலும், இந்த 12 குகைகளில் ஒவ்வொன்றும் வெவ்வேறு விதமான முறையில் கட்டடக்கலை நிபுணர்களே அதிசயிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

## கால மாற்றங்களை அறிய உதவிய வெண்கலத் தட்டு



1999ஆம் ஆண்டில் தோண்டி எடுக்கப்பட்ட வெண்கலத்தட்டை விண்ணியல் ஆராய்ச்சியாளர்கள் சோதனைக்கு ஈடுபடுத்தியுள்ளனர். இந்த நெப்ரா ஸ்கை டிஸ்க், மத்திய வெண்கல காலத்தில் வாழ்ந்த மக்களால் செய்யப்பட்டதாக கருதப்படுகிறது. மற்றும் இது முதன் முதலாக உருவாக்கப்பட்ட 'வான் வரைபடம் என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர். இந்த வெண்கலத் தட்டு, சுமார் 32செ.மீ விட்டம் கொண்டது. மேலும் தெளிவான சந்திரன் சூரியன்மற்றும்சிலநட்சத்திரங்களைக் குறிக்கும் வகையில்தங்கத்திரவத்தினால் அழகு படுத்தப்பட்டுள்ளது.

வெண்கலக் காலத்தில் வாழ்ந்த மக்கள், வசந்த மற்றும் இலையுதிர்காலத்திற்கேற்றவாறு விதைகளை விதைப்பதற்கும் மற்றும் பயிர்ச்செய்கை செய்வதற்கும் காலநிலையை மிகச் சிறந்த முறையில்கணிக்கஉதவும்வகையில் இந்தத் தட்டு இருந்திருக்கும் என்று நிபுணர்கள் நம்புகின்றனர். (ஓ–ரி)

# சாவுத் தண்டனை விதிப்பு

## பங்களாதேஷ் முன்னாள் அமைச்சருக்கு

டாக்கா, டிசெ.24

பங்களாதேஷ் போர்க்குற்ற வழக்கில் முன்னாள் அமைச்சர் சையத் முகமது கைசருக்கு சாவுத் தண்டனை விதித்து, சர்வதேசக் குற்றத் தீர்ப்பாயம் பரபரப்புத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

பங்களாதேஷ் ஜெனரல் எச்.எம். எர்ஷாத் தலைமையில் இராணுவ ஆட்சி நடைபெற்ற போது சையத் முகமது கைசர் அமைச்சர் பதவி வகித்தார்.

அவர், அங்கு 1971ஆம் ஆண்டு சுதந்திரப் போர் நடைபெற்ற போது, பாகிஸ்தான் ஆட்சியாளர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டு, தனது சொந்த ஊரான ஹாபிகஞ்சிலும், பிராமன்பாரியாவிலும், சுதந்திரப் போராட்டத்துக்கு ஆதரவானவர்களை தனது கைசர் பானி போராளி கள்படைமூலம் கொன்று குவித்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்து.



அதுதொடர்பாக விசாரணை நடத்துவதற்கு பிரதமர் ஷேக் ஹசீனா 2010ஆம் ஆண்டு சர்வதேச குற்றத் தீர்ப்பாயத்தை அமைத்தார். அதில் சையத் முகமது கைசர் உட்பட பல்வேறு அரசியல் தலைவர்கள் மீது போர்க்குற்ற வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

அந்தக் குற்றத் தீர்ப்பாயத்தில், சுதந்திரப் போராட்ட கால கட்டத்தில் நிராயுதபாணிகளாக இருந்த 150க்கும் மேற்பட்ட பொது மக்களை சையத் முகமது கைசரின் போராளி படை கொன்று குவித்ததாகவும், வீடுகளை தீயிட்டுக் கொளுத்தியதாகவும் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

அதற்கான விசாரணை முடிந்து தீர்ப்புக்காக சையத் முகமது கைசர், தீர்ப்பாயத்தில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டார். தீர்ப்பின் போது தீர்ப்பாயம், அவர் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்குஇடமின்றிநிரூபிக்கப்பட்டதாகக் கூறி அவருக்கு சாவுத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியுள்ளது. அந்தத் தீர்ப்பின்மூலம், சர்வதேச குற்றத் தீர்ப்பாயத்தால் சாவுத் தண்டனைவிதிக்கப்பட்ட 15ஆவதுநபர் சையத் முகமது கைசர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ–ரி)

## பிறந்த நாளைக் கொண்டாடிய கொரில்லா

### விருந்து பரிமாறிய அதிகாரிகள்

ஓஹியோ, டிசெ. 25

உலகின் மிக அதிக வயதுடைய பெண் கொரில்லாவான கோலோ தனது பிறந்த நாளை தான் வசித்து வரும் அமெரிக்கப் பூங்காவில் கேக் வெட்டி கொண்டாடியுள்ளது. 1956 ஆம் ஆண்டு ஓஹியோவில் உள்ள கொலம்பஸ் பூங்காவில் கோலோ பிறந்தது. உலகளவில் மிக அதிக வயதுடைய கொரில்லா இதுதான் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தப்பூங்காவில்வசித்து வரும் கொரில்லா கோலோவின்பிறந்த நாளைக் கொண்டாட அங்கு பணியாற்றும்அதிகாரிகள்வேர்க்கடலை வெண்ணெய், அப்பிள் சோஸ், தேன், துண்டு துண்டாக நறுக்கப்பட்ட கரட் மற்றும் தயிரிலிருந்து பெறப்படும் ஒரு வகை பொருள் ஆகியவற்றைக் கொண்டு கேக்கை தயாரித்தனர்.

மிகுந்த மகிழ்ச்சியுடன் கோலோ அந்தக் கேக்கை வெட்டி தனது பிறந்தநாளைக்கொண்டாடியது. அதுமட்டுமல்லாமல் கோலோவுக்கு சிறப்பு விருந்தும் அளிக்கப்பட்டது. அந்த விருந்தில் கிச்சிலி பழங்களும், தக்காளிப் பழங்களும் கோலோவுக்கு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ–ரி)





கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு விழாக்கோலம் பூண்டுள்ள லண்டன் நகரம்.

## நேட்டோவில் சேருவதற்கான முதல்படியை எடுத்தது உக்ரைன்

அணிசேரா நிலையை கைவிடுவதற்கும் நேட்டோ உறுப்பினர் தகுதிக்காக செயற்படுவதற்கும் ஆதரவாக உக்ரைன் நாடாளுமன்றம் வாக்களித்துள்ளது. உக்ரைன் நாட்டின் அணிசேரா நிலையைக்கைவிடுவதற்கும்நேட்டோ உறுப்பினர் தகுதிக்காக செயற்படுவதற்கும் ஆதரவாக அந்நாட்டின் நாடாளுமன்றம் வாக்களித்துள்ளது.

உக்ரைனின் இந்த முடிவு எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்று தெரிவித்துள்ள ரஷ்ய வெளியுறவு அமைச்சர் சர்கே லவ்ராவ், இது பதற்றநிலையை அதிகரிக்கும் என்றும் தெரிவித்துள்ளார். உக்ரைனின் கிழக்கில் உள்ள போராளிகளுக்கு ரஷ்யா அளித்துவரும் ஆதரவுக்கு எதிராகநேட்டோஉறுப்பினர்தகுதியை நாடுவதாக அந்தநாட்டு அதிபர் பெட்ரோ பொரொஷெங்கோ தெரிவித்துள்ளார். கடந்த மார்ச் மாதம் கிரைமியன் குடாநாட்டினை இணைத்துக்கொண்ட ரஷ்யா, அந்நாட்டு போராளிகளுக்குஆயுதங்கள்வழங்குவதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளது. அந்த வாக்களிப்புக்குமுன்னதாகபேசியஉக்ரைன் வெளியுறவுஅமைச்சர்பாவ்லோ க்ளிம்கின், ஐரோப்பா மற்றும் மேற்கு நாடுகளை நோக்கியே உக்ரைன் செயற்படும் என்று தெரிவித்தார். (ஓ–ரி)

## 60 பத்திரிகையாளர் 2014 இல் படுகொலை

இந்த ஆண்டில் மட்டும் உலகெங்கிலும் 60 பத்திரிகையாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று பத்திரிகையாளர் பாதுகாப்பு குழுவின் ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

மேலும், கடந்த சில ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது இந்த எண்ணிக்கை குறைவானதுதான் என்று அந்தக் குழு குறிப்பிட்டுள்ளது.

குழுவின் ஆய்வின்படி 44 சதவீத பத்திரிகையாளர்கள் தங்களது பணியின் காரணமாக திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் பல சர்வதேச பத்திரிகையாளர்கள்மோசமானமுறையில் மிரட்டல்களுக்கும் பல வகைகளிலான அச்சுறுத்தலகளுக்கும்உலகெங்கும் ஆளாகி வருவதும் குறிப்பிடத்தக்கது.



## ஜேர்மனியில் இஸ்லாம் மதத்துக்கு எதிரான போராட்டம்

பேர்லின் டிசெ 25

ஜேர்மனிய நகரான ட்ரெஸ்டனில், இஸ்லாம் மதத்துக்கு எதிராக நடந்த பேரணியில் 17,500 பேர் கலந்து கொண்டதாகஉள்ளூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பேரணியில் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் கிறிஸ்மஸ் பாடல்களைப் பாடுவதிலும், குடிவரவு மற்றும் புகலிடம் கோருவோர் பற்றிய உரைகளை கேட்பதிலும் ஈடுப்பட்டிருந்தனர்.



ஐரோப்பா இஸ்லாமிய மயமாக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும்தேசப்பற்று மிக்க ஐரோப்பியர்கள் அல்லது பெகிடா என்றழைக்கப்படும் இந்த அமைப்பினைச் சேர்ந்தவர்கள், கடந்த ஒக்டோபர் மாதம் முதல் வாரந்தோரும் இஸ்லாம் மதத்திற்கு எதிரான போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

ஜேர்மனியில் குடியேறும் இஸ்லாமியர்களால் ஜேர்மனிய மக்களின் இயல்பு வாழ்க்கை அச்சுறுத்தலுக்குள்ளாகிறது என்றும், இஸ்லாம் அமைதியானமதம்அல்லஎன்றும்போராட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர். தாங்கள் கிறிஸ்தவ மதத்தை பாதுகாப்பதாக இந்தப் போராட்டக்காரர்கள் தெரிவித்தாலும், அவர்கள் வலதுசாரி தீவிரவாதத்தை வளர்ப்பதாக விமர்சகர்கள் கூறுகின்றனர்.

பெகிடாவின் இந்தப் போராட்டங்களுக்கு அந்தநாட்டின் முக்கிய அரசியல் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.(ஓ–ரி)

# பல்சுவை

## ஆண் பிள்ளைகளைப் பெறுவதனால் இறப்பின் பின் மோட்சத்தை நாம் அடைய முடியுமா?

ஆண்பிள்ளைகளைப் பெற்றால், தமது இறப்பின் பின்னர் அவர்கள் செய்யும் சிரார்த்த சடங்கின் மூலம் தாம் மோட்சத்தை அடைய அவர்களின் உதவி கிடைக் கும் என்ற பிழையான எண்ணத்தைப் பலர் கொண்டுள்ளனர்.

ஆண் பிள்ளைகளை உடையவர்கள் மோட்சத்தையும் ஆண்பிள்ளைகள் அற்றவர்கள் நரகத்தையும் அடைவார்கள் என எண் ணுவதும், அதேபோல மடைமைத்தனமாகும்.



சாயி சிந்தனை

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | 6 | 4 | 2 | | | | 7 |
| 3 | | | | | | | | |
| 8 | | | | 7 | | 1 | | 3 |
| 4 | 7 | 1 | | 9 | 5 | | | 2 |
| | 8 | | 3 | | 6 | | 1 | |
| 6 | | | 7 | 1 | | 9 | 8 | 4 |
| 1 | | 9 | | 6 | | | | 8 |
| | | | | | | | | 9 |
| 7 | | | | 3 | 8 | 6 | | 1 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 6 | 2 | 5 | 9 | 3 | 7 | 4 |
| 5 | 3 | 4 | 1 | 7 | 6 | 9 | 2 | 8 |
| 9 | 2 | 7 | 4 | 8 | 3 | 6 | 1 | 5 |
| 6 | 9 | 2 | 8 | 1 | 4 | 5 | 3 | 7 |
| 4 | 5 | 1 | 3 | 2 | 7 | 8 | 9 | 6 |
| 7 | 8 | 3 | 9 | 6 | 5 | 2 | 4 | 1 |
| 3 | 7 | 5 | 6 | 9 | 1 | 4 | 8 | 2 |
| 1 | 4 | 8 | 5 | 3 | 2 | 7 | 6 | 9 |
| 2 | 6 | 9 | 7 | 4 | 8 | 1 | 5 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என் றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப் பப்படு கையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்க னவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | முல்லைத் தீவு | வவுனியா | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 750 | 1000 | 600 | - |
| நண்டு | 200 | 550 | 340 | 480 | 250 | 350 |
| கணவாய் | 450 | 500 | 580 | 400 | 500 | – |
| பாரை | 450 | 500 | 410 | – | 600 | 400 |
| சுறா | – | 550 | – | 780 | 600 | 480 |
| சீலா | 300 | 400 | 390 | 400 | 300 | 300 |
| விளை | 550 | 400 | 330 | 700 | 600 | 350 |
| முரல் | 300 | 200 | 320 | 230 | – | – |
| கும்பிளா | 400 | 300 | 330 | 320 | 500 | – |
| கிழாக்கன் | 200 | 500 | 380 | 360 | – | – |
| ஒரா | 300 | 250 | 370 | 340 | 250 | 250 |
| திரளி | 250 | 250 | 240 | 280 | 300 | – |
| நகரை | 150 | 250 | 270 | 240 | – | – |
| சூடை | 120 | 100 | 100 | 100 | – | 100 |
| ஒட்டி | 200 | 200 | 190 | 210 | – | – |
| திருக்கை | 320 | 350 | 340 | 370 | 300 | 120 |

## நாளை

**மார்கழி-11 வெள்ளிக்கிழமை**
**26.12.2014**

திதி: பஞ்சமி மு.இ.09.56 வரை

நட்சத்திரம்: அவிட்டம் பி.ப.03.22 வரை

சுபநேரம்: 06.27-07.57 வரை

இராகுகாலம்: 10.57-12.27 வரை

## வெற்றி காணும் வழிமுறைகள்

ஒரு முட்டைக்குள் தங்கம் மறைந்திருக்கிறது என்று கற்பனை செய்யுங்கள். இனி ஒவ்வொரு பிரச்சினையையும் ஒரு முட்டையாகக் கற்பனை செய்யுங்கள். அதற்குள் ஒரு தங்கம் மறைந்திருக்கிறதாக நினையுங்கள், இதுவே பிரச்சினையை வெற்றியாக்கும் வழியாகும்.

ஒரு பிரச்சினையை வேதனை என்று கருதாதீர்கள். அப்படிக் கருதினால் அந்த வேதனையை உங்கள் பிள்ளைகளுக்கும் கொடுத்துவிடுவீர்கள். பிரச்சினையை ஒரு முட்டையாகவும் அதில் தங்கம் மறைந்திருக்கிறது என்றும் நினைத்தால் நீங்களே அந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பீர்கள்.

ஆர்வமும் துடிப்பும் உள்ள சக்தியை நீங்கள் உருவாக்கினால் உங்கள் குடும்பம் பயனுள்ள ஓர் இலட்சியத்தை அடையும்.

எமது தூய உணர்வின் தரத்தை உயர்த்திக் கொள்ளாததால்தான் மனம் திரும்பத் திரும்ப பேசுகிறது. ஒரு புலி இரையை உன்னிப்பாக நோக்குவதுபோல எண்ணங்களை அவதானித்து ஒன்று இரண்டு என்று இலக்கமிடுங்கள். ஒரு கட்டத்தில் அவை நின்று மனம் சாந்தியடையும்.

உள்மன நிலைமைகளை விவேகத்துடன் கையாண்டு உங்களை அவமானப் படுத்தியதால் வரும் துன்பங்களை மறக்கக் கற்றுக்கொள்ளுங்கள். அவற்றை மனதில் வைத்திருந்தால், அவை நல்ல சிந்தனைகளின் வீச்சுக்கு தடையாகிவிடும்.



## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | முல்லைத் தீவு | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கத்தரி | 200 | 180 | 220 | 240 | 270 | 220 | 190 | 240 | 150 |
| கரட் | 120 | 170 | 230 | 200 | 190 | 280 | 230 | 240 | 220 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 50 | 40 | 60 | 50 | 60 | 20 |
| பயிற்றை | 250 | 300 | 260 | 300 | 290 | 240 | 270 | 260 | 250 |
| பாகல் | 400 | 400 | 300 | 310 | 300 | 260 | 250 | 260 | 150 |
| கருணைக்கிழங்கு | 50 | 50 | 60 | 260 | 240 | 90 | 80 | 120 | 50 |
| பெ.வெங்காயம் | 120 | 140 | 190 | 110 | 100 | 160 | 150 | 160 | 120 |
| சி.வெங்காயம் | 60 | 120 | 130 | 120 | 130 | 140 | 130 | 160 | 90 |
| பூசணி | 40 | 50 | 60 | 40 | 50 | 60 | 60 | 80 | 35 |
| தக்காளி | 220 | 200 | 270 | 220 | 210 | 220 | 210 | 280 | 190 |
| வாழைக்காய் | 70 | 60 | 70 | 80 | 90 | 120 | 80 | 120 | 80 |
| கீரை | 50 | 70 | 70 | 50 | 40 | 50 | 40 | 50 | 45 |
| பொன்னாங்காணி | 15 | 50 | 50 | 40 | 30 | 40 | 30 | 20 | 15 |
| மிளகாய் | 500 | 400 | 480 | 480 | 500 | 600 | 600 | 800 | 450 |
| புடோல் | 120 | 120 | 140 | 130 | 140 | 140 | 120 | 150 | 80 |
| கோவா | 120 | 120 | 180 | 190 | 170 | 160 | 140 | 150 | 80 |
| வெண்டி | 180 | 160 | 190 | 170 | 190 | 160 | 150 | 140 | 70 |
| போஞ்சி | 220 | 200 | 230 | 260 | 280 | 180 | 170 | 280 | 100 |
| லீக்ஸ் | 280 | 300 | 320 | 330 | 320 | 320 | 300 | 300 | 200 |
| தேங்காய் | 30 | 45 | 50 | 40 | 30 | 50 | 40 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 90 | 100 | 100 | 90 | 110 | 80 | 140 |
| தேசிக்காய் | 100 | 60 | 110 | 100 | 120 | 60 | 110 | 120 | 50 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 18 | 22 | 20 | 30 | 20 | 15 |

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### மனத்திலிருந்தே அனைத்தும் பிறக்கிறது

எந்தவொரு மனிதனது குணத்தை எடுத்துக் கொண்டாலும் உண்மையில் அது அவனது மனப்போக்குகள் அனைத்தினதும் முழுவடிவமாகும். அவை மனப்பாங்கின் திரட்சியே தவிர வேறில்லை எனவே குணத்தை உருவாக்குவதில் துன்பமும், இன்பமும் சரிசமமான பங்கு வகிக்கின்றன. குணத்தைச் செப்பனிடுவதிலும் நன்மை, தீமை இரண்டுக்கும் சம இடம் உண்டு. சிலவேளைகளில் இன்பத்தை விடத் துன்பமே சிறந்த ஆசிரியராக அமைகிறது. உலகம் தந்துள்ள உயர்ந்த மனிதர்களின் வாழ்வை ஆராய்ந்தோமானால், பெரும்பாலானவரின் வாழ்க்கையில் இன்பங்களைவிடத் துன்பங்களே, செல்வத்தைவிட வறுமையே அவர்களுக்குப் பாடமாக அமைந்துள்ளன. புகழ்மொழிகளைவிட ஏமாற்றங்களே, வாழ்க்கை அனுபவங்களே அவர்களது அக ஆற்றல்களை வெளியே கொண்டு வந்துள்ளன என்பது வெளிப்படை உண்மையாகும். இந்த அறிவு என்பது மனிதனிடம் இயல்பாக இருக்கின்ற ஒன்று. எந்த அறிவும் மனிதனுக்கு வெளியே இருந்து வருவதில்லை. அவை உள்ளேயே இருக்கின்றன. ஒரு மனிதன் முழுமையாகின்றான் என்பது சரியான மன இயல் மொழியில் கண்டுபிடிக்கிறான் அல்லது திரையை விலக்குகிறான் என்றே சொல்ல வேண்டும். அதுபோலவே ஒரு மனிதன் கற்கிறான் என்பது உண்மையில் அவன் எல்லையற்ற அறிவுச் சுரங்கமாகிய தனது சொந்த ஆன்மாவை மூடியிருக்கும் திரையை விலக்கிக் கண்டுபிடிப்பதையே குறிக்கும். நியூட்டன் புவியீர்ப்பைக் கண்டுபிடித்தார் என்று கூறுகிறோம். அந்தக் கண்டுபிடிப்பு ஒரு மூலையில் உட்கார்ந்து அவருக்காகக் காத்துக் கொண்டிருக்கவில்லை. அது அவரது மனத்தில் இருந்தது. தருணம் வந்ததும் அவர் கண்டுபிடித்தார். இதுவரை உலகம் பெற்றுள்ள எல்லா அறிவும் மனத்திலிருந்து வந்ததேயாகும். பிரபஞ்சத்தின் எல்லையற்ற நூல் களஞ்சியம் உங்கள் சொந்த மனத்துக்குள்ளேயே இருக்கிறது.

# சோதிடம்




## உங்களுக்கு எப்படி?

### 1 கூட்டெண் பலன்கள் 1-5

சூரியனும், புதனும் ஆதிக்கம் செலுத்தும் மனிதராவார். அளவானஉயரத்துடன்பளிச்சென்று அழகாகக் காணப்படுவார். பூசினாற் போல் சதைப்பற்றிருக்கும் நல்ல நிறத்துடன் இருப்பதுடன் கை, கால் அளவெடுத்தாற்போல் அமைந்திருக்கும். வசிகரிக்கும் கண்களும், இளமைகவர்ச்சி மாறாமலும் இருப்பார்.

சாந்த குணமும், பிறரிடம் நன்றாகப் பேசும் தன்மையும் கொண்டவர். சிந்தனைத் திறன் உடையவர். நன்கு படிப்பவர், சற்று அவசரமும் பரபரப்பும் இருக்கும். கை, கால், விரல்கள் சற்று நீளம்போல இருக்கும். நல்ல நகைச்சுவை உணர்வும், பேச்சால் எதையும் சமாளிக்கும் ஆற்றலும் கொண்டவர். புதிது புதிதாக எல்லாவற்றையும்அறிவதில்ஆர்வம்கொண்டவர்.

காதல் தோன்றினாலும் காதல் விவாகம் ஒத்து வராது. மிகவும் நெருங்கியவரும் கூட இவரைப் புரிந்து கொள்ள முடியாததும், இவருடைய கண்டிப்பும், சபல சித்தமுமே காரணம். வறுமை இருக்காது.

சொந்தத் தொழில் செய்வதையே இவர்கள் விரும்புவர். அக்கினி, எரிப்பொருள், இரும்பு சம்பந்தமான தொழில்களிலும் ஈடுபடுவர். இயந்திரங்கள், வாகன உறுப்புகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் வேலை செய்வதில் வல்லவர்.

வெப்பம், நரம்பு தொடர்பான நோய் பாதிக்கும். இரத்தப் புற்று நோய், வயிற்று வலி, குடல் புற்று நோய் வீரும் வாய்ப்புள்ளது.

### 1 கூட்டெண் பலன்கள் 1-6

சூரியனும், சுக்கிரனும் ஆதிக்கம் செலுத்த அமையும் வாழ்க்கை இவருடையது. இவரது தோற்றம் உயரமாகவும், உடல் வாகு சற்று பெண்மைகலந்தும் இடுப்பு, மார்புப் பகுதிகளில் சதைத் திரட்சியுடன் காணப்படுவர். யானை போன்ற நடையும், எப்போதும் சிரித்த முகத்துடன் இருப்பார். இவருக்குமுடிஅடர்த்தியாகவும், இவரின் கையெழுத்து அழகாகவும் இருக்கும்.

இந்த எண்காரர்களுக்கு நகைச் சுவை உணர்வு சற்று அதிகமாகவே இருக்கும். அனைவரும் கவரும் விதத்தில் பேசுவார். எதிலும் முதலில் இருக்க ஆசைப்படும் இவர் பிறரை அடக்கியாள வேண்டும் என்று நினைப்பவர்.

விதவிதமாக உடை உடுத்த வேண்டும் என்றும் தாம் வாழும் விதத்தை கண்டுஅனைவரும்மெச்சவேண்டும் என்று எண்ணம் கொண்டவர். வாழ்க்கையை அனுபவித்து வாழும் இவர் உற்றார், உறவினரோடு கூடி வாழ வேண்டும் என்று நினைப்பவர். பெண்கள் மீது பற்றுள்ள இவர்கள் பெண்களாலே பிரச்சினைகள் அடைவர். வாழ்க்கையில் பணக்கஷ்டம் இன்றி அதிர்ஷ்டம் பெறுவர்.

இவர்கள் குறைவான உடலுழைப்பும் அதிக லாபமும் உள்ள தொழில் புரியவே விரும்புவார்கள். புடைவை வியாபாரம், நவரத்தினக் கற்கள், வாசனைப் பொருள்கள், பகட்டுப் பொருள்கள் ஆகியவற்றின் வியாபாரம், இவை தொடர்பான நிறுவனப்பணியாளராகவோ இருப்பார்.

கண், தொண்டையில் கோளாறு, இதய பலவீனம், பித்தம், வாதம் தொடர்பான நோய்கள் பற்றலாம். காய்கறிகளும், நாரிழைச் சத்தும் நலம் தரும்.

# அம்மாவின் தவிப்பு

குடும்பச் சூழ்நிலை காரணமாகத் தம் குழந்தையை, வீட்டிலுள்ள பெரியோரிடமோ, குழந்தைகள் காப்பகத்திலோ விட்டுவிட்டு வேலைக்குச் செல்லும் பெண்கள் பலர் இருந்தாலும், தானே தன் குழந்தையைப் பார்த்து வளர்க்கும் ஆசையில் தன் கனவுகளுக்குப் பூட்டுப்போட்டுவிட்டு அவர்களின் நிழலாக உலா வர நினைக்கும் அம்மாக்களும் இங்கு இருக்கிறார்கள். குழந்தையின் சின்னச் சின்ன அசைவுகள் முதல், அதன் மழலைப் பேச்சு, தவழ்ந்து வரும்போது ஏற்படும் பரவசம், தத்தி நடக்கும் அழகு, பாடசாலைக்குச் செல்லும் பொலிவு, அன்பு முத்தம் என்ற அற்புதமான தருணங்களைப் பிஞ்சுகளுடன் உடனிருந்து இரசிக்க விரும்பும் அம்மாக்கள் அதிகமாகவே உள்ளனர். இதற்கு மாறாக, பிஞ்சுக் பிள்ளைகளை வீட்டில் விட்டுவிட்டு வேலைக்குச் செல்லும் அம்மாவின் மனம் 'பிள்ளை சாப்பிட்டானா?', 'பத்திரமாகப் பாடசாலை முடிந்து வீட்டுக்கு வந்து விட்டானா?' என்று பதைபதைத்துக் கொண்டிருக்கும் நிலைதான் பெரும்பாலும் உள்ளது. இத்தகைய தவிப்பால் பணியில் முழுக் கவனம் செலுத்த முடியாமல் பல பெண்கள் திண்டாடுகிறார்கள். இன்றைய காலகட்டத்தில் பெண்களை நன்கு படிக்க வைக்கும் பெற்றோரும் சரி, கணவன்களும் சரி, அவள் உயர் பதவியில் பணிபுரிவதைப் பெருமையாகவே நினைக்கிறார்கள். பலர் தம் துணைவியருக்கு உறுதுணையாகவும் இருக்கிறார்கள். ஆனாலும் குழந்தை என்று வரும்போது, அவர்களை விட்டுகொடுத்துவிட பெண்களின் மனது சுலபமாக முன்வருவதில்லை. இதற்குப் பல காரணிகள் உள்ளன. பல அலுவலகங்கள், மூன்று மாதப் பேறு கால ஓய்வுக்குப் பின் பணிக்குத் திரும்பும் பெண்களை மற்ற பணியாளர்கள் போல்தான் நடத்த விரும்புகிறது. இதில் தவறு ஒன்றும் இல்லை. என்றாலும், போக்குவரத்து நெருக்கடியில் பயணம் செய்து அலுவலகம் சென்று, குறைந்தது எட்டு மணி நேரமாவது வேலையை முடித்துவிட்டு வீடு திரும்பும்போது, தன் சோர்வையும் மறந்து, குழந்தையை வாரி அணைத்து கொஞ்ச ஆவலுடன் போகும்போது, அந்த குழந்தை தூங்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தவுடன் உடைந்துபோய் விடுகிறார்கள் அம்மாக்கள்.



# இல்லற வாழ்க்கை இனிக்க...



திருமண வாழ்க்கை பல்வேறு வகைகளில் மாறி விட்டது. எல்லாம் நவீனமயமாகி வரும் உலகில், தம்பதிகளும் நவீனமயமாகி வருகிறார்கள். அவர்கள் படித்திருக்கிறார்கள், வேலைக்குப் போகிறார்கள், பரபரப்பாக இருக்கிறார்கள். காதல் திருமணமோ, பெரியவர்கள் நிச்சயிக்கும் திருமணமோ எப்படியிருந்தாலும் மணவாழ்க்கை பிரச்சினைகளைத் தம்பதிகள் தெளிவாக அணுகுகிறார்களா? பலரது மணவாழ்க்கையில் சிக்கலான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இவற்றை எப்படி அணுக வேண்டும், மணவாழ்க்கையை வெற்றிகரமாகத் தொடர்வது எப்படி? மருமகள் இடையிலான பிரச்சினை திருமணமான முதல் ஒரு வருடத்தில் இது போன்ற பிரச்சினைகள் ஏற்படுவது இயல்புதான். இது காலங்காலமாக தொடர்வதும் கூட. இதைசரியாகக்கவனிக்காமல் விட்டால்கணவர் குடும்பத்துடன்மருமகளுக்கு பிரச்சினைகள் வளர்ந்து கொண்டே இருக்கும். இதை முறையாக அணுகினால்தான், உறவு சுமுகமாக இருக்கும். தற்போதுள்ள குடும்பங்களில் கணவன் மனைவி இருவரும் வேலைக்குப் போவதால் அதிக நேரம் அலுவலகத்தில் செலவு செய்துவிட்டு, வீட்டுக்கு வரும் போது சோர்ந்து விடுகிறார்கள். இதனால் மணவாழ்க்கையிலும் துணையின் மீதும் கவனம் செலுத்த முடிவதில்லை. தம்பதிகள் தனியாக, நெருக்கமாக இருப்பதற்கான நேரமும் குறைந்து விடுகிறது.




கணவனும் மனைவியும் நெருங்கிப் பழகி, ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளாவிட்டால் மேற்கண்ட பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. பெற்றோர் பார்த்து நடத்தி வைக்கும் ஏற்பாட்டு திருமணம், காதல் திருமணம் என எதுவென்றாலும் திருமணத்தில் ஏற்படும் பிரச்சினைகள் பொதுவானவை, ஒரே மாதிரியானவைதான்.

இரண்டிலும் அன்பு வளர வாய்ப்பு இருந்துகொண்டே இருக்கவேண்டும். அதற்கு முயற்சி எடுக்க வேண்டும். அப்போதுதான் மணவாழ்க்கை நிலைத்திருக்கும்.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# செய்திகள்

## இலட்சார்ச்சனை பூர்த்தியும் கணபதி ஹோமமும்

யாழ்ப்பாணம், டிசெ.25

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய விநாயகர் சஷ்டி விரதத்தை முன்னிட்டு நடைபெறும் இலட்சார்ச்சனை பூர்த்தி நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து மஹா கணபதி ஹோமம் நடைபெறும். நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு அபிஷேகத்துடன் கஜமுகாசுர சங்காரமும் நடைபெறும். கிரியைகள் யாவும் ஆலய பரம்பரைக்குரு சிவாகமசேகரர் ந.இராசேஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறும். (வ)

## ஒளி விழா

தென்மராட்சி, டிசெ.25

தென்மராட்சி கல்வி வலயத்தின் ஒளி விழா நாளை வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வேள்விசன் நிறுவன யாழ்.மாவட்ட முகாமையாளர் ஏ.ஜி.றொசைரோ கலந்து கொள்வார். (வ–9)

♦♦♦

சாவகச்சேரி கச்சாய் வீதி புனித விக்டோரியார் பங்கு மக்களின் ஒளிவிழா எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு தேவாலய முன்றிலில் இடம்பெறும்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக அல்லைப்பிட்டி நெய்தளம் நிறுவன இயக்குநர் அருட்பணி ஏ.எவ்.எக்ஸ். ஜெயசேகரம் கலந்து கொள்வார். தேவாலய இளைஞர் மன்றத்தினரால் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (வ–9)

## அதிபர்களுக்கு கூட்டம்

தென்மராட்சி, டிசெ.25

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும் என்று வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (வ–9)

♦♦♦

யாழ்.மாவட்ட ஓட்டோ சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத்தெரிவும் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (வ–14)

## 'சமுத்திர தேவா' சனிக்கிழமை வெள்ளோட்டம்

நெடுந்தீவு பல.நோ.கூ. சங்கத்தின் படகான 'சமுத்திர தேவா' நாளை மறுதினம் சனிக்கிழமை வெள்ளோட்டத்துக்கு விடப்படவுள்ளது.

நீண்ட நாள்கள் பழுதடைந்திருந்த இந்தப் படகு மீண்டும் புனரமைக்கப்பட்டு சேவையில் இணைகிறது. படகு பழுதடைந்த நிலையில் நெடுந்தீவு போக்குவரத்துச் சேவை மற்றும் அத்தியாவசிய பொருள்களை எடுத்து வரும் செயற்பாடுகளில் தளர்வு நிலை காணப்பட்டது. தற்போது புனரமைத்துள்ள சமுத்திர தேவா நெடுந்தீவுக் கடல் பயணத்துக்கு தகுதியானது என்பது குறிப்பிடத்தக்கது. (வ–7)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ.25

யாழ்.நகர், மடம் வீதியில் அமைந்துள்ள திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் வருடாந்த நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

இதன்போது போஷகராக இ.மோகன்ராஜ், தலைவராக கி.துரைசிங்கம், உபதலைவராக சி.றஞ்சித்குமார், செயலாளராக மா.சங்கர்ராஜ், உபசெயலாளராக இ.கவீந்திரா, பொருளாளராக தி.சுதர்ஷன், கணக்காய்வாளராக கௌரிகாசன் ஆகியோரும் நிர்வாகசபை உறுப்பினர்களாக 7 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (வ)


### பன்னிரண்டாம் ஆண்டு நினைவுகளுடன்

தோற்றம் 01 . 10 . 1982



மறைவு 25 . 12 . 2002

**செல்வி சோபியா ஜொய்சி மகேந்திரன்**

கண்ணிமை மூடித்திறக்கையில்
பன்னிரண்டாண்டுகள் ஓடிப் போக
உள்ளத்தின் ஓரத்தில் - உன் பூ முகம் வாடாமல்
கடல் அலைபோல் என்றும்
ஆறாமல் அலை பாய்கின்றது
உன் நினைவுகள். .....

148, பழைய பூங்கா வீதி,
கண்டுக்குளி.

மகேந்திரன்
குடும்பத்தினர்.

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 09 . 01 . 1929



ஆண்டவன் மடியில் 26 . 11 . 2014

**அமரர் கனகசபை சபாரத்தினம்**

அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (25.12.2014) வியாழக்கிழமை காலை 5.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று பின்னர் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (26.12.2014) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

1ஆம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி,
அருகாமை, புதுக்குடியிருப்பு.

குடும்பத்தினர்.
T.P: 077 5444108,
077 5443336..

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17.04.1943

மறைவு 04.01.2014

**அமரர் கந்தையா சுப்பிரமணியம் (மணியம்)**

திதி: பூர்வபட்ச சதுர்த்தி (25.12.2014)

ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் நீங்காத நினைவுகளுடன் என்றும்
எங்கள் கண்கண்ட தெய்வமே அப்பா! எம்மை பார்போற்ற வாழ வைத்தீர் அப்பா!
கணப்பொழுதில் கடவுளிடம் சேர்ந்துவிட்டீர் பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிறைந்தீர் அப்பா!
என்றும் எங்கள் நினைவினிலே குடியிருப்பீர்கள் அப்பா!
துறட்டிப்பனை முத்துமாரி அம்மன் பாதார விந்தங்களில்
நீங்கள் சாந்திபெற இறைஞ்சுகின்றோம் அப்பா!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"குமார கோட்டம்"
வட்டுக்கிழக்கு, வட்டுக்கோட்டை.

என்றென்றும் உங்கள் நினைவுடன்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### எம் நெஞ்சை விட்டகலா 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 20.04.1941 உதிர்வு 31.12.2008

**அமரர் கந்தையா வல்லிபுரம் (மணியம்)**

திதி: 25.12.2014

அப்பா உமையிழந்து ஆண்டு ஆறு ஆனதுவோ
உங்கள் ஆசை முகம் மறைந்து
எத்தனை காலம் சென்றாலும் உங்கள் செம்மையான சிரிப்பும்
செந்தளிப்பாம் பூவதனம் சேர்ந்து
மகிழ்ந்திருந்த காலமெல்லாம் மறைந்திடுமோ
உங்களைக் காக்க உழைத்தோம் முடியவில்லை
ஒவ்வொரு நாளும் பொழுதுமிங்கு
உங்கள் நினைவில் வாடுகின்றோம்.
எம் வீட்டு நாயகனே என்றென்றும் உங்களை மறவோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

கரம்பகம்,
மிருசுவில்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் செல்வர் குணபாலசிங்கம் (குணம் - உரும்பிராய் மேற்கு)**

பூவுலகில் 25.12.1942

புகழுடலாக 28.12.2011

திதி: வளர்பிறை சதுர்த்தி (25.12.2014)

தாங்கள் எங்களைப் பிரிந்து நேற்றுப் போலுள்ளது
ஆனாலும் 3 ஆண்டுகள் ஆகிவிட்டன
நேசத்துடனும் அன்புப் பாசத்துடனும்
ஒரு கூட்டுக் கிளியாக
எமை வளர்த்து ஆளாக்கி
நேர்வழியில் வாழவைத்த
எம் குடும்ப சூரியன்
எம் அன்புத் தெய்வத்தை
எம் உள்ளங்களில் இருத்தி
எந்நாளும் வணங்குகிறோம்.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

குடும்பத்தினர்.

### முதலாம் ஆண்டு நினைவு தினம்

திருமதி தினைப்புனவள்ளி சத்தியவான்

பிறப்பு 31.03.1943 இறப்பு 06.12.2013



திதி: சதுர்த்தி

ஆண்டு ஒன்று சென்றாலும் உங்களை
மறக்க முடியுமோ அம்மா!
எங்களை பெற்று வளர்த்து நல்வழி
காட்டியும் வந்தோரை வரவேற்று
ஆதரித்தும் இன்முகம் காட்டியும்
நல்நாளில் இறைவனடி சேர்ந்த
உங்களை எப்படி மறக்கமுடியும்.

குடும்பத்தினர்.

வட்டு. மேற்கு,
கண்ணகை அம்மன் கோயிலடி, வட்டுக்கோட்டை.

# செய்திகள்

## யாழ்ப்பாண சங்கத்தின் ஒளி விழாவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், டிசெ. 25

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் பரிசளிப்பு மற்றும் ஒளிவிழா நிகழ்வுகள் 27ஆம் திகதி சனிக்கிழமை சங்கத்தின் கேட்போர் கூடத்தில் மு.ப. 9.30 மணிக்கு இடம்பெறும்.

சங்கத் தலைவர் மு.ஜெ.சுஜிந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.கபிலன் கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வில் அருட்தந்தை பி.பத்திநாதன் அடிகள் ஆசியுரை இடம்பெறும்.

தொடர்ந்து சங்கத்தில் 25 வருட சேவையை நிறைவு செய்த பணியாளர்கள், கிளை நிலையங்களில் அதிக கூடிய விற்பனைகளை மேற்கொண்ட முகாமையாளர்கள் பணியாளர்கள் விடுமுறை பெறாமல் தொடர்ந்து பணியாற்றிய பணியாளர்கள் யாழ். மாவட்டத்தில் சிறந்த எரிபொருள் நிரப்பும் நிலையமாக இரண்டாம் இடத்தை பெற்ற சங்க எரிபொருள் நிரப்பும் நிலையப் பணியாளர்கள் போன்றோர் கௌரவிக்கபட்டு பரிசில்கள் வழங்கப்படும். (த–17)

## பாலசந்தரின் உடல் நேற்றுத் தகனம்

### ஆயிரக்கணக்கானோர் அஞ்சலி



சென்னை, டிசெ.25

உடல்நலக் குறைவால் காலமான இயக்குநர் சிகரம் கே.பாலசந்தரின் இறுதிச் சடங்குகள் பெசண்ட் நகர் மின்மயானத்தில் நேற்று மாலை நடைபெற்றது. குடும்ப வழக்கப்படி சில சடங்குகளுக்குப் பின், அவரது இளைய மகன் பிரசன்னா பாலசந்தர் சிதைக்கு தீயூட்டினார். மூச்சுத் திணறல் உள்ளிட்ட உடல் நலக் கோளாறுகள் காரணமாக சென்னை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த இயக்குநர் பாலசந்தர் நேற்றுமுன்தினம் இரவு காலமானார். அவருக்கு வயது 84.

அவரது உடல் நேற்றுக் காலை முதல் மக்கள் பார்வைக்காக மைலாப்பூரில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தது. அவரால் திரையுலகில் அறிமுகம் செய்யப்பட்ட மற்றும் அவரது படங்களில் நடித்த கலைஞர்கள் பலர் நேரில் வந்து பாலசந்தருக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். திரை உலகைத் தாண்டி தி.மு.க. தலைவர் கருணாநிதி உள்ளிட்ட பல அரசியல் தலைவர்களும் பாலசந்தருக்கு நேரில் அஞ்சலி செலுத்தினர். பொது மக்களும் அவரது உடலைக் கண்டு சென்றனர். முன்னதாக பாலசந்தரின் உடல் இன்று இறுதிச் சடங்கு செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் அது நேற்று மதியமே நடைபெறும் என மாற்றப் பட்டது.

மதியம் இரண்டு மணி அளவில் அன்னாரது உடலுக்கு அவரது குடும்ப மரபுப்படி இறுதி சடங்குகள் நடத்தப்பட்டன. பின்னர், மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ரதம் போன்ற ஊர்தியில் பாலசந்தரின் உடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப் பட்டது. சுமார் 2 மணி நேரத்திற்கும் அதிகமாக நடந்த இறுதி ஊர்வலம் 5.10 மணி அளவில் பெசண்ட் நகர் மின்மயானம் வந்தடைந்தது. இறுதி ஊர்வலம் நடந்த வீதியின் இருமருங்கிலும் நின்று ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பாலசந்தரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

கே.பாலசந்தரின் உடலை பிரகாஷ்ராஜ், பாரதிராஜா ஆகியோர் சுமந்து, தீமூட்டலுக்காக உள்ளே எடுத்துச் சென்றனர். பெசண்ட் நகர் மின்மயானத்திற்கு உள்ளேயும், வெளியேயும் ஆயிரக் கணக்கில் மக்கள் கூடியிருந்தனர். சிலர் மரங்களில் அமர்ந்தபடியும், கட்டடங்களின் மேற்கூரையில் நின்றபடியும் பாலசந்தருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

கூட்டம் அதிகமாக இருந்ததால் பாலசந்தர் குடும்பத்தினரோடு ரஜினி, பாரதிராஜா, பார்த்திபன், சரத்குமார் உள்ளிட்ட சிலர் மட்டுமே மின்மயான அறை வரை அனுமதிக்கப் பட்டனர். பாலசந்தரின் இளைய மகன் பிரசன்னா இறுதி சடங்குகளுக்குப் பின் சிதைக்கு தீயூட்டினார். பின்னர் கனத்த மனதோடும், கலங்கிய விழிகளோடும் ரஜினி, சரத்குமார், சுஹாசினி, ஸ்ருதி உள்ளிட்டோர் அங்கிருந்து வெளியேறினர். சிறிது நேரம் பாரதிராஜா, விக்ரமன் உள்ளிட்டோர் கதறி அழுதபடி மயான வாசலிலேயே நின்றிருந்தனர். (ற)


### விற்பனைக்கு

வீட்டுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்கு. கிராமகோட்டு சந்திக்கு அருகில் சகல வசதியும் கொண்ட வீடு.

தொடர்பு:
077 515 2397, 077 9690905

### ஆள் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள திருமண மண்டபத்துக்கு பகல்நேர காப்பாளர் தேவை. உங்கள் சுயவிவரக் கோவையை கீழ்காணும் முகவரிக்கு 30.12.2014 இற்கு முன்னர் அனுப்பவும்.

தொடர்புக்கு:
விளம்பர இலக்கம் : 5038
மே/பா உதயன்
561, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எமது இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்
லைடன் புடைவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 2222 381

Merry Christmas
Nation Popular Travels & Tours
077 3 083 820
Chennai - 23000 Rs - RTN
Canada 100500 Rs - OW
London 47300 Rs - OW
Italy 63000 Rs - RTN
Doha 18200 Rs - OW
Special Offers Til - 30/12/2014
Licence No A-791
Emirates SriLankan Singapore Airlines


## வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம் 2015ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடைகள், என்பவற்றை 01.01.2015 தொடக்கம் 31.12.2015ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ இ | விவரம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற் வரி தவிர) | மாத வாடகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் வெட்டுமிடம், மீன் சந்தை வாகன தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 7500000.00 | |
| 2 | உடுவில் கீளிச் சந்தை | 1000.00 | 10000.00 | 163000.00 | |
| 3 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை -01 | 1000.00 | 10000.00 | 1560000.00 | 250.00 |
| 4 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை -02 | 750.00 | 7500.00 | 176000.00 | 250.00 |
| 5 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7500.00 | 36000.00 | 250.00 |
| 6 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7500.00 | 54650.00 | 250.00 |
| 7 | கோழிக்கடை இல 06 | 750.00 | 7500.00 | 161000.00 | 250.00 |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை (கொத்தியாலடி கொல்களத்தில் ஆடுகள் வெட்டப்படுதல் வேண்டும்) | 500.00 | 5000.00 | 60500.00 | 250.00 |

1. கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 25.12.2014 – 30.12.2014 காலை 10.00 மணி வரை
2. கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளுதல் - 30.12.2014 நண்பகல் 12.00 மணி வரை
3. கேள்விப் பத்திரம் திறக்கப்படுதல் - 30.12.2014 பி.ப 1.30 மணிக்கு

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2014.10.28ம் திகதிய உதயன் தினக்குரல் வலம்புரிப் பத்திரிகைகளிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

தி.பிரகாஷ்,
தவிசாளர்.
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,


ARPICO
நத்தார் அமோக மலிவு விற்பனை
Mangala
steal mirror cupboard 6x3 14,500/- 8,500/- 6x4 15,600/- 9,990/-
Office cupboard 14,500/- 8,000/-
3 door steal cupboard 19,600/- 14,900/-
DAMRO Piyestra Nilkamal Phoenix
Arpico Rolling Chair XL 12,500/- 6250/- L 10,500/- 4800/- M 6,000/- 3000/-
போன்ற நிறுவனங்களின் அனைத்துத் தளபாடப் பொருள்களுக்கும் மூங்கில், மரம், உருக்கு, வெளிநாட்டுத் தளபாடங்கள் மின்சாதனப் பொருள்கள் அனைத்துக்கும் அமோக விலைக் குறைப்பு
Glass Dining Table set 24,900/- 14,900/-
New Table Mate 4,800/- 2,400/-
Iron Board 1,500/- 1000/-
Kitchen Rack 2,000/- 1,500/- 2,800/- 2,000/-
10% ⇒ 50% தள்ளுபடி
முந்துங்கள்! கையிருப்பு உள்ளவரை மட்டுமே!!
Open 8 AM - 8 PM
மங்களா காட்சியறை
இல. 536, கே.கே.எஸ். வீதி, மனோகரா சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 8366, 8367, 0777 286069

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்.நகர், மடம் வீதியில் அமைந்துள்ள திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் வருடாந்த நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது. இதன்போது போஷகராக இ.மோகன்ராஜ், தலைவராக கி.துரைசிங்கம், உபதலைவராக சி.றஞ்சித்குமார், செயலாளராக மா.சங்கர்ராஜ், உப செயலாளராக இ.கவீந்திரா, பொருளாளராக தி.சுதர்ஷன், கணக்காய்வாளராக கௌரிகாசன் ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக 7 பேரும் தெரிவுசெய்யப்பட்டனர். (வ)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி சாந்தமலர்(சாந்தா) ஜெயரட்ணம்

யாழ்ப்பாணம், மணிக்கூட்டு கோபுர வீதி, பெருமாள் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் இல. 36, அரசடி புகையிரத வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தமலர் (சாந்தா) ஜெயரட்ணம் நேற்றுமுன்தினம் (23.12.2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - நேசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நல்லையா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், ஜெயரட்ணம் (ஓய்வுநிலை - இலங்கை வங்கி முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், ஜெயரமணன் (கணினிப் பொறியியலாளர் - சிங்கப்பூர்), ஜெயகோபி (கணினிப் பொறியியளார் - சிங்கப்பூர்), கோகிலன் (கணினிப் பொறியியற்துறை இறுதிவருட மாணவன் - லண்டன்), இந்துஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கோப்பாய்) ஆகியோரின் பாசமிகு தாயும், தமிழினி, காயத்திரி ஆகியோரின் அன்பு மாமியும், அஸ்வினி, அஸிக்கா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், Dr. ராஜகுலேந்திரன் (லண்டன்), மகேந்திரராஜா, சற்குணராசா, (லண்டன்), அற்புதராஜா (லண்டன்), சறோமலர், சுகுணமலர் (லண்டன்), பாலராஜ் (லண்டன்), ரவிராஜ் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரமேஸ்வரி (இராணி), இந்திராணி, ஜெயராணி, செல்வராணி, யோகராணி, திலகராணி (பிரான்ஸ்), ஜெயமோகன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் ஒரு மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.ஜெயரட்ணம் (கணவர்)
T.P.077 656 9764,
021 222 6318

அரசடி,
புகையிரத வீதி,
கந்தர்மடம்.

(55221) (45.7)

### திருமதி பராசக்தி நடராசா



கட்டுவன் தெற்கைச் சேர்ந்த நடராசா பராசக்தி நேற்று முன்தினம் (23.12.2014) செவ்வாய்க்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - தங்கப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இலங்கையர் - பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நடராசா (C.T.B) அவர்களின் அன்பு மனைவியும், வீரசிங்கம் - தங்கரத்தினம் (கனடா), குணரத்தினம் - சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனடாவைச்சேர்ந்த சிறிரஞ்சன், சிறிதரன், சிறிகாந்தன், சிறிபாஸ்கரன் (இணுவில்) ஆகியோரின் அன்புத் தாயும், ஜெயந்தினி, விமலினி, லீலாவதி (கனடா) தேன்மொழி (இணுவில்) ஆகியோரின் அன்பு மாமியும், சாகித்தியா, ஜனகன், பிரியங்கன், பிரசான், பிரணவன், கிஷோர், டிலோஜன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.12.2014) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P.021 205 9243

முனியப்பர் கோயிலடி,
கட்டுவன் மல்லாகம் வீதி,

(55219) (45.7)

## மானிடத்துக்குள் வாழும் இறைவன்

இந்த ஆண்டின் கிறிஸ்து பிறப்பு திருநாளின் வாழ்த்துக்களை உதயன் பத்திரிகை வாயிலாக தெரிவிப்பதில் மிகுந்த சந்தோஷமடைகின்றேன். உங்கள் யாவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

"இருளிலும், இறப்பின் பிடியிலும் இருப்போர்க்கு ஒளிதர விடியல் நம்மை தேடி வருகிறது.." (லூக்கா 1:78–19)என்று செக்கரியா என்ற இறைபக்தன் கூறியதை போன்று கிறிஸ்து பிறப்பு பண்டிகையானது இன்றும் இருளிலும் இறப்பின் பிடியிலும் வாழும் எம்மவர்கள் யாவருக்கும் வாழ்வின் முழுமையையும், நம்பிக்கையையும் வழங்கிட பாலகன் இயேசுவை வேண்டிக்கொள்வோமாக.

பின் நவீனத்துவத்தின் கண்டுபிடிப்புக்களும் உலகமயமாகுதலின் கொள்கைகளும் நுகர்வு கலாசாரமும், அரசியல், பொருளாதார தளம்பல்களும் மேலோங்கிய இன்றைய சூழலில் கிறிஸ்து பாலகனின் பிறப்பை கொண்டாடும் தருணத்தில் நமது கண்முன் வருவது கிறிஸ்துவின் எளிமையின் அடையாளமே. அது யாதாயின் கிறிஸ்துவின் எளிமையான அவரின் பிறப்பும், அந்த தீபனவத்தொட்டியுமே. ஆனால் இன்று மனிதம் புறந்தள்ளப்படுகின்ற சூழலும், பொருளாதாரத் திலும், பதவிநிலையிலும் குரல் வலிமையற்ற விளம்பின் ஓரங்களில் வாழ்கின்ற மக்களின் மனித மாண்பு பேணப்படாத அல்லது பாதுகாக் கப்படாத சூழிலில் வாழ்வதையும் நாம் காண் கிறோம்.

ஆனால் கடவுளின் மகன் எல்லாவற்றையும் விட்டு இறங்கி தாழ்மையான மனித சாயல் கொண்ட பிறப்பானது ஒரு அடிமையின் வடிவத்துடன் ஒப்பிட்டு நோக்கப்படுகிறது. இறைவனின் மனுவுரு என்பது இறைநிலையில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டு வெறுமையின் நிலை அல்லது பூச்சிய நிலை வருவதைக் குறிப்பிட்டு நிற்கின்றது. இவ்வாறான வருகையானது மானிடத்தின் மீது கிறிஸ்து வைத்துள்ள ஆழமான அன்பின் நிலையை சுட்டிக்காட்டுகின்றது.

எனவே கிறிஸ்து பிறப்புப் பண்டிகையானது இன்று நமக்கு சொல்லுகின்ற செய்தியானது மனிதமும்–மனித மாண்பும் பேணப்படவும் தொடர்ந்து அது பாதுகாக்கப்படவும் வேண்டும் என்பதையே இன்று நமக்கு கற்றுத் தருகிறது.

கிறிஸ்துவின் நிறைவான ஆசீர்வாதம் உங்கள் யாவரோடும் நிலைத்திருப்பதாக!

அருட்பணி இ.ராஜ்குமார்,
நல்லாயன் ஆலயம், உடுவில்.

## வலி. மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் கிறிஸ்மஸ் செய்தி

மார்கழி 25ஆம் நாள் உலக கிறிஸ்தவ பெருமக்களது உன்னதமான நாள் ஆகும். இயேசு பிரான் இந்த புனித நாளில் அவதரித்தமையை உலக கிறிஸ்தவர்கள் ஒன்றிணைந்து கிறிஸ்மஸ் பெருநாளாக கொண்டாடி வருகின்றனர். இந்த பெருநன்நாளில் இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் தத்துவங்களையும் இவ் உலக மாந்தர்களுக்கு அவர் விட்டுச் சென்ற நற்செய்திகளையும் உணர்ந்தவர்களாக ஒவ்வொருவரும் வாழ வாழ்த்துகின்றேன். மனித நேயத்தின் மாண்புறு தன்மையை வெளிப்படுத்துவதற்காக இயேசு பிரான் பல செய்கைகள் மூலம் உலக மாந்தர்களுக்கு உணர்த்தியுள்ளார்.மனிதன் மனிதனுக்கு உதவியாக சகோதரத்துவத்துடன் வாழ்ந்து இவ் உலகில் சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கும் ஒவ்வொருவரும் இப்புனிதநன்நாளில் சபதம் செய்து கொள்வோம். இந்த உயரிய சமாதானத்தின் வெளிப்பாடாக சகோதரத்துவமும் சகோதரத்துவத்தின் வெளிப்பாடாக இறை தன்மையும் அமைந்திருக்கின்றது. இவ் உன்னத தன்மையை ஒவ்வொவரும் உணரவே இறைவன் மனிதனாக பிறந்தார் என்றே கூறமுடியும். இந்த மகத்தான நாளில் கடந்த கொடிய போரால் பாதிக்கப்பட்டு துன்பத்தினுள் சிறைப்பட்டிருக்கும் ஒவ்வொருவருடைய வாழ்வுக்காகவும் இறைவனைப் பிரார்த்திப்போம்.

திருமதி நாகரஞ்சினி ஐங்கரன்
தவிசாளர், வலி.மேற்கு பிரதேச சபை.

## மரண அறிவித்தல்கள்



### கந்தப்பு முருகேசு (சொக்கர்)

(முன்னாள் நீர்கொழும்பு வர்த்தகர்)

வேதரடைப்பைப் பிறப்பிடமாகவும், அல்வின் வீதி, காரைநகரை வதிவிடமாகவும் தற்போது வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட கந்தப்பு முருகேசு நேற்று முன்தினம் (23.12.2014) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பு - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் - சுந்தரம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சரோஜலட்சுமி, சிவநாதன் (பிரான்ஸ்), சந்தானலட்சுமி, உருத்திரநாதன் (வவுனியா - தபாலகம்), ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜீவகன்,ஜானகி, இராஜேஸ்வரன், காமதேனு (பாலகணேசன் களஞ்சியம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனும், கிருஷாந்தன், கோபிகா, மயூரதன், தனரூபன், மகிழ்ராஜன், ஜனனி, வசிகரன், வித்தியாகரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பூந்தோட்டம் இந்துமயான மலர்ச்சாலையில் இன்று (25.12.2014) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
T.P.077 071 2032

(54125) (45.7)



### திருமதி அன்னம்மா வேலும்மயிலும்

பத்தமேனி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா வேலும்மயிலும் 22.12.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லாச்சி தம்பதிய ரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கதிரித்தம்பி வேலும்மயிலுவின் (இளைப்பாறிய விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர்- பத்தமேனி) அன்பு மனைவியும், சிறிஸ்கந்தராஜா (கனடா), சதானந்தராஜ் (பிரான்ஸ்), கிருபானந்தராஜா, மதனரூபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், சந்திரகாந்தா (கனடா), காலஞ்சென்ற சோதிராணி மற்றும் சந்திரலேகா, சுகிர்தினி (கனடா) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2014) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்தமேனி தீத்தாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P.021 490 2969

காளிகோயிலடி,
பத்தமேனி, அச்சுவேலி.

(55218) (45.7)

## 'கவிதை பட்டறையும் கவிச்சமரும்'

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் 'கவிதைப் பட்டறையும் கவிச்சமரும்' என்ற நிகழ்வு அண்மையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக முல்லை மாட்ட அரச அதிபர் நா.வேதநாயகனும், விருந்தினராக துணுக்காய் பிரதேச செயலர் குணபாலனும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

கவியரங்கம் மற்றும் கவிச்சமருக்கு பண்டிதர் பிரதீபன் தலைமைதாங்க ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உதவிப்பதிவாளர் றெளசி, சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் வினோத் மற்றும் சைவப்புலவர் திலகானந்தம், வன்னியூர் செந்தூரன், முல்லைத்தீபன் ஆகியோர் கவிதைகளை வழங்கினர்.

கவிச்சமரை வன்னியூர் செந்தூரனும் முல்லைத்தீபனும் முழங்கினர். தொடர்ந்து நடந்த பட்டிமன்றத்துக்கு துணுக்காய் பிரதேச செயலர் குணபாலன் தலைமை தாங்கினார். (வ)

## சோஷலிஸ சமத்துவ கட்சியின் பரப்புரை

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் சோஷலிஸ சமத்தவக் கட்சியின் வேட்பாளர் பாணி விஜேயசிரிவர்த்தன யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள கட்சி கூட்டங்களில் பங்கேற்கவுள்ளார்.

நாளை வெள்ளிக்கிழமை 26 ஆம் திகதி மு.ப 10 மணிக்கு ஊர்காவற்றுறை திறந்த வெளி அரங்கிலும், 27ஆம் திகதி பி.ப 3மணிக்கு காரைநாகர் ஊரியில் அமைந்துள்ள அன்டர்சன் மண்டபத்திலும், 28ஆம் திகதி பி.ப 2 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடை பெறவுள்ள கூட்டத்திலும் பாணி விஜேய சிரிவர்த்தன பங்கேற்கவுள்ளதாக கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் ப.திருஞானசம்பந்தர் தெரிவித்துள்ளார்.(ஒ–10)

செய்திகள்

# வெள்ளத்தால் தொடர்பு துண்டிக்கப்பட்ட கிராமங்களுக்கு ஹெலி மூலம் உணவு






மன்னார், டிசெ.25

வெள்ள இடரால் போக்கு வரத்துத் துண்டிக்கப்பட்டுள்ள குஞ்சுக்குளம் மற்றும் மாதா கிராமத்தைச் சேர்ந்த 272 குடும்பங்களுக்கு இரண்டு வாரங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் மருந்துவகைகள் நேற்று ஹெலி மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மன்னார், தள்ளாடி விமானத் தளத்தில் இருந்து குறித்த பொருள்கள் ஹெலி மூலம் அனுப்பி வைக்கப்பட்டன. குறித்த இரு கிராமங்களைச் சூழ உள்ள பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ள நிலையில், அந்தக் கிராமங்களுக்கான போக்கு வரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. அதையடுத்து அங்கு ஏற்பட்டுள்ள அத்தியாவசியப் பொருள்களுக்கான தட்டுப்பாட்டை நீக்கும் வகையில் இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. வட மாகாண போக்குவரத்து அமைச்சா பா.டெனிஸ்வரன், மன்னார் அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசபிரிய, இடர் முகாமைத்துவ பிரிவின் மாவட்ட உதவிப்பணிப்பாளா எம்.ஏ.சி. முஹமட் றியாஸ் மற்றும் வைத்தியர் கதிர்காம நாதன் உள்ளிட்ட குழுவினர் குறித்த உண பொருள்களை ஹெலி மூலம் எடுத்து சென்று மக்களுக்கு வழங்கினர்.

அதேவேளை, மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக 2 ஆயிரத்து 434 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 979 பேர் இடம் பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளனர். பாதிப்புக்குள்ளான மக்கள் 39 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 128 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

வேகமான நீரோட்டம் காரணமாகமல்வத்துஓயாவின் அணைக்கட்டுகள் பதிப்படைந்துள்ளன. அதனால் மேலும் வெள்ளம் ஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏ–32 வீதியில் இலுப்பக்கடவை, பாலியாறு ஆகிய பகுதிகளில் வெள்ள நீர் வீதியை மேவிப் பாய்கின்றது. அதனால் இவ் வீதியூடாக கனரக வாகனங்கள் மட்டுமே பயணம் மேற்கொள்ள கூடியதாகவுள்ளது. மன்னார்– மதவாச்சி பிரதான பாதை முற்று முழுவதுமாக நீரில் மூழ்கியுள்ளதால் பாதை துண்டிக்கப்பட்டுள்ளது. எனினும் வெளி மாவட்டங்களுக்கு செல்வோர் பரப்புகடந்தான் வீதியூடாக செல்ல கூடியதாக உள்ள போதிலும் இப் பாதையூடாக சிறிய ரக வாகனங்களே செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது. இதேவேளை மன்னார் கட்டுக்கரை குளத்தின் நீர் மட்டம் 12.5 அங்குலம் அதிகரித்துள்ளதால் அதன் வான் கதவுகள் திறக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## மைத்திரியின் மேடை மீது சூடு; பொலிஸார் பணிநீக்கம்

பொது எதிரணியின் பரப்புரை மேடைமீது ஆயுததாரிகள் தாக்குதல் மேற்கொள்ளும் போது அதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காத பொலிஸார் இருவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

வெல்லம்பிட்டிய உமஹிலிய விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் பரப்புரை மேடை இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கிச் சூடு நடத்தி சேதப்படுத்தப்பட்டது. மேடையை நோக்கியும் வானத்தை நோக்கியும் துப்பாக்கிச் சூடு நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ள நிலையில், துப்பாக்கிச் சூடு நடந்த போது அங்கு பாதுகாப்பு கடமை யில் பொலிஸார் இருந்துள் ளமை உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத் தர்கள் இருவரும் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். (தொடர்புபட்ட செய்தி 24ஆம் பக்கத்தில்)

(ற–5)

## ரட்ணசிறி பற்றிய ரகசியத்தை வெளியே கசியவிட்ட மஹிந்த

கொழும்பு, டிசெ.25

விடுதலைப் புலிகளுக்கு ஏதிரான இராணுவ நடவடிக்கை தொடர்பில் தன்னைதவிர பாதுகாப்புசபையில் அங்கம் வகித்த ஒரே அரசியல்வாதி முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஹொரணையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை சம்பந்தமான விடயத்தில் வேறு நபர்கள் உரிமைகோர முயற்சித்தாலும் அவர்களின் கருத்துக்கள் உண்மைக்கு புறம்பானது எனவும் அவர் கூறியுள்ளார்.

2005 ஆம் ஆண்டு நாடு பிளவுப்படுவதை தடுத்து நிறுத்துமாறு அனைவரும் என்னிடம் கோரிக்கை விடுத்தனர். பிரிவினைவாதத்தையும் பயங்கரவாதத்தையும் தோற்கடித்து மக்கள் அச்சமும் சந்தேகமும் இன்றி வாழும் உரிமையை பெற்று தருமாறு மாத்திரமே மக்கள் கோரினர். நான்கு ஆண்டுகள் என்ற குறுகிய காலத்தில் நாங்கள் இந்த பிரச்சினைக்கு தீர்வு கண்டோம்.

பிரச்சினை தீர்க்கப்படும் போது என்னைதவிர பாதுகாப்புச்சபைக்கு வந்த ஒரே அரசியல்வாதி முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க வேறு எவரும் வரவில்லை. நாங்கள் வேறு எவரையும் அழைக்கவில்லை – என்று அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார்.(ற)

## டெங்கு நோய் சிகிச்சையில் அவதானம்

யாழ்ப்பாணம், டிசெ. 25

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் தீவிரம் அடைந்துள்ளது. இந்த நிலையில் டெங்குநோயினால் பாதிக்கப்பட்ட சில நோயாளர்கள் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று அவர்களது உடல் நிலை மிக மோசமடைந்த நிலையில் அரச வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இதனால் தேவையற்ற உயிர் இழப்புகளும் பின் விளைவுகளும் ஏற்படுகின்றன. எனவே டெங்கு நோய் என சந்தேகிக்கும் நோயாளர்கள் காலம் தாழ்த்தாது உடனடியாகவே அரச வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும்படி பிராந்தி சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (த)

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் அலுவலகப் பணியாளராக கடமையாற்றும் **க. சற்குணலிங்கம்** அவர்களின் அன்பு மாமியார்

**திருமதி**

**இரத்தினம் கிருஷ்ணபிள்ளை**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலரும்**

**அனைத்து உத்தியோகத்தர்களும்** (55241) (10)

**ஊழியர் நலன்புரி சங்கம்**

**பிரதேச செயலகம் வலிகாமம் கிழக்கு, கோப்பாய்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அமுதராணி சிதம்பரநாதன்



அச்செழுவை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி அமுதராணி சிதம்பரநாதன் நேற்று (24.12.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை சிதம்பரநாத னின் (இளைப்பாறிய பிரதேசசபை செயலாளர் - சுன்னாகம்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்- சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான கனபதிப்பிள்ளை- தங்கம்மா தம்பதியரின் மருமகளும், நளினி (நூலக உதவியாளர் பிரதேச சபை-சுன்னாகம்), நந்தினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம்- கோப்பாய்), மதிவதனன் (கனடா), பிரதீபன் ஆகியோரின் அன்புத் தாயும், பொன்னம்பலம் அம்பிகைபாலனின் (லிகிதர்-ரூபா பன்முக வர்த்தக நிலையம்) மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அமுதபவனம்**
**அச்செழு, நீர்வேலி.** (55242) (10)

**தகவல்: க. சிதம்பரநாதன் (கணவர்)**
T.P:0213734442



### திருமதி கமலமலர் நாயகம் (கமலம்) முத்துச்சாமி

யாழ். கொட்டடியைப் பிறப்பிடமாகவும் கல்லுண்டாயை வதிவிடமாகவும், புளியங்கூடலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலமலர் நாயகம் (கமலம்) முத்துச்சாமி நேற்று (24.12.2014) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா-மோனே தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முத்துச்சாமியின் அன்பு மனைவியும், யோகராசா, காலஞ்சென்ற தேவராசா மற்றும் மகேந்திரராசா, இராஜேஸ்வரி, நாகராசா (செல்லக்கண்டு) ஆகியோரின் தாயும், யோகராணி, கனகேஸ்வரி (கண்ணம்மா) காலஞ்சென்ற சிவபாலசிங்கம் மற்றும் ஞானரூபி ஆகியோரின் அன்பு மாமியும், குலேந்திரன் (குலன்), ரவீந்திரன் (ரவி), ஞானேந்திரன் (ஞானன்), தவேந்திரன் (தவம்), யோகாம்பிகை, சசிகுமார் (ஜேர்மனி), கீதவாணி, மோகலால் நேரு, நரேந்திரகுமார், கோகுலவாணி, கலைவாணி, தர்மதயாளன் (பிரான்ஸ்), யசோதவாணி, பிறின்சிகா, டிலக்சிகா, லிந்துஜன், நிறோஜன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2014) வியாழக்கிழமை பி.ப 2:00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புளியங்கூடல் சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வேலணை மேற்கு,**
**8ஆம் வட்டாரம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

செய்திகள்

# அனைவரதும் ஒத்துழைப்புடன் புதிய அரசமைப்பு விரைவில்

## தேர்தல் விஞ்ஞாபனத்தில் மஹிந்த



மஹிந்த சிந்தனை என்பது தேர்தலுடன் மறந்துபோகும் ஓர் அரசியல் உறுதிச்சீட்டு அல்ல என்று தெரிவித்துள்ள ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளரும் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக் ஷ, சகலரதும் ஒத்துழைப்புடன் நான் ஒரு புதிய அரசமைப்பைக் கொண்டுவருவேன் என்றும் சூளுரைத்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் 'மஹிந்த சிந்தனையில் உலகை வெல்லும் வழி' எனும் தொனிப்பொருளில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்த வெளியீட்டு வைபவத்தில் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் ஆற்றியை உரையின் முக்கிய அம்சங்கள் பின் வருமாறு:–

* எனது தாய்நாட்டின் எதிர்காலம் பற்றி திட்டமிடும் இவ்வேளையில் 2005இல் மஹிந்த சிந்தனையை வெளியிட்டதை நான் நினைத்துப்பார்க்கின்றேன்.
* 2005 இல் நான் சகல பிரஜைகளுக்கும் சமாதானம் கொண்டு வருவதாக கூறினேன். நான் 4 வருடங்களில் அதனைசெய்தேன்.
* 2010இல் நாம் மீண்டும் அபிவிருத்தியை தருவதாக கூறினோம். மீண்டும் நாம் தந்தோம்.
* மஹிந்த சிந்தனை என்பது தேர்தலுடன் மறந்துபோகும் ஓர் அரசியல் உறுதிச்சீட்டு அல்ல.
* இன்று நாம் ஆயிரக்கணக்கான நெல்வயல்களில் பயிர் செய்கின்றோம்.
* நாம் 99 சதவீதமான வீடுகளுக்கு மின்சாரம் வழங்கியிருக்கின்றோம்.
* எவரும் மின்சாரம், குடிதண்ணீர் வீதி, உட்கட்டமைப்பு தருவதாகக் கூறி அரசியல் செய்யமுடியாத அளவுக்கு நாம் அபிவிருத்திகளை மேற்கொண்டுள்ளோம்.
* இந்த நாட்டின் பிள்ளைகளை அவர்கள் வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு எங்கிருப்பவர்களாயினும் அகதி முகாம்களில் வாழ நான் விடமாட்டேன்.
* இன்று அரசதுறையில் 1.4 மில்லியன் பேர் உள்ளனர். அரச துறைகளை தனியார் மயப்படுத்தும் சகாப்தத்துக்கு நாம் மீண்டும் போக முடியுமா?
* இந்த நாட்டை கூறுபோடுவதற்கு சதிபுரியும் சக்திகளும் இங்குள்ளன.
* நாம் பயங்கரவாதத்தை ஒழித்து ஜனநாயகத்தை நிலைநிறுத்தியதாலேயே மக்கள் நல்லாட்சி பற்றி பேசுகின்றனர்.
* என்னிடம் பல ஒப்பந்தங் கள் இல்லை, இருக்கின்றது ஒன்றேயொன்று, அது மஹிந்த சிந்தனை மட்டுமே.
* நான் மதுபானசாலைக்கான அல்லது சூதாட்ட நிலையத்துக்கான அனுமதிப்பத்திரம் ஒன்றைக் கூட வழங்கவில்லை. ஆனால், இன்று பொய், உண்மையைப் போல பரப்பப்படுகின்றது.
* 2005இலும், நான் ஓர் அரசியல் குடும்பத்திலிருந்து வந்தேன். நாம் இந்த நாட்டுக்கு சேவை புரிந்துள்ளோம்.
* 3ஆவது பதவிக்காலத்தில் எமது வருங்கால சந்ததியினருக்கு ஒரு புதிய சகாப்தம் தொடங்கும்.
* சகலரதும் ஒத்துழைப்புடன் நான் ஒரு புதிய அரசியலமைப்பை கொண்டுவருவேன்.
* இந்த மஹிந்த சிந்தனை பகுதி –3, எமது நாட்டை அபிவிருத்தியடைந்த நாடுகளின் தரத்துக்கு தயாராக்கவும் உயர்த்தவும் இலக்கு வைத்துள்ளது.
* நீங்கள் எனக்கு 2005 இலும் 2010 இலும் அளித்த அதிகாரத்துக்காக உங்களுக்கு நன்றி கூறுகின்றேன்.
* நிலைதடுமாறும் காலத்துக்கு மீண்டும் போவதா அல்லது பலம் மற்றும் உறுதி நிலையுடன் முன்னேறுவதா என்பது தொடர்பில் இத்தேர்தலின் மூலம் தீர்மானியுங்கள்.
* ஒளிமயமான எதிர்காலம் கிடைக்க வாழ்த்துகின்றேன் என்றும் அவர், தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். (த)

# கிழக்கு மக்கள் தொடர்ந்தும் இடைத்தங்கல் முகாம்களில்

### மழை ஓய்ந்தபாடில்லை



களுவாஞ்சிக் குடி, டிசெ. 25

மட்டக்களப்பு படுவான்கரைப் பிரதேசத்தில் மழை வெள்ளத்தால் இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையினர் நேற்றுப் புதன்கிழமை நேரில் சென்று பார்வையிட்டுள்ளதுடன் அவர்களின் தேவைகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டனர்.

படுவான்கரைப் பிரதேசமான வெல்லாவெளி கலைமகள் வித்தியாலயம், பெரிய போரதீவு பாரதி வித்தியாலயம், திருப்பழுகாமம் விபுலானந்தா வித்தியாலயம், திருப்பழுகாமம் கண்டுமணி வித்தியாலயம், அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தங்கியுள்ள மக்களையே இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் பார்வையிட்டுள்ளனர்.

இந்நிலையில் இம்மக்களுக்கு தற்போது சுகாதாரப் பொதி அவசிய தேவை உள்ளது என போரதீவுப் பற்று பிரதேச செயலாளர் என்.வில்வரெத்தினம் தெரிவித்துள்ளதாகவும், சுகாதாரப் பொதிகளைத் தாம் பெற்றுக் கொடுக்கநடவடிக்கைமேற்கொண்டுள்ளதாகவும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக்கிளைத்தலைவர் த.வசந்தராஜா தெரிவித்தார். (த–32)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ முகாம்




களுவாஞ்சிகுடி, டிசெ. 25

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு மட்டக்களப்புகிரான்குளம்தருமபுரம் இடைத்தங்கல் முகாமில் தங்கியிருப்பவர்களிடையே வயிற்றோட்டம் மற்றும் மழை நீரினால் ஏற்பட்ட சிரங்குகள் போன்ற நோய்கள் அதிகரித்ததன் காரணமாக அந்த மக்களுக்கு நடமாடும் மருத்துவ முகாமூடாக நேற்றுப் புதன்கிழமை சிகிச்சை வழங்கப்பட்டது.

அடைமழைகாரணமாகதொற்று நோய்கள் அதிகரித்துள்ள நிலையில் இந்த நடவடிக்கையானது ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக பிரந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின்உத்தரவுடன்களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையின் அத்தியட்சகர் ஜி.சுகுணன் தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டது.

150 குடும்பங்களைச் சேர்ந்த 300 நோயாளிகள் இந்த மருத்துவ முகாமில் கலந்து கொண்டு சிகிச்சை பெற்றுக் கொண்டதாகக் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் ஜி.சுகுணன் தெரிவித்தார். (த–32)

# சுனாமி நினைவு நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், டிசெ. 25

மீண்டும் எழுவோம் சுனாமிப் பேரலையின் கோர நிகழ்வுகள் 10 ஆம் ஆண்டு நினைவு தினம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மல்லாகம் – தெல்லிப்பழை லயன்ஸ் கழகம் மற்றும் யாழ். திருமறைக் கலா மன்றத்தின் அனுசரணையுடன் துர்க்காபுரம் தெல்லிப்பழையில் அமைந்துள்ளசிற்பாலயக் கலைக் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சுனாமி சிற்பத்தின் முன்பாக வழிபாடு இடம் பெறவுள்ளதுடன் மறைந்த சிற்பக் கலைஞர் ஏ.வி. ஆனந்தனுக்கும் அஞ்சலி செலுத்தப் படவுள்ளதாகவும் ஏற்பட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ–10)

# கடந்த காலத்தை மறக்காது சிந்தித்து வாக்களியுங்கள்

## யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 25

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பது எமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும். எனவே நாம் எல்லோரும் நன்கு சிந்தித்துச் செயற்படுவோம். எமது பலத்தைக் காட்டுவோம். கடந்த காலத்தில் இடம்பெற்ற எவற்றையும் நாம் மறக்க முடியாது.

அற்ப சொற்ப சலுகைகளுக்கு அடிமையாக மாட்டோம் என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டுவோம் – இவ்வாறு யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் அ.இராசகுமாரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"அன்பான எமது ஈழத்தமிழ் உறவுகளே, நாங்கள் மறக்க கூடியவைகளா இவை? எதை மறப்பது? எமது உறவுகள் கொத்துக் கொத்தாக எமது பால் வேறுபாடின்றி உடல் சிதறி இறந்ததையா? இறந்த உடல்கள் அதே இடத்தில் அழுகியதையா? கைது செய்யப்பட்டுக் காணாமற் போனவர்களையா? போர் முடிந்த பின்பும் முகாம்கள் அமைக்கவென சுவீகரிக்கப்படும் எமது காணிகளையா? திட்டமிட்டு அரங்கேறும் குடியேற்றங்களையா?

இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்த முடியாதிருக்கும் அவல நிலையையா? சிங்களமும் போற்றும் சீமான் இராமநாதனின் நினைவு தினத்தைக்கூடக் கொண்டாட உரிமையற்றிருக்கும் நிலைமையையா? கைதாகிச் சிறையில் வாடும் எம்தமிழ் உறவுகளையா? கணவனை இழந்து தவிக்கும் மனைவியையா? மனைவியை இழந்து தவிக்கும் கணவனையா? தந்தையை இழந்து தவிக்கும் பிள்ளைகளையா? எமக்காக ஈகம் தந்த எம் சகோதர சகோதரிகளையா? சூறையாடப்படும் எமது பொருளாதாரத்தையா? போராடியதால் அங்கமிழந்து ஆதரவற்று நிற்கும் எம் சகோதர சகோதரிகளையா? பால்வடியும் முகத்துடன் விசுக்கோத்து உண்டபின் பாதகர்களால் பலியெடுக்கபட்ட பால் போன்ற சந்திரனையா?

எமக்காக யாரும் தீர்மானம் எடுக்க வேண்டுமா? நாங்கள் ஒவ்வொருவரும் சுயமாகச் சிந்திப்போம். எமக்கொரு அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இதனை அனைவரும் பயன்படுத்துவோம். எங்கள் தள்ளாத வயதுத் தாத்தா பாட்டி முதல் வாக்குரிமை உள்ள அனைவரும் ஒருவர்கூட விடாமல் வாக்களிப்போம்."– என்றும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

"நாம் வாக்களிக்கா விட்டால் எமது வாக்குச் சீட்டுக்கள் தவறாகப் பயன்படுத்தபடலாம். எனவே, இன்றே எமது பகுதி தபாற்காரரிடம் கேட்டு எமது வாக்குச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்வோம்.

அவரிடம் பெறமுடியாது போனால் தபாற் கந்தோருக்குச் சென்று பெற்றுக் கொள்வோம். நாம் தன்மானம் மிக்கவர்கள் என்பதை அனைவருக்கும் எடுத்துக்காட்டுவோம். அணி அணியாகச் சென்று வாக்களிப்போம். வாக்களிப்பது எமது தலையாய கடமை. அதனை நாம் செய்வோம்.

அடிமரம் வரையும் வெட்டப்பட்டு வேரும் அடிமரமுமாய் மட்டும் நிற்கும் எம்மினத்தை இதற்கு மேலும் அழிந்துவிடாமல் பாதுகாப்போம். அதன் பின்பு உரிமைக்காகப் போராடுவோம்"– என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–4)

### பிரதமர் பதவி தருவதாக பேரம் பேசியது அரசு

#### சரத் பொன்சேகா கூறுகின்றார்

கொழும்பு, டிசெ. 25

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேண்டாம். வேண்டுமானால் பிரதமர் பதவியைத் தருகின்றோம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு பேரம் பேசியது என்று கூறி யுள்ளார் முன்னாள் இராணுவத் தளபதியும், ஜனநாயகக் கட்சியின் தலைவருமான சரத்பொன்சேகா.

"இராணுவத்தில் இருந்து விலகி, 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னதாகவே, மஹிந்த ராஜபக்ஷ அரசு எனக்குப் பிரதமர் பதவியை வழங்க முன்வந்தது. 2010 ஆம் ஆண்டில் எனக்குப் பிரதமர்பதவி உள்ளிட்ட பல அரச பதவிகளைத் தருவதற்கு முன்வந்தனர். ஆனால் அவற்றை நான் நிராகரித்து விட்டேன். ஊழல் அரசில் பங்காளியாக நான் மறுத்து விட்டேன். இப்போது கூட அந்த எண்ணம் எனக்கு கிடையாது. மைத்திரிபாலவுக்கான ஆதரவு தொடரும்.

இந்த அரசில் அங்கம் வகிப்பதை விட தற்கொலை செய்து கொள்வதே மேல்"– என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற–5)

# நாட்டை நினைத்து தீர்மானியுங்கள்

## நுவரெலியா மாவட்ட எம்.பி. பீ. இராஜதுரை கோரிக்கை

கொழும்பு, டிசெ.25

"நாட்டில் நடக்கும் அநீதிகளை பார்த்துக்கொண்டு இருக்கமுடியாது. நாங்கள் நினைத்திருந்தால் அரசின் வரப்பிரசாதங்களை அனுபவித்துக் கொண்டு அதிலேயே இருந்திருக்கலாம். ஆனால் மக்களைப் பற்றிச் சிந்தித்ததன் காரணமாகவே அரசை விட்டு வெளியில் வந்தோம்" – என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பீ. இராஜதுரை தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாநகர சபையின் புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற பொது வேட்பாளரை ஆதரிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

நாங்கள் என்றும் எங்களைப்பற்றிச் சிந்தித்துச் செயற்படுவதில்லை. எமது மக்களையும், இந்த நாட்டையும் பற்றிச் சிந்தித்தே செயற்படுகின்றோம். ரணில் விக்கிரமசிங்கவைப் பற்றி பலரும் கருத்துக் கூறலாம். ஆனால், ஆளுங்கட்சியில் இருப்பவர்களும் எதிர்க்கட்சியில் இருப்பவர்களும் அவர் என்றுமே களவெடுத்ததாகக் கூறியதில்லை. அப்படி ஒரு தலைவர் ரணில் விக்கிரமசிங்க. அதேபோல ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தவர்களும் யாரும் களவெடுக்கவில்லை.

இன்று வாழ்க்கைச் செலவு அதிகரித்திருக்கின்றது. இங்குள்ள பெற்றோர்களில் பலர் நாளை எமது பிள்ளைகளுக்கு என்ன சாப்பாடு கொடுப்பது என்பதைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டு இருக்கின்றார்கள்.

கடன் பெற்றே காப்பெற் பாதைகளைப் போடுகின்றார்கள். ஒரு அங்குலத்திற்கு நான்கு இலட்சம் செலவுசெய்கின்றார்கள். தங்கத்தில் போடப்பட்டுள்ளதா? என்ற சந்தேகம் எழுகின்றது. இப்படியான ஒரு நாட்டிலேயே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இது யாருடைய பணம்? இந்தப் பணம் அனைத்தும் பொது மக்களுடையது. இந்தபணம்திறைசேரிக்குசென்று கொள்ளையர்களிடம் செல்கின்றது. கோடிக் கணக்கான மக்கள் வாழவேண்டிய இடத்தில் 10 பேர் மட்டும் வாழ்கின்றார்கள். மற்றவர்கள் எல்லோரும் இறந்து போக வேண்டியதுதான்.

இதனை மாற்றியமைக்க எதிர்வரும் ஜனவரி மாதம் 8ஆம் திகதி எமக்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அன்றைய தினம் நாம் அனைவரும் இந்த நாட்டை நினைத்து ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும். அதனை நாம் சரியாகச் செய்யாவிட்டால் பின்பு ஒன்றுமே செய்ய முடியாது."– என்று தெரிவித்துள்ளார். (ற)



ஜனாதிபதித் தேர்தலுக்காக அரச வளங்களையும், அரச சொத்துகளையும் சூறையாட வேண்டாமெனக்கோரி நேற்றுமுன்தினம் ஜனநாயகத்திற்கான மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டில் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# மஹிந்த ஜனாதிபதியானால் இளைஞர் கிளர்ச்சி ஏற்படும்

## கட்சி தாவிய கிழக்கு மாகாண சபைத் தவிசாளர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.25

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் வெற்றியீட்டினால் நாட்டில் இளைஞர் கிளர்ச்சி ஒன்று ஏற்படுவதைத் தடுக்க முடியாது என்று தெரிவித்துள்ளார் கிழக்கு மாகாண சபைத் தவிசாளர் பிரியந்த பத்திரன.

ஐக்கிய சுதந்திர முன்னணியில் இருந்து விலகி எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ள, பிரியந்த கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.




"நாட்டில் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டிருக்கின்றேன். நாட்டில் இளைஞர் கிளர்ச்சி ஒன்று ஏற்படுவதைத் தடுக்கவே மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிக்கின்றேன். புலிகளை இல்லாதொழிக்க கருணாவுக்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தேன். நானும், பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவும் இணைந்தே கருணாவை இந்தியாவுக்கு அறிமுகம் செய்து வைத்தோம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தமிழர்களை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கைகளை நான் செய்திருக்கின்றேன்.

நாட்டை மீளவும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம்மிடம் உண்டு. அந்த வகையில் இம்முறை ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிக்கின்றேன்"– என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# தீர்வு தொடர்பாக பேச அரசு தயார்

## தெற்குக்கு நல்லிணக்க சமிக்ஞை காட்ட தமிழருக்கு இதுவே தருணம் என்கிறார் பஸில்



கொழும்பு, டிசெ.25

"தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன நினைத்துக்கூட பார்க்கவில்லை. அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவதற்கு அரசு தயாராகவே இருக்கின்றது" – இவ்வாறு தெரிவித்துள்ளார் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ.

"புதியதொரு அரசியல் கலாசாரத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடித்தளமிட வேண்டும் என்றும், தெற்கு மக்களுக்கு நல்லிணக்க சமிக்ஞையைக் காட்டுவதற்கு வடக்கு மக்களுக்கு இந்த ஜனாதிபதித் தேர்தல் அருமையானதொரு வாய்ப்பாகும். எனவே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்க வேண்டும்"– என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் இது விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு, வடக்கு மக்களின் ஆதரவு யாருக்கு ஆகிய விடயங்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"தெற்கில் சிங்கள மக்களின் ஆதரவைப் பெற்ற தலைவருக்கு வடக்கிலும் ஆதரவு கிடைத்தால் தான், வடக்கில் நிலவும் பிரச்சினைகளுக்கு இலகுவில் தீர்வுகளை தேடக்கூடியதாக இருக்கும். எனவே, வடக்கு மக்கள் இம்முறை ஜனாதிபதியை ஆதரித்தால் அவற்றை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். குறிப்பாக வடக்கு மக்களுக்கு அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கான சக்தி எமது ஜனாதிபதிக்கே இருக்கின்றது. இதனை விட தீர்வை வழங்க வேண்டும் என்ற கடப்பாட்டுடனேயே அவர் செயற்படுகின்றார்."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

"இலங்கையில் ஏனையவரோடு இணைந்து வாழ்வதற்கு தாம் தயார் என்ற சமிக்ஞையை வெளிப்படுத்துவதற்கு வடக்கு மக்களுக்கு முதற் தடவையாக அரியதொரு வாய்ப்பு கிடைத்துள்ளது. இதை உரிய வகையில் பயன்படுத்த வேண்டும்.

இதற்கான சமிக்ஞையை தெற்கு மக்கள் ஏற்கனவே வெளிப்படுத்தியுள்ளனர். வடக்கு அபிவிருத்தியையோ, யாழ். தேவி அனுப்பப்பட்டதையோ அவர்கள் குறை கூறவில்லை. வடக்குக்கு ஏன் இவ்வளவு நிதி ஒதுக்குகின்றீர்கள் எனக் கேள்வி எழுப்பவில்லை. மாறாக மகிழ்ச்சி தெரிவித்தனர். வடக்கு மக்கள் சந்தோஷமாக வாழவேண்டும் என தெற்கு மக்களுக்கு அக்கறை இருக்கிறது. தனது மூன்றாவது பதவி காலத்தில் இதை செய்வதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார்."– என்றும் அவர் தெரிவித்தார்.

முதலில் இனங்களுக்கிடையில் நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும். அதேபோல், அரசியல் நாகரிகத்துடன் முடிவுகளை எடுக்கும் அரசியல் கலாசாரமே அவசியம். இதற்கான சிறந்த அடித்தளத்தை கூட்டமைப்பால் இடமுடியும் என நினைக்கிறேன். நல்லிணக்கம் இன்றி முன்னோக்கி நகர முடியாது. எனவே, மூன்றாவது பதவிக்காலத்தில் இலங்கையை உலகின் உச்சத்துக்கே கொண்டு செல்வதற்கு ஜனாதிபதி நிச்சயம் நடவடிக்கை எடுப்பார்"– என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற)

## தபால் மூல வாக்கெடுப்பில் கடுமையான விதி மீறல்கள்

### குற்றஞ்சாட்டுகின்றது 'கபே'

கொழும்பு, டிசெ.25

தபால் மூல வாக்கெடுப்பின் போது கடுமையான தேர்தல் விதி மீறல்கள் இடம்பெற்றுள்ளன என்று 'கபே' முறைப்பாடு செய்துள்ளது.

தபால் மூல வாக்கெடுப்பு நேற்று முன்தினம் நடைபெற்று முடிவடைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் தபால்மூல வாக்களிப்பு நடைபெற்ற சமயம் அரச, தனியார் ஊடகங்களில் ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வு நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்பட்டது என கபேயின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

"இவ்வாறு ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வு நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்பட்டமை கடுமையான தேர்தல் விதி மீறலாகும். இது தொடர்பில் தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நேரடி ஒளிபரப்பை நிறுத்த வேண்டும் அல்லது வேறும் ஒரு நாளில் தேர்தல் விஞ்ஞாபன வெளியீடு மேற்கொள்ளப்பட வேண்டுமென தேர்தல் ஆணையாளரிடம் கோரப்பட்டது. ஐந்து லட்சத்துக்கும் அதிகமானவர்கள் வாக்களிப்பில் பங்கேற்கும் நேரத்தில் இவ்வாறு நேரடி ஒளிபரப்புச் செய்வது கடுமையான தேர்தல் விதி மீறலாகும்."– என்று தெரிவித்துள்ளார்.

"தபால் மூல வாக்கெடுப்பு நடைபெறும் தினத்தில் அரச, தனியார் ஊடகங்களில் ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனம் பற்றிய விவரங்கள் நேரடியாக ஒளிபரப்புச் செய்வது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. மொனராகல, பதுளை, அம்பாந்தோட்டை, கேகாலை, இரத்தினபுரி உள்ளிட்ட மாவட்டங்களில் தபால் மூல வாக்கெடுப்பு நடைபெறும் நிலையங்களுள் மற்றும் அதற்கு வெளியே கடுமையான தேர்தல் விதி மீறல்கள் இடம்பெற்றன."– என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

"ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டது முதல் இதுவரையில் 459 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. 2005 மற்றும் 2010ஆம் ஆண்டுகளை விடவும் இம்முறை தேர்தலில் அதிகளவு வன்முறைகளும் விதி மீறல்களும் இடம்பெற்றுள்ளன"– என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

## போர்க்குற்றம் பற்றி பேச அரசுக்கு அதிகாரமில்லை

### சம்பிக்க ரணவக்க கூறுகின்றார்



கொழும்பு, டிசெ.25

மக்ஸ்வெல் பரணகம ஆணைக்குழுவுக்கு போர்க்குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைகளை நடத்த அதிகாரம் வழங்கிய அரசுக்கு போர்க்குற்றம் தொடர்பில் பேச அதிகாரம் இல்லை என்று சாடியுள்ளார் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் செயலாளர் பாட்டலி சம்பிக்க ரணவக்க. இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

"ஜனாதிபதியும் அரசும் படையினரை தனிமைப்படுத்தி ஐக்கிய நாடுகள் சபையின் முன்னால் காட்டிக் கொடுத்துள்ளன. பரணகமவின் குழுவுக்கு சர்வதேச நாடுகளை சேர்ந்தவர்கள் இணைக்கப்பட்டமையானது, அதனை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தியமைக்குச் சமனாகும். மைத்திரிபால சிறிசேனவை பொறுத்தவரை, போர்க்குற்றம் தொடர்பில் உள்நாட்டு விசாரணைகள் நடத்தப்படும். இதன் போது குற்றம் நிரூபிக்கப்படுமானால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்"– என்று தெரிவித்துள்ளார். (ற)

## சிரேஷ்ட பிரஜைகளின் வட்டிக்கு வருமான வரி நீக்கம்

கொழும்பு, டிசெ.25

60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரசைகளின் வட்டி வருமானம், வருமான வரியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை 2015 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரவுள்ளதாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வரவு–செலவுத் திட்ட யோசனையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டிருந்தது என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய சிரேஷ்ட பிரசைகள் அரச வங்கிகளில் வைப்பிலிட்டுள்ள 2.5 மில்லியன் ரூபா வரையான நிலையான வைப்பீடுகளுக்காக மாதாந்த வட்டி வருமானமாக 25 ஆயிரம் ரூபா கிடைக்கும் வகையில் 12 வீத வட்டி ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து வழங்கப்படவுள்ளது.

அதற்கான வசதிகளை பெற்றுக் கொள்வதற்காக உரிய வங்கிகளுடன் தொடர்புகொண்டு வினவுமாறு தகைமையுள்ள சிரேஷ்ட பிரசைகளிடம் நிதி அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது. (ற)

## மைத்திரி பரப்புரை மேடை மீது பொலிஸார் பார்த்திருக்க சூடு

### கடமை தவறிய பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் பொலிஸ் பேச்சாளர்

கொழும்பு, டிசெ. 25

பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் பரப்புரை மேடை மீது, பொலிஸார் பார்த்திருக்க, இனந்தெரியாத குழுவினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

தன்னியக்க இயந்திரத் துப்பாக்கியைப் பயன்படுத்தியே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் பரப்புரைக் கூட்டத்துக்காக வெல்லம்பிட்டியில் மேடை அமைக்கும் பணிகள், நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றன. இதன் மீது நேற்று அதிகாலை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன, வெல்லம்பிட்டியில் நேற்று மாலை பரப்புரை மேற்கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அவருடன் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் பங்கேற்பார் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்குரிய ஆயத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், அங்கு சென்ற ஆயுததாரிகளே தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

சில வாகனங்களில் வந்த குழுவொன்றில் இருந்த ஒருவரே, தன்னியக்க துப்பாக்கியைப் பயன்படுத்தி, துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார். இதன் போது பரப்புரை மேடையின் கூரைக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது. இதேவேளை– துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில், பொலிஸார் கடமையில் இருந்துள்ளனர். அதற்கு மேலதிகமாக ரோந்து செல்லும் பொலிஸ் வாகனமும் அங்கு நிறுத்தப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டு தப்பிச்செல்லும் வரை அங்கிருந்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

எனவே குறித்த மேடை அமைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்த பொலிஸாருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

கடமையை நிறைவேற்றத் தவறிய மற்றும் குற்றச் செயலில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கு உடந்தையாக இருந்தமை தெரிய வரும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ற–5)

# தொடர்ச்சிகள்

## அடிதடி

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவர்களை அமைச்சர் விமல்வீரவன்ஸவுக்குச் சொந்தமான அமைச்சின் வாகனத்தில் கொண்டு வந்து இறக்கியுள்ளனர். இதன் போது அமைச்சர் விமல் வீரவன்ஸவின் செயலாளரும் சம்பவ இடத்தில் இருந்துள்ளார். கொண்டு வந்து இறக்கப்பட்ட குழுவினர், சிறிகொத்தா முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆரம்பத்தில் அவர்கள் கோஷமெழுப்பினர். ரணில் – மைத்திரி ரகசிய ஒப்பந்தத்துக்கு எதிராக அவர்கள் கோஷமெழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன் போது பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுப்படுத்தாமல் பேசாமல் இருந்தனர். அதனையடுத்து ஐக்கிய தேசியக் கட்சியினர் பதிலுக்கு விமல் – திஸ்ஸ ரகசிய ஒப்பந்தம் என்ற பதாகையைப் பிடித்துக் கொண்டு கோஷமெழுப்பினர். இரு தரப்பினரும் மாறி மாறி கோஷமெழுப்பிக் கொண்டிருந்த போது, ஒரு கட்டத்தில் மோதல் வெடித்தது. ஆரம்பத்தில் ஒருவரை ஒருவர் கடுமையாகத் தாக்கினர். கொண்டு வந்த பதாகைகளை கிழித்தெறிந்து விட்டு அதன் 'ரீப்பைக்' கட்டைகளால் தாக்குதல் நடத்தினர். பொலிஸார் இருதரப்பினரையும் சமாதானப்படுத்த முயன்ற போதும் முடியவில்லை. ஒரு கட்டத்தில் கலகமடக்கும் பொலிஸார் கொண்டு வரப்பட்டனர். அவர்களாலும் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

மேலும் தாக்குதல் தீவிரமடைந்ததால் சிறிகொத்தாவூடான போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டது. ஆனாலும் இரு தரப்பினரும் தொடர்ந்தும் மோதலில் ஈடுபட்டனர். கல்வீச்சு, போத்தல் வீச்சு என்று மோதல் நீண்டு சென்றது.

இந்தத் தாக்குதலில் சிறிகொத்தா வளாகத்திலிருந்த கண்ணாடிகள் நொருங்கியது. அத்துடன் சிறிகொத்தாவின் முன்பாக இருந்த புத்தரும் போத்தல் தாக்குதலுக்குள்ளானார். மோதலை முடிவுக்கு கொண்டு வருவதற்காக விசேட அதிரடிப்படையினர் களமிறக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து மதியம் 12.30 மணியளவில் நிலைமை சீராகியது.

இந்தத் தாக்குதலுக்கு மூலகாரணமான, அமைச்சர் விமல் வீரவன்ஸவின் செயலாளரையும், தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியத்தின் செயலாளருமான வசந்த பண்டாரவையும் கைது செய்யுமாறு ஐ.தே.கவினர் கோரிய போதும் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை.

(ந–5)

## வடக்கில்

வடக்கின் 5 மாவட்டங்களிலும் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கிலுள்ள படைமுகாம்கள் மற்றும் அரச திணைக்களங்களிலும் தபால்மூல வாக்களிப்பின் போது முறைகேடுகள் இடம்பெற்றதாக இதுவரையில் எதுவித முறைப்பாடுகளும் பதிவு செய்யப்படவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமையும், நேற்றுப் புதன் கிழமையும் நாடளாவியரீதியில் இடம்பெற்றது. வடக்கில் இதன் போது அரச அதிகாரிகள் 25 ஆயிரத்து 930 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். இவர்களுக்கு மேலதிகமாக வடக்கிலுள்ள முப்படையினர் மற்றும் சிவில் பாது காப்பு படையினரும் வாக்களித்திருந் தனர்.

வடக்கிலுள்ள சகல படைமுகாம்களிலுமே இந்த முறை தபால் வாக்களிப்பின் போது அதிகாரிகள் முழு நேரம் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வடக்கின் 5 மாவட்டங்களின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் மற்றும் கொழும்பிலிருந்து வருகை தந்த அதிகாரிகள் இணைந்து தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்னர்.

தீவிரமான கண்காணிப்பில் இடம்பெற்ற வடக்கு தபால் மூல வாக்களிப்பில் எதுவித முறைகேடுகளும் இடம்பெறவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுளது.

இதேவேளை வடக்கின் 5 மாவட்டங்களிலுமே சராசரியாக 75 சதவீதத்துக்கு மேல் வாக்குப் பதிவு இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

நாளை வெள்ளிக்கிழமை, தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ள உத்தியோகத்தர்கள், பொலிஸாருக்கான வாக்குப் பதிவு இடம்பெறவுள்ளதுடன், இந்தச் சந்தர்ப்பங்களின் போது வாக்களிக்காதவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி அந்தந்த மாவட்டச் செயலகங்களில் தங்க ளின் தபால்மூல வாக்கைச் செலுத்த லாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ந–5)

## மஹிந்த

இலங்கைக் குடிமகனை ம், எந்தவொரு சர்வதேச நீதிமன்றத்து கோ அல்லது விசாரணைக்கோ உட் த்த அனுமதிக்கப் போவதில்லை. இல ங்கையில் முழுமையான அரசியல் மறு ரமைப்பு, புதிய அரசியல் கலாசாரம் ஆகியவற்றுடன் நாடு செழிப்பாக இருக் த் தேவையான நடவடிக்கைகள் எடுக்க டும். – என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல் தீர்வு இல்லை

நாட்டில் தற்போதைய விவாதப் பொருளாகவுள்ள, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குதல் குறித்து அவரது தேர்தல் அறிக்கை வெளிப்படையாக எதையும் தெரிவிக்கவில்லை. நாடாளுமன்றத்தின் பலம் கூட்டப்படும். மாறாக நாட்டுக்கு புதிய அரசியல் சாசனம் ஒன்று உருவாகும் போது, தேர்தல் நடைமுறைகள், ஜனாதிபதி பதவி, போன்ற பல விடயங்கள் கவனத்தில் எடுக்கப்படும் என்றும் மேலோட்டமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையில் இருந்து வரும் 1978 ஆம் ஆண்டு ஏற்படுத்தப் பட்ட அரசியல் சாசனச் சட்ட அமைப் புக்கு மாறாக மக்களின் விருப்பங்களை பிரதிபலிக்கும் வகையில் ஒரு அரசியல் சாசனத்தை ஓராண்டு காலத்துக்குள் நிறைவேற்ற எண்ணம் உள்ளது என்பது மட்டுமே தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதிகாரப் பரவலாக்கம், நீடித்திருக்கும் இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு, சிறுபான்மை மக்களின் நலன்கள் போன்றவை குறித்து ஜனாதிபதியின் தேர்தல் அறிக்கையில் எதுவும் சொல்லப்படவில்லை என்று பி.பி.சி செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

(ந–5)

## தமிழ்

இறுதி முடிவை அறிவிக்காத நிலையில், அதற்கு இன்னும் சில நாள்கள் எடுக்கலாம் என்று அந்தக் கட்சியின் உயர் பீட உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையிலேயே ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"முஸ்லிம் காங்கிரஸின் முக்கிய கோரிக்கைகளை இன்னும் சில நாள்களில் அரசு நிறைவேற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. கட்சிக்கு வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் நிறை வேற்றுவதில் அரச தரப்பினரிடம் பின்னடைவு காணப்பட்டால் எதிரணி வேட்பாளரை ஆதரிக்க வேண்டிய நிலை ஏற்படும்"– என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று புதன்கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம், கட்சியின் செயலாளர் ஹசன் அலி உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கிடையே சந்திப்பொன்று நடந்துள்ளது. அதில் கரையோர மாவட்டம், மன்னார் சிலாவத்துறையில் தனியாருக்கு சொந்தமான காணியை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள கடற்படை முகாமை அகற்றுவது உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் மேலும் சில முக்கிய விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

குறித்த கடற்படை முகாமை அகற்றுவது தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் பேசுவதாகவும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் பாதுகாப்புச் செயலருக்கும் இடையில் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்வதாகவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தேர்தல் தொடர்பில் நிதானமாகவும் சாதுரியமாகவும் நடந்துகொள்ள வேண்டும் என கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கூறியுள்ள ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாத் பதியுதீன் போல் அவசரப்பட்டு அல்லல்பட வேண்டிய அவசியம் முஸ்லிம் காங்கிரஸுக்கு இல்லை – என்றும் தெரிவித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ந–10)

## ஐ.நாவுக்கு

ஐ.நா. விசாரணையை அனுமதிக்கப் போவதில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார். அது தொடர்பில், ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூனிடம், இன்னர் சிற்றி பிரஸ் கேள்வி எழுப்பியது.

அதற்குப் பதிலளித்த பொதுச் செயலரின் பேச்சாளர், "ஐ.நாவுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது உறுப்பு நாடுகளின் கடமை யாகும். அதனை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் எப்போதும் கூறி வந்திருக்கிறார் ஐ,நா. பொதுச் செயலர் பான் கீ மூன்"– என்று தெரிவித்தார்.

(ந–5)

## நேற்றும்

அத்துடன் ஆளுங்கட்சியின் இரு பிரதி அமைச்சர்கள் இன்று பொது எதிரணிக்கு தாவவுள்ளனர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய கொழும்பு இணை அமைப்பாளரும், தனியார் முதலீட்டு மற்றும் ஊக்குவிப்பு பிரதி அமைச்சருமான பைஸர் முஸ்தபா மற்றும் உயர் கல்வி பிரதியமைச்சர் நந்தமித்ர ஏக்கநாயக்கா ஆகியோரே பொது எதிரணிக்கு இன்றையதினம் தாவவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாண சபையின் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இரு மாகாண சபை உறுப்பினர்கள், அநுராதபுரத்தின் ஆளும் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்கள் 18 பேர் அடங்கலாக 20 பேர் பொது எதிரணியில் நேற்று உத்தியோகபூர்வமாக இணைந்துள்ளனர்.

(ந–5)

## அதிகாரிகளை

எதிர்வரும் ஜனவரி 2 ஆம் திகதி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பரப்புரை நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளார். அதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன். தேர்தல் பரப்புரைக்காக யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பயண ஒழுங்குகள், பரப்புரைக் கூட்டத்துக்குரிய ஒழுங்குகள் என்பன வடக்கு மாகாண ஆளுநரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. அதற்காக, மாகாணத் திணைக்களத்தின் கீழ் பணியாற்றும் அரச அதிகாரிகளை அவர் பயன்படுத்தி வருகின்றார்.

நேற்றுக் காலை, துரையப்பா விளையாட்டரங்குக்குச் சென்ற வடக்கு மாகாண ஆளுநர், அங்கு பரப்புரை கூட்ட ஏற்பாடுகள் தொடர்பில் அவதானித்துள்ளார் என்றும், அதன்போது அரச அதிகாரிகளையும் அழைத்துச் சென்றுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே வாழ்வின் எழுச்சித் திட்டப் பிரதிப் பணிப்பாளர் ஆர்.ரகுநாதன், வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நடத்திய பரப்புரைக் கூட்டத்தில் பங்கெடுத்திருந்தார். அரச அதிகாரிகள் அரசியலில் ஈடுபடுவதை, வடக்கு மாகாண ஆளுநர் இதனூடாக ஊக்குவித்து வருவதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

(ந–5)

## யாழ். வந்தன

அதனடிப்படையில் தற்போது, வாக்காளர் அடையாள அட்டைகளை வீடு வீடாக விநியோகிக்கும் நடவடிக்கைகள் தபால் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தநிலையில் ஜனாதிபதித் தேர்தலின் போது பயன்படுத்தப்படவுள்ள வாக்குச் சீட்டுப் புத்தகங்கள், யாழ்.மாவட்டச் செயலக தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் காலை கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளன. அவை தற்போது யாழ்.மாவட்டச் செயலகத்தில் பொலிஸ் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன.

(ந–5)

## வடக்கு

"ஐரோப்பிய நாடுகளோ அல்லது வேறு எந்த நாடுகளோ கோரினாலும் கூட வடக்கில் இருந்து படையினரைக் குறைக்க மாட்டேன். வடக்கில் உள்ள படையினரின் எண்ணிக்கையை பாதியாகக் குறைக்கும்படி வெளிநாடுகள் தொடர்ந்தும் கோரி வருகின்றன.

ஆனால் அதைச் செய்வதற்கு நானும் எனது அரசும் மறுத்து வருகின்றோம். வடக்கில் இராணுவம் முக்கிய பங்காற்றி வருகிறது. வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றினால், நாட்டைப் பிரிக்கலாம் என்று சிலர் நினைக்கின்றனர்"– என்றும் அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார்.

(ந–5)

## கட்டாயப்படுத்தி

இதுவே யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட முதலாவது முறைப்பாடாகும்.

ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெறுவதற்கு வாழ்த்துத் தெரிவிக்குமாறு, யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு, துணைவேந்தரால் சுற்றறிக்கை அனுப்பட்டுள்ளது. குறித்த சுற்றறிக்கையில் கட்டாயம் கையொப்பம் இடுமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதற்கு எதிராக, யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட தேர்தல்கள் திணைக்களத்தில் நேற்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. அரச உத்தியோகத்தர்களிடம் இவ்வாறு வற்புறுத்தி கையெழுத்து வாங்குவது தொடர்பில் நேற்று பதிவு செய்யப்பட்ட முறைப்பாடு உடனடியாகவே தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ந–5)

# விளையாட்டு

## ஆட்டங்களின் முடிவுகள்

கரணவாய்,டிசெ 25

கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நேற்று முன் தினம் முதல் ஆரம்பமாகி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் பங்குபற்றி வெற்றியீட்டிய அணிகளின் விவரம் வருமாறு:

வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்துக்கும் பொலிகை பாரதி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையிலான ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் 2:0என்ற அடிப்படையிலும், நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகத்துக்கும் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகத்துக்குமிடையிலான ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக் கழகம் 2:0 என்ற வகையிலும், அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்துக்கும்கரணவாய்கொலின்ஸ் விளையாட்டுக் கழகத் துக்கும் இடையிலான ஆட்டத்தில் 2:1 என்ற அடிப்படையில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்றன.

கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகத்துக்கும் இலகடி சிவகுமரன் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையிலான ஆட்டத்தில் 2:0 என்ற அடிப்படையில் சிவானந்தா விளையாட்டுக்கழகமும், கொற்றாவத்தை அன்பாலயம் விளையாட்டுக் கழகத்தை 5:0 என்ற கோல் அடிப்படையில் அல்வாய் மனோக்ரா விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறின. (த–108)

## துரையப்பாவிளையாட்டரங்கு 2015 மே மாதம் பாவனைக்கு

### புனரமைப்புப் பணிகள் துரித கதியில்

யாழ்ப்பாணம், டிசெ. 25

யாழ். துரையப்பா விளையாட்டு மைதானம் எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு மே மாதத்துக்கு முன்னதாக நவீன வசதிகளுடன் கூடிய புனரமைப்புப் பணிகள் யாவும் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டு மீண்டும் பாவனைக்குக் கையளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தின் தேவையாகக் காணப்படும் யாழ். துரையப்பா மைதானத்தின் புனரமைப்புப் பணிகள் கடந்த நவம்பர் மாதம் 6 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்த மைதானத்தை நவீன வசதிகள் உள்ளடங்கும் வகையில் புனரமைத்து யாழ்ப்பாணத்திலுள்ள விளையாட்டு வீரர்களுக்கு மீண்டும் வழங்க வேண்டும் என விடுக்கப்பட்டுள்ள கோரிக்கையின் அடிப்படையில் இந்திய அரசு வழங்கியுள்ள 145 மில்லியன் ரூபா நிதியுதவியில் புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

புனரமைப்புப் பணிகளில் குறிப்பாக மைதானத்துக்கான சுற்று மதில் அமைத்தல், 400 மீற்றர் ஓட்டப்பாதை அமைத்தல், நுழைவாயில்கள் புனரமைப்பு, மலசலகூட கட்டடத்தொகுதி அமைத்தல், குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்தல், கழிவகற்றல் வேலைகள், புற்தரைக்கு நீர்பாய்ச்சும் கருவிகள் பொருத்துதல், மின் விளக்கு வசதிகள் ஏற்படுத்தல், பார்வையாளர் அரங்குக்கான கூரைகள் புனரமைத்தல் வீரர்கள் பயிற்சிகளில் ஈடுபடும் வசதிகள் உள்ளிட்ட பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

கழகங்கள் நடத்தும் விளையாட்டுப்போட்டிகள் தொடக்கம் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகள், உதைபந்தாட்டப் போட்டிகள், ஹொக்கிப் போட்டிகள், களியாட்ட நிகழ்வுகள் என்பன இந்த மைதானத்தில் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

## ரஞ்சியில் கலக்கும் யுவராஜ்

மகாராஸ்ரா அணியுடனான ரஞ்சி கிண்ணத்துக்கான பி பிரிவு லீக் ஆட்டத்தில் யுவராஜின் அதிரடி சதத்தால் பஞ்சாப் அணி வலுவான முன்னிலை பெற்றது.

புனேயில் நடந்து வரும் இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி முதலில் பந்துவீசியது.

மகாராஸ்ரா முதல் இன்னிங்சில் 210 ஓட்டங்களுக்கு சுருண்டது.

அடுத்து களமிறங்கிய பஞ்சாப் அணியின் யுவராஜ் சிங் அதிரடியாக ஆடி 136 ஓட்டங்களைக் குவிக்க (160 பந்து, 25 பவுண்டரி, 1 சிக்சர்), அணி முன்னிலை பெற்றுள்ளது. (த–ரி)





## கிராண்ட் மாஸ்டரான தமிழன்

இந்தியாவைச் சேர்ந்த 15 வயது அரவிந்த் சிதம்பரம் செஸ் கிராண்ட் மாஸ்டர் ஆகியுள்ளார். அவருக்கு ஆனந்த் உள்ளிட்ட பல செஸ் பிரபலங்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

ஹங்கேரியில் நடைபெற்று வரும் 16 வயதுக்குட்பட்ட உலக இளைஞர் ஒலிம்பியாட் போட்டியின் 9 ஆவது சுற்றில் ரொமானியாவை சேர்ந்த மிஹ்னியா கொஸ்டாச்சியை 59 நகர்த்தல்களில் தோற்கடித்தார் அரவிந்த். இதைத்தொடர்ந்து 2500 புள்ளிகளைத் தாண்டினார். இதனால் அவர் கிராண்ட் மாஸ்டர் ஆனது உறுதி செய்யப்பட்டுள்ளது.

உலகச் சம்பியன் விஸ்வநாதன் ஆனந்த் இதுபற்றி கூறும்போது, வாழ்த்துக்கள் அரவிந்த் சிதம்பரம். கிராண்ட் மாஸ்டர் கிளப்புக்கு உங்களை வரவேற்கிறேன். அரவிந்த் பெரிய வீரர்கள் சிலரைத் தோற்கடித்துள்ளார். சென்னையில் அவரை சந்திக்க ஆர்வமாக உள்ளேன் என்று பாராட்டியுள்ளார்.

பிரபல செஸ் நிபுணரும் வீராங்கனையுமான சூசன் போல்கர், அரவிந்தால் மிகவும் பெருமைப் படுகிறோம். அருமையான பணி. வாழ்த்துக்கள் என்று கூறியுள்ளார். அரவிந்தின் பயிற்சியாளர் ஆர்பி கூறும்போது, அரவிந்த் வெளிநாட்டுப் போட்டிகளில் ஆடுவதற்காக உதவி செய்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். அரவிந்தை நினைத்து பெருமைப் படுகிறேன் என்றார். (த–ரி)

## சச்சினை பின் தள்ளி கோஹ்லி சாதனை

இந்திய கிரிக்கெட் அணியின் துணைத் தலைவர் விராட் கோஹ்லியை டுவிட்டரில் 48 லட்சத்து 70 ஆயிரத்து 190 பேர் பின் தொடர்கிறார்கள்.

ஒக்டோபர் 2 ஆம் திகதி கோஹ்லி தனது டுவிட்டர் கணக்கை தொடங்கினார். இந்த கணக்கை இதுவரை 48,70,190 பேர் பின் தொடர்கிறார்கள்.

இதன்மூலம், விளையாட்டுத் துறையில் இந்திய நட்சத்திர வீரராக திகழ்ந்த சச்சின் டெண்டுல்கரை (48,69,849) பின்னுக்குத் தள்ளி முதல் இடத்தை பிடித்துள்ளார் கோஹ்லி.

டுவிட்டர் தளத்தில் இந்திய அணித் தலைவர் டோனி 33,27,033 ரசிகர்களுடன் மூன்றாமிடத்தில் உள்ளார்.

விரேந்திர ஷேவாக் நான்காவது இடத்திலும், யுவராஜ் சிங் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

விளையாட்டுத் துறையில் முதல் 10 இடங்களில் 9 இடத்தை கிரிக்கெட் வீரர்கள் ஆக்கிரமித்துள்ளனர். (த)



## ரோஹித்தை பார்க்க சிரிப்புத்தான் வந்தது

பிரிஸ்பேன் டெஸ்ட்டின் 3ஆம் நாள் ஆட்டத்தில் நான் களமிறங்கியபோது ரோஹித் சர்மா என்னைப்பார்த்து சற்று மேலதிகமாகக் கேலி செய்தார். ஆனால் இது எனக்கு நல்ல முடிவையே பெற்றுத் தந்தது என ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

பிரிஸ்பேன் டெஸ்ட் வெற்றிக்குப் பின்னர் வெற்றிக்குக் காரணமாக இருந்த முக்கிய வீரர் என்ற வகையில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆஸ்திரேலியா அணி 247–6 என்று திணறிக்கொண்டிருந்த போது நான் களமிறங்க என் மீது இந்திய வீரர்கள் சிலர் வார்த்தைக் கணைகளைத் தொடுத்தனர். குறிப்பாக ரோஹித் சர்மா கொஞ்சம் அதிகமாகவே வாய் வார்த்தையில் ஈடுபட்டார். இது இந்திய அணிக்கு எதிராகத் திரும்பியது. இந்திய வீரர்களின் இந்த நடத்தை ஆட்டத்தை விட்டு மனதைக் கொஞ்சம் விலக்கி வைக்கச் செய்தது. இது ஒரு நல்ல விடயம் ஏனெனில் நான் அணியை நினைத்து தயங்குவதை அது தவிர்க்கச் செய்தது. நான் எனது பாணியில் ஆடத் தொடங்கினேன். கேலி என்பது ஆட்டத்தில் இருக்க வேண்டிய ஒன்று. ஆனால் கேலியில் முழு ஆட்டமும் இருக்கக் கூடாது. எங்களைப் பொறுத்தவரை கேலி ஆட்டத்தின் ஒருபகுதி. ஆனால் அது அவர்களிடமிருந்து ஆட்டத்தைப் பறித்துவிட்டது. இந்திய அணியினர் கேலியில் கொஞ்சம் கூடுதலாகச் சென்று ஆட்டத்தின் போக்கை மறந்து விட்டனர் அவ்வளவே.



ரோஹித்சர்மா குறிப்பாக கொஞ்சம் அதிகமாக வாய் வார்த்தைகளில் ஈடுபட்டார். தொடக்கத்தில் பதில் கூறிக்கொண்டிருந்தேன் ஒரு கட்டத்திற்குப் பிறகு அவரைப்பார்த்து சிரிக்க தொடங்கினேன். அவருடைய துடுப்பாட்டம் எங்களிடம் எடுபடாமல் போனது, அதனால் அவர் வெறுப்பில் இருந்திருக்கலாம். என்றார். (த–ரி)



# மீண்டும் வந்தார் பூபதி

சென்னை ஓபன் ரென்னிஸ் போட்டியில் இரட்டையர் பிரிவில் மகேஸ் பூபதி–சகெத் மைனெனி, ஜீவன் நெடுஞ்செழியன்– ஶ்ரீராம் பாலாஜி ஜோடிக்கு நேரடியாக களம் இறங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

20 ஆவது சென்னை ஓபன் சர்வதேச ரென்னிஸ் போட்டி நுங்கம்பாக்கத்தில் அடுத்த ஆண்டு (2015) ஜனவரி 5ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை நடக்கிறது. உலகின் 4–ஆம் நிலை வீரர் நடப்புச் சம்பியன் வாவ்ரிங்கா (சுவிட்சர்லாந்து), பெலிசியானோ லோப்ஸ் (ஸ்பெயின்) டேவிட் காபின் (பெல்ஜியம்) உள்பட முன்னணி வீரர்கள் கலந்து கொள்கிறார்கள்.

இதில் ஒற்றையர் பிரிவில் இந்திய வீரர்கள் சோம்தேவ் வர்மன், ராம்குமார் ராமநாதன் ஆகியோர் நேரடியாக பிரதான சுற்றில் விளையாட வைல்ட் கார்ட் மூலம் அனுமதி அளிக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் இரட்டையர் பிரிவில் 40 வயதான மூத்த வீரர் மகேஸ் பூபதி, முதல் முறையாக 27 வயதான சகெத் மைனெனியுடன் இணைந்து களம் இறங்குகிறார். இந்த ஆண்டில் மார்ச் மாதம் நடந்த மியாமி மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டியில் பங்கேற்ற மகேஸ்பூபதி அதன் பிறகு களம் காணாததால் ஓய்வு பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில் மகேஸ் பூபதி மீண்டும் களம் திரும்ப இருக்கிறார். 52 இரட்டையர் பட்டங்களை வென்று இருக்கும் மகேஸ்பூபதி 2011ஆம் ஆண்டில் சென்னை ஓபன் இரட்டையர் பட்டத்தை லியாண்டர்பயஸுடன்இணைந்து 5 ஆவது முறையாக வென்று இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதேபோல் நம்பிக்கை நட்சத்திரங்களாக உருவெடுத்து வரும் தமிழகத்தை சேர்ந்த ஜீவன் நெடுஞ்செழியன்– ஶ்ரீராம் பாலாஜி ஜோடிக்கும் இரட்டையர் பிரிவில் வைல்டு கார்டு மூலம் வாய்ப்பு அளிக்கப்பட்டு இருக்கிறது. (த–ரி)



# டோனியின் 10 ஆண்டு கிரிக்கெட் வாழ்க்கை

உலக துடுப்பாட்ட வாழ்வில் தனது 10 ஆண்டுகள் பயணத்தைப் பல்வேறு சாதனைகளுடன் நிறைவு செய்தார் இந்திய அணியின் நட்சத்திரத் தலைவர் டோனி.

கடந்த 2004 டிசெம்பர் 23 இல் பங்களாதேஷுக்கு எதிரான சிட்டகொங் ஒருநாள் ஆட்டத்தில் தனது 23 ஆவது வயதில் இந்திய அணியில் அறிமுகமானார் டோனி. தற்போது 10 ஆண்டுகள் முடிந்து 11ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளார். இதுவரை 89 டெஸ்ட், 250 ஒருநாள், 50 20/20 ஆட்டங்களில் பங்கேற்றுள்ளார்.

**சாதனைகள்**

2007 இல் இந்திய 20/20 அணிக்கு தலைவரான இவர் முதல் தொடரிலேயே உலகக் கிண்ணம் வென்று தந்தார். 1983 இல் கபில்தேவ் சாதித்த உலகக் கிண்ணத்தை 28 ஆண்டுகளுக்குப் பின் 2011 இல் மீண்டும் சாதித்து இந்தியாவிற்குப் பெருமை சேர்த்தார். 2013 இல் மினி உலகக் கிண்ணத்தை வென்றதன் மூலம் ரசிகர்களின் பெரும் அபிமானத்தைப் பெற்று மிகப்பெரும் நம்பிக்கையான தலைவராக மாறினார்.

20/20, உலகக்கிண்ணம், மினி உலகக் கிண்ணம் என மூன்று தொடரிலும் கிண்ணம் வென்ற ஒரே தலைவர் டோனி தான். டெஸ்ட் (27 வெற்றி), ஒருநாள் (93வெற்றி) மற்றும் 20/20 (26வெற்றி) என, மூன்று துடுப்பாட்ட அணிக்கும் தலைவராக இருந்து அதிக வெற்றிகள் தேடித்தந்த முதல் தலைவர் இவர் தான்.

அதிக டெஸ்ட் ஆட்டங்களுக்கு தலைவராக இருந்த கங்குலியை (49) முந்திய டோனி (59) டெஸ்ட்டிலும் சாதனையைப் படைத்ததுடன் நின்றுவிடாமல் உலகளவில் 20/20 ஆட்டங்களில் அதிக வெற்றிகள் பெற்ற முதல் தலைவர் என்ற பெருமை பெற்றுள்ளார். அயர்லாந்தின் போர்டர்பீல்ட் (20 வெற்றி) அடுத்த இடத்தில் உள்ளார்.

இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசையில் 7 ஆவது இடத்தில் களமிறங்கிச் சதம் அடித்த ஒரே தலைவர் என்ற பெருமையும் டோனியையே சாரும். மூன்று வகை ஆட்டங்களிலும் இலக்குக் காப்பாளராக இருந்து அதிக இலக்குகள் சரிவுக்கு (டெஸ்ட்–285, ஒரு நாள்–306, 20/20–36) காரணமாக இருந்த இந்தியர் என்ற சாதனையும் பெற்றுள்ளார்.

இது தவிர, மிக வேகமாக டெஸ்ட் சதம் (93 பந்தில்) அடித்த இந்தியர், டெஸ்ட் இரட்டை சதம் (224 ஓட்டங்கள்) அடித்த இந்தியர் என்ற பெருமை பெற்ற டோனி, டெஸ்ட் தலைவராக பங்கேற்ற முதல் 11 டெஸ்டில் 8 வெற்றி, 3 சமநிலை செய்து எந்தத் தோல்வியையும் எதிர்கொள்ளாமல் சாதித்தார்.


தனது 10 ஆண்டுகால துடுப்பாட்டப் பயணத்தில் இந்தியாவுக்காக 11 டெஸ்ட் கிண்ணங்கள் 21 ஒருநாள் கிண்ணங்கள் 6 20/20 கிண்ணங்கள் என, மொத்தம் 38 கிண்ணங்கள் வென்று தந்துள்ளார். எதிர்வரும் உலகக்கிண்ண தொடருக்கு இந்திய அணியின் தலைவராக டோனி தொடர்வது அனைத்து அணிகளுக்கும் சற்று நடுக்கத்தினை ஏற்படுத்தத்தான் செய்கின்றது. (த–ரி)

# பவுன்சரில் அச்சுறுத்துவதை ஒருபோதும் நிறுத்தமாட்டேன்

எதிரணியை அச்சுறுத்த உளவியல் ரீதியான போர்முறை அவசியமானது என்று ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஜோன்சன் கூறியுள்ளார்.

பவுன்சிங் பேக் என்கிற புதிய டி.வி.டியில் வேகப்பந்து வீச்சின் உத்திகள் பற்றி ஜோன்சன் விளக்கியுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது:–



சில நேரங்களில் ஆடுகளங்களில் மோசமாகப் பேசி விடுகிறோம். சில நேரங்களில் நாம் பேசுவது துடுப்பாட்ட வீரர்களிடம் சிறிது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அவர்களுடைய கால் நகர்த்தல்களைப் பற்றி யோசிக்க வைக்கிறோம் இவை எல்லாமே மன உறுதியை தீர்மானிக்கும் விளையாட்டு. சில நேரங்களில் தொலைக்காட்சியில் பார்க்கும் போது ஒருவருக்கொருவர் கடுமையாக மோதிக் கொள்வது போல தோன்றும். ஆனால் நாங்கள் நடத்தை விதிமுறை களுக்கு உட்பட்டே இருக்க விரும்புகிறோம். சில நேரம், துடுப்பாட்ட வீரர்களிடம், உன் கால்கள் எங்கும் நகரவில்லை என்று கூறுவதன் மூலம் அதைப் பற்றி யோசிக்க வைக்கமுடியும். பிறகு அவர்களை நோக்கி பவுன்சர் வீசுங்கள். அப்போது அவர் உங்களைப் பற்றித்தான் நினைப்பார். இந்த விளையாட்டு எனக்கு மிகவும் பிடிக்கும். இது ஒருபோதும் நிற்காது என்று எண்ணுகிறேன் என்றார். (த–ரி)

# 5 வீரர்களுக்கு பாகிஸ்தான் எச்சரிக்கை


பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் அனுமதி பெறாமல் விளம்பரம் ஒன்றில் நடித்த 5 வீரர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் அப்ரிடி, முகமது இர்பான், வகாப் ரியாஸ், அன்வர் அலி, பஹத் ஆலம் ஆகியோருக்கு எதிராகவே நடவடிக்கை எடுக்கப்போவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இதற்காக ஐந்து வீரர்களிடமும் விளக்கம் கோரி நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பி உள்ளது. ஒரு வாரத்துக்குள் அவர்கள் விளக்கம் அளிக்குமாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விளக்கம் அளிக்காவிட்டால் 5 வீரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நிர்வாகி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அப்ரிடி பாகிஸ்தான் அணியின் 20/20 போட்டியின் அணித் தலைவராக உள்ளார். அடுத்த ஆண்டு நடைபெறும் உலகக்கிண்ணத்தோடு ஒருநாள் போட்டியில் இருந்து ஓய்வு பெறப்போவதாக அவர் ஏற்கனவே அறிவித்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)



DCM
யாழ். நகர்
A/L 2017
கலை, வர்த்தக தொழில் நுட்ப பிரிவுகள் ஆரம்பம்
ஜனவரி 03 சனி 8.00 am

நியூ சயன்ஸ் அக்கடமி
வதிரி, நெல்லியடி.

2017 G.C.E (A/L) கணித விஞ்ஞான பிரிவுகளுடன்
தொழில்நுட்பப் பிரிவுகளும் ஆரம்பம் 28.12.2014
அனுமதிகள் தற்போது வழங்கப்படுகின்றன

யாழ். முன்னணி ஆசிரியர்களும் வடமராட்சி முன்னணி ஆசிரியர்களும் இணைந்து

Physics J.சந்திரபிரகாசம் (SP) (யா/மத்திய கல்லூரி), S.சோதிலிங்கம் (New Science Hall)
Chemistry S.தங்கராசா (யா/ஹாட்லிக் கல்லூரி), K.சிவத்திரன் (New Science Hall)
Com.Maths K.அருளானந்தம் (யா/ஹாட்லிக் கல்லூரி), P.விமலநாதன் (யாழ். இந்துக் கல்லூரி)
Biology T.கெங்காதரன் (New Science Hall)
I.C.T V.சேந்தன் (யா/மெதடிஸ்த உயர்தர பெண்கள் பா.)
Geography A.அரியரத்தினம் (யா/நெல்லியடி மத்திய கல்லூரி)
Accounts சாந்தகுமார்

இயந்திரவியல் தொழில்நுட்பம்
செல்வச்சந்திரன் (யா/உடுப்பிட்டி A.M.C)
K.முரளிதரன் (எந்திரி)

உயர் தொழில்நுட்பம்
A. கோகுலராஜன் (யா/ஹாட்லிக் கல்லூரி)
ரமணன்

விஞ்ஞான தொழில்நுட்பம்
S. தங்கராசா (யா/ஹாட்லிக் கல்லூரி)
P. விமலநாதன் (யாழ். இந்துக் கல்லூரி)
K. குகனேசன் (யா/ஹாட்லிக் கல்லூரி)
A. கோகுலராஜன் (யா/ஹாட்லிக் கல்லூரி)
T. கெங்காதரன் (New Science Hall)
V. சேந்தன் (யா/மெதடிஸ்த உயர்தர பெண்கள் பாடசாலை.)

28.12.2014
காலை 8.00 மணி

குறிப்பு: வெளி மாவட்ட மாணவர்களுக்கான தனியான வகுப்புக்கள் சனி, ஞாயிறு நாள்களில் நடைபெறும்.

நியூ சயன்ஸ் அக்கடமி வதிரி, நெல்லியடி.

## டி.ஆர்.எஸ். முறையை மீண்டும் மறுக்கும் இந்தியா

நடுவர்களின் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யும் டி.ஆர்.எஸ். முறையை ஏற்றுக்கொள்ள இந்திய கிரிக்கெட் சபை மீண்டும் மறுப்பு தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் இரு டெஸ்ட்களில் சில முடிவுகள் இந்தியாவுக்கு பாதகமாகஅமைந்ததால் டி.ஆர்.எஸ். முறையை இந்திய கிரிக்கெட் சபை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முன்னாள் வீரர்கள் வலியுறுத்தினர்.

இது பற்றி இந்திய கிரிக்கெட் சபைச் செயலாளர் சஞ்சய் பட்டேல் நேற்று நிருபர்களிடம் கூறுகையில், நடைமுறையில் உள்ள தற்போதைய டி.ஆர்.எஸ். முறை ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் இல்லை. இதில் பந்து எந்த திசையில், எப்படி விலகி செல்கிறது என்பதை கண்டறியும் தொழில்நுட்பத்தை நாங்கள் எதிர்க்கிறோம். நாங்கள் சொல்லும் சில மாற்றங்களை ஐ.சி.சி. செய்து அது ஏறக்குறைய துல்லியமாக இருக்கிறது என்று உறுதியானால் மட்டுமே டி.ஆர்.எஸ். முறையை ஏற்றுக்கொள்வோம்' என்று கூறியுள்ளார். (த)

பிரத்தியேக வகுப்பு
இணைந்த கணிதம் - 2017
ஆரம்பம் : 03.01 2015 சனிக்கிழமை
பி.ப .30 மணி
இடம் : 442, கா கேசன்துறை வீதி,
யாழ் பாணம்.
ஆசிரியர் : திரு க. இலட்சுமணன்
(அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
O/L எழுதிய மாணவர்கள், உயர்கல்வி மாணவர்கள், தொழில்புரிவோருக்கானது
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் மூன்று மாதங்களிலேயே சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்.
யாழ்நகரில் சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு 1: 8.00 - 10.00 பிரிவு 2 : 10.00 - 12.00
பிரிவு 3 : 1.00 - 03.00 பிரிவு 4 : 3.00 - 05.00
எமது சங்கானை மற்றும் நெல்லியடி கிளைகளில் புதிய பிரிவுகள் ஆரம்பம் 27.12.2014
நெல்லியடியில்
1. காலை 8.00-10.00
2. காலை 10.00-12.00
3. மாலை 3.00-05.00
சங்கானையில்
1. காலை 8.00-10.00
2. காலை 10.00-12.00
3. மாலை 3.00-05.00
27.12.2014 இற்குமுன் பதிவுசெய்வோருக்கு புத்தகத்திற்கான கட்டணம் அறவிடப்படமாட்டாது.
SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்
021 320 3313
077 621 4567




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.